
1297
முத்தாரம்
ஆசிரியர்:
மு. கருணாநிதி

முத்துக்கள்

30 JUN 1958
MADRAS

இவ்விதழ் "முத்தாரத்திலே — எத்திசையும் தித்திக்கும் தமிழொலிக்கும் இந்த நேரத்தில்-தமிழ்பற்றி இரண்டு உயரிய ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிடுவது குறித்து பெருமை அடைகிறேம். பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை அவர்கள் 'மொழியாராய்ச்சியில் தப்பெண்ணங்கள்' குறித்தும், புலவர் குழந்தை அவர்கள் 'தமிழ்க் கோலே' குறித்தும் நற்கருத்துக்களைத் தந்திருக்கின்றனர்.

திராவிடத்தின் கடல் சொத்தான முத்துக்கள் நீருக்குள்ளிருந்து பாருக்குப் பயன்படும் விதத்தினை அழகுபட சித்தரிக்கும் கட்டுரை 'அறிவியல்' பகுதியில் இடம் பெறுகிறது.

மற்றும், மேல்நாட்டு வித்தகர் பலரின் எழுத்தோவியங்களை முத்தனைய செந்தமிழ்க் கருவூலங்களாகத் தந்திருக்கிறேம்—சுவையுங்கள்.

—ஆசிரியர்

ஏப்ரல்
ஆரம் : 2 58 முத்து : 7

செய்நன்றி இதுதானே?

கவிஞர் வாணிதாசன்

செய்நன்றி இதுதானே?—கோவை
சேம்மூக்குப் பைங்கிளியே!

கையார் வளைஒலிக்கக் கனிதந்து பால்தந்து
மேய்யில் அணைத்தணைத்து விரும்பி வளர்த்ததற்கு!

இரவினில் எனதன்பர் இருதோளின்மேல் சாய்ந்தே!
உரையாடி நான்களித்த ஒவ்வொரு சோல்லுமாய்ந்தே
விரைமலர் சாந்தணியும் விடலை பிரிவுணர்ந்தே
உரைக்கின்றாய் நாணமின்றி உயிர்போவதை மறந்தே!

மற்றவர் மறைவினில் சேவிசாய்க்கக் கூடாது
மறைவினில் கேட்டாலும் மனதோடே போடாது
உற்றதை சோல்வதே உயர்ந்தபண் பாகாதே
உப்பிட்ட வரைஎன்றும் மறக்கவே கூடாதே!

198986

சித்தார்த்தன் சிலை

மு. கருணாநிதி

கெண்டை விழி. கருவண்டு நிகர் கூந்தல். குங்கும வண்ணத்தின் குறுநகையைச் சிந்துகின்ற அந்தி வானத்துச் சிகப்பெல்லாம் அவள் இதழில்......கன்னத்தில்! தாங்குமோ அன்றித் தளர்ந்து வளையுமோ என்றெண்ணத் தோன்றும் வகையினிலே இடையழகும், இளமைப் பேரழகும் போட்டியிடும் பொற்பாவை. அலை

★ அட்டைப்படக் கதை ★

தோறும் அலைதோறும் வருகின்ற நுரைபோல அவள உதிர்க்கின்ற சொல்லில் எல்லாம் சுவை மணக்கும் தேன் துளிகள். நிலம் நோகும் என அஞ்சும் அவள் நெஞ்சம், நடையழகில் தெளிவாகும். சிப்பியிலே முத்து விளைகின்ற உண்மையினைப் பொய்யாக்கும் அவள் சிரிக்கின்றபோது தெரிகின்ற நிலவின் ஒளி! யாழினிலே குழலினிலே இனிய இசைதான் எழும் என்போர் மறைந்திருந்து அவள் பாட்டைக் கேட்டு "யார் சொன்னார்; யாழ் குழலில் பாட்டும் உண்டு" எனக் கருத்தை மாற்றிக் கொள்வார்.

அவன் பெற்ற பேறே அரும்பேறு என வாழ்த்தியது அவளைப் பெற்றவனை— உலகம்! "உனைப் பெற்றவரை வணங்குகின்றேன் தமிழே! உயிரே! ஓவியமே! உனைப் பிரிந்து ஒருக்கணமும் நில்லாது எந்தன் கூடு!" என உறுதி எடுத்துக் கொண்டு அருகிருந்தான். இலக்கியத்து எழிலெல்லாம் காவியத்துச் சுவையெல்லாம் அவளோடு வாழ்வதிலே காண்கின்றேன் எனப் பெருமை கொண்டிருந்தான்.

அத்தகையோன் எப்படித்தான் அவளைப் பிரிந்தான் என்று ஊரெல்லாம் வியப்பினிலே மூழ்கிவிட அவள் விழிகள் நீரூற்றாய் மாறிவிட நிலைமை யொன்று உருவாகித் தனியானாள்.

தேனமுதம் தெவிட்டியதோ — வானமுத வதனத்தை மறந்தானோ—ஏன் கிளியே! உனக்கிந்த இன்னலென்று ஊர்ப் பெண்கள் கேள்வி போட்டார்.

"உள்ளத்தை ஒப்படைத்தேன். உயிர் மூச்சு அவரென்று எண்ணிக் கிடந்தேன். பனித் துளியால் சுகம் பெற்ற மலர்மீது பாலைவனக் கடுங்காற்று வீசுமென்று நினைக்கவில்லை. இரு கிழமை அவர் உள்ளம் நிலையாக இருக்கவில்லை. அதனை அவர் பேச்சாலே உணர்ந்து கொண்டேன். இப்படியாகுமென்று அப்போது தெரியாது தோழி!" என அழுதாள் தமிழ்ப்பாவை.

"கலங்காதே! கண்ணீர் சிந்தாதே! வழியொன்று சொல்லுகின்றேன் கேள். ஆற்றுக்குத் தென்புறத்தில் அழகான சோலையிடையிருக்கின்ற புத்தரது கோயிலுக்குச் சென்று குறை சொல்லி முறையிட்டால் கொழுநன் திரும்பிடுவான். நிற்காதே போ!" என்றாள் உயிர்த் தோழி.

அங்ஙனமே அவள் சென்றாள். "அருள் வடிவே! அன்பின் பிழம்பே! செயற்கரிய செய்திட்ட சித்தார்த்தப் பெருமானே! போதி நிழலாலே உலகுக்குக் குளிர் தந்தாய்! இன்று உன் நிழலால் என் துயரம் போக்கிடுவாய்! அழகரசன்; என் ஆளன்; உயிர்த் துணைவன். 'பிரிவு'

எனும் வேதனையைத் தர மாட்டேன் எனச் சொன்ன என் அத்தான்—அவரில்லை என்னிடத்தில் இப்போது! எங்குற்றார்; ஏன் சென்றார்— என்ற சேதி தெரியாது இவ் வேழைக்கு! தூயவனே! என் துன்பம் துடைத்திடுவாய்! காசினியோர் வாழ்வதற்கு வழி சொன்ன பெரியவனே! கருணைக் கடலே! அலைக்கரத் தால் வரண்ட கரையை நனைத்துவிடு. என் மனத்தை மகிழவைப்பாய்!"

—என அழுதாள். தொழு தாள். விளக்கேற்றி வைத்து விழிநீரைச் சிலைமுன்பு சிந்தி நின்றாள். சிலை பேசிற்று. கண் மூடிக்கொண்டு அதைக் கேட்டாள்.

"பெண்பாவாய்! கணவன் பிரிந்துவிடட கவலைதனை என்னிடத்தில் உரைக்க வந்தாய். என்னை மதி உந்த னுக்கு. அழகு மனையாட்டி— அவளருகே உறங்குகின்ற அருமைச் செல்வம் — இரு வரையும் ஏங்கவிட்டு "அன்பு" போதிக்க துறவு பூண்டவன் நான். அவனிக்கு நான் தந்த படிப்பு அன்பு!... அன்பு! ... அன்பு! ... ஆனா லும் அந்த அன்புதனை எனை நம்பி வாழ்ந்திட்ட துணைவி யிடம், அவள் பெற்ற பிள்ளை யிடம் காட்டாமல் வெளிவந் தவன் நான். கணவனைப் பிரிந்த உன் கவலையைப் புரிந்து கொள்ளும் சக்தி எனக்கில்லை போ—போ!"

குரல் கேட்டாள். "அய்யோ பகவானே!" என அழுதாள்.

சிரிப்பொலி கேட்டது. விழி திறந்தாள். சிலைக்குப் பின்னிருந்து அவள் கணவன் வந்திட்டான்.

அத்தான் எனப் பாய்ந் தாள்.

அணைத்தபடி "ஆருயிரே! விளையாடிப் பார்த்தேன் உன் னோடு—அதற்குள் நீ வேதனை உருவாகி விட்டாயே; வா வா போவோம்" என்றான்.

"சித்தார்த்தன் அருள்" என்றாள்.

"அவர் அருளியது உலகை வாழ்விக்கும் உயர் கொள்கை. உன்னையும் என் னையும் சேர்த்து வைக்க— உலகோரின் பிரார்த்தனை களை நிறைவேற்றிக் காணிக் கைக் கூலி பெற அவரில்லை; அந்தோ அவரைக் கடவுளாக ஆக்கிவிட்டார்—தீமை! தீமை!!" என்றான்.

"பின்னர் பேசியது யார்?" என்றாள்.

"சிலையல்ல; நானே!" என்றான்.

தழுவிக் கொண்டார்.

●●●

ஜீவனாம்சம்!

மனைவிக்கு ஜீவனாம்சம் கொடுப்பது, கடனுக்கு வாங்கிய கார் உடைந்து நாசமானபின் தவணைப் [பணம் கட்டுவது போலத்தான்.

—'விச் மகஸீன்'

விசித்திர வழக்கும், வேடிக்கையான சாட்சியும்!

பல வருடங்களுக்கு முன்னே மேற்குக் கெண்டக்கி ராஜ்யத்தில் ஒரு வழக்கு வந்தது. ஒருவன் காதை இன்னொருவன் கடித்துவிட்டதாகக் குற்றம் சாட்டினர்கள்.

விசித்திரமான வழக்கமல்லவா; நாட்டிலே பெரிய பரபரப்பை உண்டாக்கி விட்டது அது. நெடுநாள் நடந்த வழக்கில் அநேக சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

கடைசியில் முக்கியமான சாட்சியாக ஒரு பணக்காரக் குடியானவக் கிழவர் வந்தார்.

கிழவரைப் பிராசிக்யூஷன் தரப்பு வக்கீல், "என்ன தாத்தா, வாதி காதை எதிரி கடித்ததை நீர் பார்த்தீரா?" என்று கேட்டார்.

"இல்லை, சார்!" என்றுர் கிழவர்.

அவர் 'சட்'டென்று பதில் சொல்லி விட்டார் என்ருலும், அவரது பதிலிலே சிறிதும் திருப்தி அடையவில்லை வக்கீல். ஆகவே மீண்டும் கேட்டார்:

"ஐயா! இதோ பாரும்; நீரோ பிரமாணம் செய்து சாட்சி சொல்லுகிறீர். வாதி காதை எதிரி கடித்தார் என்று நம்ப ஆதாரமான எதையாவது பார்த்தீரா? யோசித்துச் சொல்லும்."

கிழவர், "இல்லை, சார், இல்லை. ஆனுல், நீங்கள் இவ்வளவு தூரம் சொல்லும்போது, ஒன்று எனக்கு நினைவு வருகிறது. எதிரி வாதியோடு சண்டையிட்டாரா; அப்புறம் எதிரி வாயிலிருந்து துப்பினுர். ஒரு பெரிய காது வெளியேவந்து விழுந்தது. அது யார் காதோ? அதெல்லாம் எனக்குத் தெரியாது."

வழக்கு மன்றமே அவரது விசித்திரமான பதில் கண்டு வியப்பிலாழ்ந்தது!

—ஜோ க்ரீஸன், 'லூயிஸ்வில் கூரியர்'

சாவும் வாழ்வும்



“அத்தையில்லா விட்டால் நான் செத்தி
ருப்பேன்
அப்பாவும் அம்மாவும் மறைந்த பின்னர்
இத்தனைநாள் எனைவளர்த்தும், பாது காத்தும்
இளமைநலந் திகழுமெழில் மங்கை யாக்கிச்,
சித்தமிசை குடிகொண்ட அத்தான் உங்கள்
சிந்தனையால் வாழ்கின்ற பேதை என்னைச்
சத்தகன்ற சக்கையாக மாற்று தற்குச்
சதித்திட்டம் வகுத்திட்டார், உமது தந்தை!

கருணானந்தம்

கடமையினால் நிறைகின்ற காதல் வாழ்வில்
கருத்தொக்கும் நிலைபிறந்தால் போதும்; முன்பே
உடலுறவுக் குடன்படுதல் மடமை யாகும்;
ஊரறியத் திருமணநாள் புனையு மட்டும்
திடமுடைய மனம்வேண்டும் என்ப தாலே,
தெளிவாக என்னுள்ளம் தெரிவிக் காமல்
படமுடியாத் துயரமெலாந் தாங்கிக் கொண்டு,
பார்வையினால் மனமகிழ்ந்து வந்தேன்; ஆனால்,

குருட்டறிவைத் துணையாகக் கொண்டு விட்டீர்;
குணத்தைவிடப் பணக்குவியல் தருமின் பத்தைப்
பொருட்டாகக் கருதிவிட்டீர் போலும்! மேலும்,
பொல்லாங்கு சூழுமுன்னா புறப்பட் டால்தான்
மருட்டுகின்ற உயிர்போக்க வகைகி டைக்கும்.
வருகின்றேன், வணங்குகிறேன், வாழ்க! உங்கள்
இருட்டறையிற் பிணந்தழுவுங் கொள்கை வாழ்க!
எதிர்காலப் புதுமனைவி வாழ்க!" என்று—

முடித்திட்ட கடிதத்தைக் கையில் மூடி,
மூலையிலே அத்தானின் தனிய றைக்குள்,
துடித்திட்ட இதயத்தைப் பிடித்துக் கொண்டு
தூக்கியெறிந் தசையாமல் திரும்பும் போது—
அடித்திட்ட சிலைபோன்ற அத்தான் வந்தார்!
அழகான அழைப்பிதழும், விளக்கும் தந்தார்!
படித்திட்டேன், மணமகள்யார்? நானே தானா?
படுகுழியில் விழயிருந்தேன்; பிழைக்க வைத்தார்!

வாடகைக்கு
விடப்படும்

வாழ்க்கை முன்னேற்றத்திற்கு மூடநம்பிக்கைகள் எவ்வளவு தடையோ, அந்த அளவு அறிவு வளர்ச்சிக்கும் ஆராய்ச்சிப் போக்குக்கும் தப்பெண்ணங்கள் தடைபோடுவனவாகும்.

ஆராய்ச்சிப் போக்கின் இத்தடைகளையே பண்டைத் தமிழர் 'ஐயம், திரிபு, மயக்கம்' என வகுத்தனர்.

'பொருளல் லவற்றைப் பொரு
ளென் றுணரும்
மருளான் ஆம்மாணுப் பிறப்பு'

என்ற குறட்பாவில் முப்பால் முதல்வர் பொருள் மறைக்கும் 'மருள்' என்று சுட்டிக் காட்டியதும் இதனையே யாகும்.

ஆகியவை தனிச் சிறப்புடன் இடம் பெறுகின்றன.

ஒரு நூலில் சமஸ்கிருதச் சொல் மிகுதியானால், அது பிற்காலத்தது; குறைவானால் முற்காலத்தது; இது தமிழுக்கு மட்டுமல்ல; எல்லாத் தாய் மொழிகளுக்கும் பொதுவான உண்மை.

சொல் வழக்கு, சொல் மரபு, இலக்கண வழக்கு, இலக்கண மரபு, யாப்பு மரபு, கருத்து மரபு, பழக்க வழக்கங்கள், பண்பு மரபுகள்—ஆகியவையும் கால மாறுபாட்டை அறிவிப்பவையே.

ஆராய்ச்சியின் தொடக்க காலத்தில், முழு இருளில் மின்மினி ஒளியேனும் காண

மொழியாராய்ச்சியில்

தமிழாராய்ச்சித் துறையில்—சிறப்பாக மொழியாராய்ச்சித் துறையில் இத்தகைய தப்பெண்ணங்கள்பல செறிந்து உறைந்து சறுக்கும் பாசிகளாய் உள்ளன. தமிழ் மட்டுமே கற்ற புலவருலகைவிட, பிறமொழி கற்ற தமிழக அறிஞருலகிலேயே இவை பெரிதும் தலை மயங்குகின்றன. ஏனெனில் இவர்களிடமே அறியாமையிலும் ஆபத்தான குறையறிவு, பிற தமிழர் அறியாதது அறிந்தோமென்ற 'இசைச் செருக்கு', தப்பெண்ணங்களைப் பாலூட்டி வளர்க்கும் தாயாகிய ஒரு சார்பான பற்று, பிற தமிழருக்கு இல்லாத பிற மொழிப் பற்று—

இவை பயன்படுத்தப் பட்டன. பயன்பட்டும் உள்ளன. ஆனால் ஆராய்ச்சி முடிவுகள் செய்வதில் இவற்றினும் இடக்கு முடக்கான வேறு ஆதாரங்கள் காண முடியாது. ஏனெனில் இது ஆராய்ச்சியில் இரு திசையில் பயன்படுத்தப்பட்டு, சுழல் வாதம் அல்லது செக்கு மாட்டு வாதம் ஆகிவிடுகிறது.

ஒரு பண்பு, சொல், வழக்கு, மரபு பழமையானது என்று காட்ட, அது பழமையான நூலில் வழங்கப்படுவது என்று எடுத்துக் காட்டப்படுகிறது. அதே சமயம் நூல் பழமையானது என்பது எப்படி தெரிய வந்தது என்று கேட்டால், பழ

மையான பண்புகள் அதில் உள்ளன என்று வாதிடப்படுகிறது!

தவிர, திருக்குறள் பழமையான நூல் என்று ஏற்றுக் கொண்டபின்கூட, ஆசிரியர் மறைமலை அடிகள் அதிலுள்ள சமஸ்கிருத வழக்குகளை எண்ணி நூற்றுக்கு மூன்று விழுக்காடு என்று கூறுகிறார். அதையே அறிஞர் வையாபுரியார் கணக்கிட்டு நூற்றுக்கு முப்பத்தொன்று விழுக்காடு என்று கூறுகிறார்!

நீர், மீன், உலகு, அரசு ஆகியவற்றைச் சமஸ்கிருதச் சொற்கள் என்று அறிஞர் வையாபுரியார் எண்ணுகிறார். ஆசிரியர் மறைமலை அடிகளோ அவற்றை மற்ற எல்லாத் தென்னாட்டு, வடநாட்டு ஆராய்ச்சியாளரும்

ஏற்படும் முன்னேற்றங்கள் எப்படியோ தமிழகத்தை மிகுதி வந்தெட்டுவதில்லை. எட்டினாலும், அதன் முதலொளி ஆட்சி வகுப்பினர் சார்பிலுள்ள அறிஞர் வையாபுரியார் போன்ற பிறமொழி கற்றவர்கள், பிறமொழிப் பற்றாளர்களையே வந்து எட்டுவதனால், அவர்கள் தெரிந்தும் தெரியாது பற்றுதல் காரணமாகவும் அவற்றை இருட்டடித்து அல்லது மழுப்பி அல்லது திரித்துவிடுகின்றனர்.

இலக்கண மரபு, சொல் மரபு, வழக்கு மரபு ஆகியவைகளில் குழப்பம் இன்னும் மிகுதியாகிவிடுகிறது. ஏனெனில் இலக்கண இலக்கியப் புலவரின் பழைய அறிவின் குறைபாட்டுடன், பிறமொழிப் பற்றாளரின்

சில தப்பெண்ணங்கள்

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை

சொன்னதுபோல, தமிழ் என்றே கொள்கிறார். வையாபுரியாரைப்போல — பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களைப் போல—வேண்டுமென்றே அரைகுறை வாதம் செய்யவில்லை.

ஆராய்ச்சியாளருக்கு ஆராய்ச்சியாளர் மட்டுமல்ல; சில சமயம் ஒரு ஆராய்ச்சியாளர் முன்னூல், பின்னூல்களுக்குள்ளே கூட இவ் வகையில் வேறுபாடு ஏற்படுவதுண்டு. ஆசிரியர் மறைமலையடிகள் முன்னூல்களில் சமஸ்கிருதம் என்று கொண்டதைப் பின்னூல்களில் தமிழ் என்று காட்டியுள்ளார்கள்.

மொழியாராய்ச்சித் துறையில்

புத்தறிவின் ஒருச் சார்பும் சேர்ந்து, மக்கள் பொது அறிவைத் தவறான வழியில் செலுத்திவிடுகிறது. இங்கே பழம் புலமையின் குறைபாடு அறியாத் தாயின் குறைபாடாகவும் அறிஞரின் குறைபாடு அறிவுடைய மாற்றாந்தாயின் குறைபாடாகவும் செயலாற்றி விசித்திர ஒற்றுமை கண்டு விடுகிறது.

இம் மயக்கங்கள் அகலும் வகையில் கீழ்வரும் மெய்ம்மைகள் வலியுறுத்தப்பட வேண்டும்.

(அ) சமஸ்கிருதச் சொற்களனைத்தும் சமஸ்கிருதத்துக்கே உரியவை என்ற கருத்து அறி

வுலகிலும் ஆராய்ச்சிவுலகிலும் மலையேறி நீண்ட நாளாகியும் தமிழகத்தில் அது இன்னும் நிலவுகிறது—சிறந்த ஆராய்ச்சி யறிஞரைக்கூட அது விட்டபாடில்லை.

ஒரு சமஸ்கிருதச் சொல் சமஸ்கிருதத்துக்கே உரியதா என்று முடிவு செய்யும்வரையில் உலக மொழியாராய்ச்சியறிஞர்கள் பாரசிகம், கிரேக்கம், இலத்தீனம் முதலிய நாகரிக வளமுடைய தென் ஆரிய மொழிகளையும், வளமற்ற ஆங்கிலம், ஜெர்மன் போன்ற வட ஆரிய மொழிகளையும் ஒப்பிட்டு ஆராய்கின்றனர். எல்லா இந்து—ஐரோப்பிய மொழிகளுக்கும் பொதுவான சொல் மரபு, வழக்கு மரபுகளையே சமஸ்கிருதத்துக்கே உரிய தூய ஆரிய மரபுகள் என்று நிலைநாட்டுகின்றனர்.

இவ்வகையில் இன்றைய சமஸ்கிருத அகர வரிசையிலும் நிகண்டுகளிலும் உள்ள சொற்களில் *100* க்கு *15* விழுக்காட்டுக்குமேல் ஆரியச் சொற்களல்ல. அவை (*100*–க்கு *85*) பெரும்பாலும் திராவிடரிடமிருந்து பெறப்பட்டவையே. இது திராவிடப் பொது மக்களுக்கு மாணவருக்குத் தெரியாதபடி பெருத்த மாருட்டச் சதி நடைபெற்று வருகிறது.

(ஆ) சமஸ்கிருதத்தின் இலக்கியம் முழுவதும், தமிழ்ச் சங்க இலக்கியத்துக்குக் காலத்தாலும் பண்பாலும் மிகமிகப் பிற்பட்டவை. புராண இதிகாசங்கள், பகவத்கீதை, சுமிருதிகள், வேத உபநிடதங்கள்கூட சங்க காலத்துக்கு நெடுங்காலம் பிற்பட்டே இன்றிருக்கும் நிலை அடைந்தன. அவற்றுள் பெரும் பகுதியும் தமிழரும் பிறரும் தமிழிலக்கியப் பகுதிகளை மொழிபெயர்த்துப் புகுத்தியுள்ளவையே. பண்பாட்டாராய்ச்சியும் ஒப்பீட்டாராய்ச்சியும் இவற்றைத் தெளிவாகக் காட்டும். ஆனுல் இதைக் காட்டாது, காண வொட்டாது தமிழகப் பல்கலைக் கழக அறிஞருலகு மறைத்து வருகிறது.

(இ) மொழித்துறையில் கால முறை ஆராய்ச்சி, இட முறை ஆராய்ச்சி சமஸ்கிருதத்துக்கு இன்றும் ஏற்படவில்லை. தமிழில் அது இன்னும் தூர தொலைவில் இருக்கிறது. அறிஞர் வையாபுரியார் குளறுபடி இந்தக்குறைபாட்டை நன்கு பயன்படுத்தி சமஸ்கிருத ஆராய்ச்சி, தமிழ் ஆராய்ச்சி ஆகிய இரு துறைகளிலும் அறியாமை மயக்கம் பரப்புகிறது.

ஒரு வழக்கு சமஸ்கிருதத்திலிருப்பது தெரிந்து விட்டால், உடனே அது பழமையான தென்று பலர்நம்பிவிடுகிருர்கள். சமஸ்கிருதத்திற்கும் கால ஆராய்ச்சி என்ற ஒன்று உண்டு என்பதை வையாபுரி போன்ற ஆராய்ச்சியாளர்கள் உணர்வதில்லை. நாமக்கல் இராமலிங்கம் போன்ற கவிஞர் சில சமயம் கட்சி தடை செய்யாத இடத்தில் சுட்டிக் காட்டிவிட முடிகிறது! வேற்றுமை அறிவிலல்ல; பற்றுதலில்தான் என்பதை இது காட்டுகிறது.

தவிர, மறைமலையடியார் போன்ற தலைசிறந்த இலக்கியப் புலவர் ஆராய்ச்சிகூட இக் குழப்பத்துக்கு உதவிவிடுகிறது. ஏனெனில், இலக்கியப் புலவர் இலக்கிய ஆராய்ச்சியே மொழி ஆராய்ச்சியென்று முடிவு கட்டிவிடுகின்றனர். இலக்கியவழக்கு மொழி வழககுக்கு ஒரு சான்ருகுமேயன்றி, அதன் முழு உருவம் ஆகாது. எங்கும்

எப்போதும் நிலவும் மொழியை ஓரிடத்தில்—ஒரு கணத்தில் பிடித்த படப்பிடிப்பபே இலக்கியம்.

நன்னூலாரைவிட முன்னூலாரான தொல்காப்பியர் மொழியாராய்ச்சி மரபுக்கு மிகுதி மதிப்புக் கொடுத்தவர். ஆனால் அம் மரபிழந்த இடைக் கால இக்கால தமிழகத்துக்கு, தொல்காப்பியம் குருடன் கையில் விளக்காக மட்டுமே இன்று பயன்படுகிறது.

தொல்காப்பியர் இயல் தமிழ் மரபுக்கு மட்டுமே இலக்கணம் –செய்தார். இசை, நாடகத் தமிழுக்கல்ல. இதை உணராத இக் காலப் புலவர், கவிஞர் பலர் அதையே முத்தமிழ் இலக்கணம் என்று கொண்டு இடர்ப்படுவர்; இடருக்கு வழிவகுப்பர்.

தொல்காப்பியர் உலகவழக்கு —செய்யுள் வழக்கு வேறுபாடு உணர்ந்தவர். இரண்டும் குறிப்பிடுபவர். ஆனால் அவர் இலக்கணம் செய்தது உலக வழக்குக் கன்று. அது தழுவிய அவர் காலச் செய்யுள் வழக்குக்கே! அது முத்தமிழ் இலக்கணமாகிய இக்கால மொழியாராய்ச்சிக்கு உதவுமேயன்றி, மொழியாராய்ச்சி ஆகிவிடமாட்டாது.

(ஈ) தொல்காப்பியர்;காலத்திலேயே ஏற்பட்ட இன்னொரு குறைபாடு திராவிட இயக்கத்தவர் கருத்திற் கொள்ள வேண்டிய ஒன்று. ஏனெனில் அக் குறைபாட்டின் பெருக்கமே தமிழ் தேய, தமிழகம் குறுக, தமிழறிவும் தமிழ்ப் பண்பும் தட்டுக்கெட வழி வகுத்தது. அதுவே செந்தமிழ், கொடுந் தமிழ் வேறுபாடு — செந்தமிழ் நிலம், அது சார்ந்த நிலமென்ற வேறுபாடு. காலமாறுபாட்டையும் இட மாறுபாட்டையும் ஆராய்ச்சி அறிஞர் தெளிவாக வேறு பிரித்துணர முடியாமல் மறைக்கும் வேறுபாடு இதுவே.

இவ் வேறுபாட்டின் வரலாறு ஒரு தனி ஆராய்ச்சிக்குரியது.

இன்று நல்ல தமிழ் எது என்று யாரும் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. காரணம், தமிழ் ஆட்சிமொழியுமல்ல; ஆளுபவா மொழியுமல்ல. தன்னுரிமையற்ற இனத்தின் மொழி முழு வாய்ப்புடன் வளர்ச்சி பெற்று வளம்பெற முடியாது. ஆயினும் பொதுவாக, ஆங்கிலம் படித்தவர்—சிறப்பாக சென்னை நகரிலுள்ள ஆட்சி வகுப்பினர் வகுத்துரைப்பதே இன்று மொழியின் சட்டமாகும். ஏனெனில் பாடப் புத்தகம் எழுதுபவர், அதைத் தேர்பவர், பத்திரிகை எழுத்தாளர் ஆகியவர் தலைமையிடம் இதுவே!

சென்ற ஆயிரம் ஆண்டுகளில் இந் நிலை இருந்ததில்லை. அரசியல் மையம் மதுரை அல்லது திருச்சிராப்பள்ளி (பாண்டிநாடு அல்லது சோழ நாடு) ஆகவே இருந்தது. இந்த இடங்களின்

திசை வழக்கு அல்லது இட வழக்குகளே நம் காலம்வரை இலக்கியத் தமிழை வரையறுத் துள்ளது.

ஆனால், தற்கால இலக்கியம் உருவான காலம் இதுவல்ல. உருவான காலத்தின் தலைநகர் மதுரையே! இதைத் தமிழ் இலக்கணப் புலவர், சிறப்பாக உரையாசிரியர் காலச் செந்தமிழ் —கொடுந்தமிழ் வேறுபாடு சுட்டிக் காட்டுகிறது.

செந்தமிழ் சேர்ந்த 'பன்னிரு நிலம்' என்று தொல்காப்பியர் கூறியதையே உரையாசிரியர்கள் கொடுந்தமிழ் நாடாகக் கொண்டனர்.

செந்தமிழ் சேர்ந்த 'பன்னிரு நிலம்' யாவை?

தொல்காப்பியர் 'பன்னிரு நிலம்' என்று தொகை கூறினரேயல்லாமல், வகுத்துக் கூறவில்லை. வகுத்தறிய பழம் பாடல் உரையாசிரியர் நமக்கு எடுத்துக் காட்டுவதேயாகும்.

தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி
பன்றி, அருவா, அதன் வடக்கு—நன்றாய
சீதம், மலாடு, புனல் நாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிரு நாட்டு எண்.

இவற்றுள், தென்பாண்டி என்பது திருநெல்வேலி மாவட்டமும் குமரி மாவட்டமும் சேர்ந்த பகுதி.

—இது பாண்டிய நாடு சேர்ந்தது என்பது தெளிவு.

குட்டம் என்பது கொச்சி, ஏரணாகுளம் பகுதி. குடம் என்பது தென்மலபார் மாவட்டமும் குடகுப் பகுதியும். கற்கா என்பது பாலக்காட்டுப் பகுதி. வேண் என்பது திருவாங்கூரின் பெரும் பகுதி. பூழி என்பது வடமலபார் மாவட்டமும் துளு நாடும் உட்கொண்டது.

—இவை சேரநாடு சேர்ந்த பகுதிகள்.

பன்றி என்பது காவிரிக்குத் தெற்கிலுள்ள சோழ மண்டலமாகிய தஞ்சாவூர் மாவட்டப் பகுதி, திருச்சிராப்பள்ளி மாவட்டப் பகுதி ஆகியவை அடங்கியது. புனல் நாடு என்பது காவிரிக்கு வடக்கிலுள்ள சோழநாடு. அது தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களின் வடபகுதியும் தென் ஆர்க்காடு மாவட்டமும் சேர்ந்தது.

—இவை சோழ நாட்டைச் சேர்ந்த பகுதிகள்.

அருவா, அருவா வடக்கு ஆகிய இரண்டும் வடஆர்க்காடு, செங்கல்பட்டு, சென்னை மாவட்டங்களையும் சித்தூர் மாவட்டப் பகுதியையும் உண்டாக்கியது.

—இவை தொண்டை நாடு சேர்ந்த பகுதிகள்.

சீதநாடு கோயமுத்தூர் மாவட்டம்.

மலாடு சேலம் மாவட்டம்.

—இவை கொங்கு நாடு சேர்ந்தவை.

இவ்வாறாக, இன்று மலையாள நாடாகவும், கன்னட நாட்டுப் பகுதியாகவும் ஆகிவிட்ட பண்டைச் சேரநாடு முழுவதும் மட்டுமல்லமல், நல்ல தமிழ் நாடாகவே இன்னும் இருந்து வரும் சோழ நாடு, தொண்டை நாடு, கொங்கு நாடு முழுவதும், பாண்டிய நாட்டின் தென் பகுதியும் இடைக் காலத்தாரால் செந்தமிழ் நாடு என்ற உரிமையற்ற கொடுந் தமிழ் நாடுகளாய்த் தள்ளப்பட்டன; தள்ளப் படவிருந்தன என்று காண்கிறோம்.

இது வெறும் இலக்கணப் புலவர் பிதற்றலல்ல என்பதை இலக்கிய வழக்கும் கல் வெட்டுகளும் வலியுறுத்தும். பாண்டியனே இவற்றில் அப்பழுக்கின்றித் தென்னாடன், செந்தமிழ்நாடன், தமிழ்நாடன் என்று சிறப்பிக்கப்படுகின்றான். சோழ நாட்டிலே தமிழ் வளர்த்த தோன்றல்களே இவ்வாறு கூறுவது காணலாம்.

இன்று மலையாளிகள், தெலுங்கர், கன்னடரில் பலர் தாம் தமிழர் என்று கருதவில்லை. அதுமட்டுமல்ல; ஒரு சில ஆராய்ச்சியாளர் தவிர, மற்றவர்கள் தாம் திராவிடர் என்பதைக்கூட இன்னும் உணராமல்தான் இருக்கின்றனர். ஆனால் இத்தகைய சூழலை வளர்த்த பண்பு எது—தமிழ் உரிமை, தமிழின உரிமையிலிருந்து அவர்களைத் துரத்திய பண்பு எது என்பதை இங்கு காண்கிறோம். உண்மையில் சோழ நாட்டினரை, கொங்கு, தொண்டை மண்டலத்தாரை, தென்பாண்டி நாட்டாரைக் கூடத் தமிழுரிமையிலிருந்து பிடித்துத் தள்ள இடைக்காலத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சியாளர் தெரிந்தோ தெரியாமலோ முற்பட்டுள்ளதையே நாம் காண்கிறோம்.

ஆனால் இது தொல்காப்பிய காலப் பண்பல்ல; சங்க காலப் பண்பல்ல. பாண்டிநாடுதான் அப்போதும் செந்தமிழ் வளர்த்தது. சங்கம் வளர்த்தது. ஆனால் உரைகாரர் காலச் செந்தமிழ் நாட்டெல்லை வேறு. சங்ககால,தொல்காப்பிய காலச் செந்தமிழ் நாட்டெல்லைவேறு.

சங்க காலச் செந்தமிழ் நாட்டெல்லை இன்றைய சென்னை மாநிலத் தமிழகமும்,கேரளமும், தென் கன்னட மாவட்டமும், மைசூரும், இராயல் சீமாவின் தென்பகுதியும்உட்கொண்டது. இந்த இடங்களிலிருந்தும் புலவர்கள் சங்கப் பாடல்கள் பாடியுள்ளனர். இவ்வளவு இடங்களிலும் தமிழ் வளர்த்த மன்னர், வேளிர், பெருமக்கள் இருந்தனர்.

தொல்காப்பியர் காலத்திலோ செந்தமிழ்நாடு, இன்னும் அகலமானது. ஏனெனில் அந்த காலப் பாண்டியன் தலைநகரமே பிற்காலத்தார் கொடுந் தமிழ் நாடுகளில் வைத்தெண்ணிய தென்பாண்டிய நாட்டுக்கும்

தெற்கே, கடல்கொண்ட குமரி மாநிலத்தில், இன்றைய இலங்கைக்கு அருகிலோ, ஒருவேளை இலங்கையிலோ இருந்திருக்க வேண்டும். தொல்காப்பியர் செந்தமிழகம் இன்றைய இலங்கையையும் உட்படுத்தியது என்பதில் ஐயமில்லை.

தொல்காப்பியர் தமிழ்ப் பேச்சு வழக்கு இலங்கைத் தமிழுக்கும் மலை நாட்டு வழக்குக்கும் வட தமிழக வழக்குக்கும் அருகாமையிலிருப்பதை அறிஞர் பலர் எடுத்துக் காட்டியுள்ளனர்.

தொல்காப்பியர் காலத்துக்கு முன் செந்தமிழகம் இன்னும் விரிவானது. அதுவே முழுத் தமிழகம் அல்லது திராவிடம் ஆகும். ஏனெனில் தொல்காப்பியர் காலத்திலும், அதற்கு முன்னும் இருந்து முதற் சங்க காலப் பாண்டியர் தலைநகரே—தென் மதுரையே—தொல்காப்

பாதுகாப்பு !

சினிமா 'க்யூ'வில் நின்று கொண்டிருந்த ஒரு ஆசாமியின் முதுகை யாரோ தொட்டாற் போல் இருந்தது. அவன் திரும்பிப் பார்த்தான். அவனுக்குப் பின் நின்று கொண்டிருந்த ஒரு பெண், இந்த வரிசையை விட்டு விலகியதைக் கண்டான்.

இப்படி நகர்ந்து கொண்டே, "நான் கொஞ்சம் அந்தக் கடை வரைக்கும் சென்று சோடா குடித்து வரப்போகிறேன்" என்றாள் பெண்.

"எங்கே வேண்டுமானாலும் போ, அம்மா! அதைப் பற்றி எனக்கென்ன?" என்று எரிச்சலுடன் சொன்னான் ஆசாமி.

"அது சரி—வரிசையில் என் இடம் மறந்து விடக் கூடாதில்லையா? அதற்காகச் சாக்கட்டியால் உங்கள் முதுகிலே ஒரு பெருக்கல் குறி போட்டு வைத்திருக்கிறேன்" என்றாள் அவள்.

—'ரெவ்யூ'

மார்ச்
14உ
முதல்
புத்தா
பிக்சர்ஸ்
பதிபக்தி
சங்கீதம்: விஸ்வநாதன்-ராமமூர்த்தி • நிர்வாகம்: G.N.வேலுமணி
கதை, வசனம்: M.S.சோலைமலை • காமிரா: G.விட்டல்ராவ்
டைரக்ஷன்......
A.பீம்சிங்
பூரண உரிமையாளர்
S.K.பிக்சர்ஸ்

யியர் காலச் செந்தமிழகத்துக்கு வெளியே இருந்தது. தொல்காப்பியர் காலத்துக்கு முன் ஐந்து திராவிட மொழி நாடுகளும் ஒரு தமிழகமா யிருந்தன என்பதை இது காட்டுகிறது.

முடிவாகச் செந்தமிழ் என்பது இலக்கியத் தமிழ் மரபு. இதற்கு அடிப்படைத் தளமே செந்தமிழ் நில மையமான தென் மதுரை. ஆனால், தொல்காப்பியத்தில் செந்தமிழுக்கு எதிராகக் கொடுந்தமிழ் என்ற சொல் மரபு இல்லை. செந்தமிழ் வகுத்த பகுதி செநதமிழ் நில மையமாகிய அரசியல் தலைமையிடம். ஆனால், அதை வகுக்க ஆதாரமான திசை வழக்குடன் நிலவும் பகுதி செந்தமிழ் சேர்ந்த நிலம். இதுவே 'திசை வழக்கு' நிலம். இது படர்ந்த இடத்தைத் தமிழர் கொடுந்தமிழ் என்று கூறத் தொடங்கவில்லை. பண்படாத நிலம், மொழி பெயர் தேயம் என்றனர்.

தொல்காப்பியர் காலச் செந்தமிழ்நாடு (செந்தமிழ் நிலமும் செந்தமிழ் சேர் நிலமும் உள்ளடங்கிய பகுதியே) இன்றைய தென் திராவிடம். ஆனால் இன்றைய வடதிராவிடம் (ஆந்திர கன்னடப் பகுதி), இன்றைய இலங்கையின் தென்கோடி ஆகியவை அன்று செந்தமிழ் எல்லை கடந்த தொலைத் தமிழ் நிலமாகக் கருதப்பட்டன என்பதையும் தொல்காப்பியம் நன்கு எடுத்துக் காட்டுகிறது. அன்று தமிழ் தவிர கீழ்த் திசையில் வேறு மொழிகளே இருந்ததாகத் தெரியவில்லை. இமயம் வரைக்கும், கடல்கடந்தும் தமிழ் என்றே நிலவிய நிலையினை 'ஒரு மொழி வைத்து உலகாண்ட' என்ற தொடரால் சங்க இலக்கியம் குறிக்கின்றது.

தமிழுக்குப் போட்டியாக உலகில் சமஸ்கிருதம் என்ற ஒரு புதிய இலக்கிய மொழி—தென்மொழிக்கு எதிரான ஒரு வடமொழி படைத்து உருவாக்கப் படாத காலம் அது.

சமஸ்கிருதம் என்ற மொழி எப்போது, ஏன், எந்த அடிப்படைமீது தோன்றிற்று என்று காண்பதற்கே தமிழ்ச்சங்க இலக்கியத்தையும் தமிழ்மொழியையும் தொல்காப்பியத்தையும் இன்னும் ஆழ்ந்து ஆராய்தல் வேண்டும்.

காலமாறுபாட்டுக்கு மட்டும் உரிய பொதுவான மொழி வளர்ச்சி மட்டுமன்றி, அதன் இடமாறுபாட்டின்வளர்ச்சியையும் உட்கொண்ட மரபே இலக்கிய மரபு. இந்த இரண்டையும் உளம்கொண்டு அதனை மொழியாராய்ச்சிக்குப் பயன்படுத்தத் தமிழ் ஆராய்ச்சியாளர் இது காறும் தவறியுள்ளனர்.

இதில் வியப்பில்லை.

—திராவிட மொழியில் மொழியாராய்ச்சியின் துணைக்கொண்டு தமிழிலக்கிய மொழியையும் தொல்காப்பியத்தையும் ஆராய்ந்தாலன்றி, நாம் முழுத் தமிழை, முன்னைப் பெருந் தமிழின் தோற்ற வளர்ச்சியைக் காணமுடியாது.

அதுவரை மொழியாராய்ச்சியின் கணக்கு முடிவுகளைக் கால ஆராய்ச்சிக்கு யாரும் பயன் படுத்தாதிருப்பதே நன்று—மற்ற ஆராய்ச்சிகள் மொழியாராய்ச்சிக்கு ஆதாரமாக்கப்பட வேண்டுமேயன்றி, மொழியாராய்ச்சி மற்ற ஆராய்ச்சிகளுக்கு ஆதாரமாக்கப்படக்கூடாது.

மொழியாராய்ச்சித் துறையில் தப்பெண்ணங்கள் பலவற்றையும் தடுத்தாள இந்த எச்சரிக்கை பெரிதும் பயன்படக்கூடும். ஃ

தமிழ்க் கொலை

புலவர் குழந்தை

கொலை! கொலை!!

யார் யாரைக் கொன்றனர்? எங்கே? எப்போது? எதற்காக?

என, மக்களைக் கொல்வது தான் கொலை எனக் கொள்வது பொது நிலை. மக்களல்லாத மற்ற உயிர்களைக் கொல்வதும் கொலையேயாகும். உயிர்க் கொலை மட்டும் கொலையென்ப தன்று. காலக்கொலை, பொருட் கொலை, குணக்கொலை, தொழிற் கொலை, மொழிக் கொலை எனக் கொலை பல வகைப்படும்.

ஒருவன் வாழ்நாளில் செய்யத் தகுவன செய்து சிறப்புடன் வாழ்வதே மக்கட் பண்பாகும். அங்ஙனம் செய்யாது வீண் காலம் போக்குவது, அவன் வாழ்வுக்குப் பயன்படும் காலத்தைப் பயன்பாடில்லாமல் வீண் போக்குவதாகையால், இது காலக் கொலை எனப்படும். நம் நாட்டில் இத்தகைய காலக் கொலை செய்வோர் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகின்றனர்.

ஒரு வேலை செய்யின் உடலும் உள்ளமும் களைப்படைந்தால் ஓய்வெடுத்துக் கொள்வது இயல்பு. அங்ஙனமின்றி, ஆறு மணி நேர வேலை; எட்டு மணி நேர வேலை என்ற வேலை நேர வரையறையெல்லாம் தொழிற் கொலையும் காலக் கொலையுமே யாகும். இத்தகைய கொலையால் நாட்டு வளங்குன்றி, மக்கள் வாழ்க்கைத் தரம் குன்றற்கேது வாகும் என்பதைக் கூற வேண்டியதில்லை.

இங்ஙனமே, ஒரு மொழி, மொழி வளர்ச்சிக்காக அம் மொழிக்கண் சில மாறுபாடு செய்தல் ஏற்புடைத்தாகும். அம் மொழி வளர்ச்சித்தொண்டினால் அம் மொழி வளர்வதோடு, அம் மொழி பேசும் மக்கள் மதிப்பும் உயரும். அங்ஙனமின்றி, ஒரு மொழியின் கேட்டுக்குக் காரணமான சில பல செய்தல் மொழிக் கொலையேயாகும். இம் மொழிக் கொலைக்காட்பட்ட மொழிகளுள் தமிழ் மொழி தனிப் பெருமை யுடையதாகும். அத்தகைய கொலைகட் கெல்லாம் தப்பி, இன்னும் உயிருடன் இருக்கும் பெருமை தமிழுக்கே உரிய தனிப் பெருமையாகும். இத்தகைய தனிப் பெருமை யுடைய மொழி, கொல்லு கொல்லென்று பல காலும், பலரும் பல வழியிலும் செய்த, செய்கின்ற கொலைகளுக் கெல்லாம் தப்பி, இன்னும் சிறப்புடன் மொழிகள் குலத்தனி விளக்காய் இருக்கும் மொழி தமிழ் மொழி ஒன்றேயாகும். தமிழன்னையின் மார்பில்பாய்ந்த வேலும் வாளும் ஒன்றிரண்டல்ல; ஓராயிரத்துக்கு மேல் இருக்கும். அத்தனைக்கும் சாகாமல் தப்பிய பெருமை தமிழன்னைக்கே உரிய தனிப் பெருமையென்பதில் தப்பென்ன?

ஒரு நாட்டின்கண் புதிதாகக் குடியேறுவோர், அந்நாட்டு மக்களிடைத் தங்கள் தாய்மொழியையும் தங்கள் பழக்கவழக்கங்களையும் புகுத்துவதையே தங்கள் முதல் வேலையாகக் கொள்வர். இது வரலாற்றுண்மை. காரணம், அவற்றால்தான் அந்நாட்டு மக்கள் தாய் மொழியும் தனிப்பட்ட கொள்கையும் கெட்டு, அன்னார் மொழிப் பற்றும் இனப் பற்றும் அற்று, அவ்வந்தேறிகட்கு அடிமைப்பட ஏதுவாகும்.

இவ் வேலையைத் தமிழ் நாட்டுக்கு அன்று வந்த ஆரியரும், பின் வந்த ஆங்கிலேயரும் செய்துதான் தமிழ் மொழியையும் தமிழர் தனிப் பண்பாட்டையும் கெடுத்து, தமிழர்க்குத் தாய் மொழிப் பற்றும், தமிழினப் பற்றும் இல்லாமல் செய்து, தமிழ் நாட்டில், தமிழர் தலைவர்களாய் ஆதிக்கஞ் செலுத்தலாயினர். இங்ஙனமின்றி, தமிழர் மறத்தின்முன் எதிர் நின்று வென்று தமிழரை அடிமையாக்கிக் கொண்டாரல்லர். அவ் வேலையைத்தான்

...தமிழிலக்கியத்திலே ஆரிய நஞ்சைக கலந்த அகத்தியர் போன்றோர்...

பொது மொழி என்னும் பெயரால் இந்தியைப் புகுத்தி, தமிழ் மொழியையும் தமிழ்ப் பண்பாட்டையும் கெடுத்துத் தமிழரை என்றென்றும் தங்கட்கடிமையாக்கிக்கொள்ள இன்று இந்தியரும் செய்து வருகின்றனர். தான் இன்னான் என்பதை மறக்கச் செய்து தமிழ் மக்கள்மேல் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்னும் குறிக்கோளுடனேயே தமிழ் மக்கள்மேல் வலுக்கட்டாயமாக இந்தி புகுத்தப்படுகிறது என்பதை ஒவ்வொரு தமிழரும் மனதில் இருத்தல் வேண்டும். இதையறியாத் தமிழ் மக்கள் தான் 'இந்தி வேண்டும்' என்று கூப்பாடு போடுகின்றனர்.

பகைவரை எதிர் நின்று எதிர்த்துக் கொல்லுதல், நட்புற்றுக் கொல்லுதல், வஞ்சித்துக் கொல்லுதல், கூட்டிப் போய்க் கொல்லுதல், ஆள் வைத்துக் கொல்லுதல், உள்ளாளைக் கொண்டு கொல்லுதல், மருந்திட்டுக் கொல்லுதல் எனப் பலவகையில் கொன்று மேம்படுதல் போலவே, தமிழ்ப்பகைவர்கள் பண்டுதொட்டே பல வழியிலும் தமிழ்க் கொலை புரிந்துவருகின்றனர்.

அகத்தியர் போன்ற ஆசிரியர்கள் பண்டு தமிழை ஒருவாறு கற்றுத் தமிழ்நூல் செய்வதன் வாயிலாய் ஆரியக் கொள்கைகளையும் ஆரிய மொழிச் சொற்களையும் புகுத்தித் தனித் தமிழ்ப் பண்பாட்டைக் கெடுக்க முயன்றனர். இதைப் புறநானூறு, அகநானூறு, கலித்தொகை முதலிய சங்க நூற்களிலும் காணலாம். இரண்டாவது, வட நூல்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதன் மூலம் வட மொழிக் கருத்துக்களையும் சொற்களையும் புகுத்தித் தமிழ்க்

கொலை செய்தனர். கம்பராமாயணம், வில்லி பாரதம் இதற்கு எடுத்துக் காட்டுகளாகும்.

இன்று கலைச் சொற்களை வட சொற்களில் ஆக்கிக்கொண்டு தமிழ்க் கொலைபுரிவதுபோலவே அன்று சமயச் சொற்களை வட மொழியில் ஆக்கிக்கொண்டு தமிழ்க் கொலை புரிந்துவந்தனர். நாட்டை 'ராஜ்யம்' என்பதும், ஐம்பொறிகளை 'பஞ்சேந்திரியம்' என்பதும் ஒரே வகைத் தமிழ்க் கொலைதானே? 'தமிழர்க்குத் தனிச் சமயம் உண்டு. அது தான் சைவ சமயம். பழஞ் சைவம் வேறு; இன்றையச் சைவம் வேறு' என்று கூறும் சைவ மெய்யன்பர்கள் — சைவ அறிஞர்கள் — சைவ சமயமே உண்மைச் சமயம், மற்ற சமயங்களெல்லாம் போலிச் சமயங்கள் என்று கூறும் சைவ சமயத்திடம் தனிப்பற்றுள்ளவர்கள்— பழந்தமிழ்ச் சைவச் சொற்கள் இல்லாமைக்கு, அல்லது மறைந்தொழிந்தமைக்கு என்ன காரணம் கூறுகின்றனர்? தமிழ்க் கடவுளாகிய சிவபெருமானுக்கு வடமொழி வழங்கும் கைலை தலைமையிடம் ஆனதேன்? தமிழ்க் கடவுளாகிய முருகன் இமயமலையில் பிறந்ததேன்? தமிழ்நாட்டில் என்ன; மலையும் சுனையுமா இல்லை?

மேலும், தமிழ் வடமொழியின் குட்டி எனத் தமிழர்களை நம்பும்படிச் செய்து, பிள்ளைகளைக்கொண்டே பெற்றோர்களைக் கொலை செய்வதுபோலத் தமிழர்களைக் கொண்டே தமிழ்த் தாய்க்கொலை செய்துவந்தனர். இதற்குத் திருப்புகழ் அருணகிரி நாதர் போன்ற தமிழ்ப்புலவர்கள் எடுத்துக்காட்டாவர்.

காளமேகப் புலவர், இரட்டைப்புலவர் போன்ற நூற்றுக் கணக்கான பிற்காலப் புலவர்களின் தனிப் பாடல்கள் கற்பனைக் களஞ்சியங்களாக இருந்தும் இன்று தமிழ் மக்களுக்குப் பயன்படாமல் போனதற்கு, படிக்கத் தகுதியற்றவையாய்ப் போனதற்கு அப் பாடல்களெல்லாம் வடமொழிப் புராணக் கருத்துக்களை யுடையனவாய் இருப்பதன்றோ காரணம்? 'கவிராயர்கள்' என்று சிறப்புப் பெயர் பெற்ற அப் பிற்காலப் புலவர்கள் உண்மையில் தனித் தமிழில், தனித் தமிழ்க் கருத்துக்களைக் கொண்டு தம் கவிகளைச் செய்திருப்பரேல் இன்று தமிழ் இலக்கியம் எவ்வளவு வளமுள்ளதாக இருக்கும்!

...கல் வெட்டுகளிலும்கூட வடமொழியைக் கலந்து விட்ட கொடுமை...

தொல்காப்பியம், திருக்குறள் போன்ற பழந்தமிழ் உயிர் நூல்களுக்கு உரை செய்த சேனாவரையர், நச்சினார்க்கினியார், பரிமேலழகர் போன்ற பழைய உரையாசிரியர்கள் வேண்டுமென்றே வலிந்து வடமொழிக் கருத்துக்களைப் புகுத்தித் தமிழ்க் கொலை புரிந்துள்ளனர் என்பது

உலகறிந்த உண்மை. அவர்கள் தூய தமிழ்ச் சொற்களை யெல்லாம் வட சொற்களென்றும், தனித் தமிழ்ச் சொற்களை வட சொல்லாக்கியும் தமிழ்க் கொலை புரிந்தனர். எடுத்துக்காட்டாக தொல்காப்பியச் சொல்லதிகாரம் 398-ம் சூத்திரவுரையில் 'நீர்' என்பது ஆரியச் சிதைவு என்கின்றூர் சேனவரையர். குடிக்கும் நீருக்குங் கூடப்பெயர் தெரியாத நிலையிலா இருந்தனர் தொல்காப்பியர் காலத் தமிழ் மக்கள்! அரங்கம் — ரங்கம், அரத்தம் - ரத்தம், அராகம் — - ராகம், சலம்-ஜலம், தானம் — - ஸ்தானம், தேயம் - தேசம், மாதம்-மாசம் என்பன வெல்லாம் வடசொற்களாக்கப்பட்ட தனித் தமிழ்ச் சொற்களே.

தமிழ்நாட்டுக் கல்வெட்டுக்களெல்லாம் தமிழ் மொழி நன்னிலையில் இருந்தபோது வெட்டப்பட்டவையாகும். ஆனல், அவை வடசொல்லை நூற்றுக்கு எண்பதுக்கு மேற் கலந்து தமிழ் மக்களால் புரிந்துகொள்ள முடியாதபடி எழுதப்பட்டிருப்பதும், அத்தகைய கல்வெட்டுக்கு ஆங்கிலத்தில் விளக்கம் எழுதியிருப்பதும் எத்தகைய தமிழ்க்கொலை! அக் கல்வெட்டுக்களைப் படிக்கும் மாணவர் அக்காலத் தமிழர் நிலை பற்றி எங்ஙனம் எண்ணுவர்?

பி. சா. சுப்பிரமணிய சாத்திரியார் என்பவர் தாம் எழுதிய 'தொல்காப்பிய சொல்லதிகாரக் குறிப்பு' என்னும் நூலில், வடமொழி இலக்கண நூலின் மொழிபெயர்ப்பே தொல்காப்பியம் எனக்கையுமனமுங் கூசாமல் எழுதித் தள்ளியுள்ளார்.

மு. ராகவையங்கார் என்பவர், 'தொல்காப்பிய ஆராய்ச்சி' என்னும் நூலில், தமிழர்க்கு ஒழுக்கம் இல்லை; தமிழ் நாடு போந்த ஆரிய மேலோர் தமிழர்க்கு ஒழுக்க முறை வகுத்துதவினர் எனத் தமிழ் மரபையே பழித்துள்ளனர்.

தேசீய கவி என்னும் சுப்பிரமணிய பாரதியார், தேசீயம் என்னும் பெயரால் வடமொழிக் கருத்துக்களைத் தமிழில் புகுத்தி தமிழ் மக்களுக்குத் தமிழ் இனப்பற்றை அருகச் செய்து வடவர்க்கு அடிமையாகச் செய்தனர்.

வடநாட்டில் தோன்றிய புத்த சமண சமயங்கள், 'இன்னு செய்யாமை' என்னும் மயக்க மருந்தால் தமிழர்களின் மறப்பண்பைப் போக்கித் தமிழ்நாட்டில் அயலாராட்சி ஏற்படும் நிலையை உண்டாக்கின.

இன்று வடவரின் ஆதிக்கத்திலுள்ள தன்னுட்சிக் கட்சி தமிழரின் இனப் பற்று, மொழிப் பற்று, நாட்டுப்பற்று, இன்ன பிறவற்றைப் போக்கி, தமிழ்நாடு வடவரின் ஆதிக்கத்திலிருந்து பிரியாமலும், தமிழ் நாட்டை இந்தி அடக்கியாளவும் தமிழரே துணை செய்யும்படியும் செய்துள்ளது.

இவ்வாறு சங்க முற்காலத்திலிருந்து இலக்கியம், இலக்கணம், சமயம், அரசியல் முதலியவை மூலம் தமிழ்க் கொலை நடந்து வருகிறது, இன்று கலை, கவிதை, கதை, கட்டுரை என்பனவற்றின் மூலம் தமிழ்க் கொலை நடப்பதுபோல.

இவற்றை யெல்லாம் விடச் சிறந்த புதிய தமிழ்க்கொலை யொன்று மதுரைக் கல்லூரி மலர் ஒன்றில் பார்க்க நேர்ந்தது. அதில், மதுரைக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர் திரு ரா. கிருஷ்ணமூர்த்தி பி.ஏ., பி. ஓ. எல்., எல். டி. என்பவர் 'தமிழில் பெண்பால் விகுதி'

என்ற தலைப்பில் கீழ்வருமாறு எழுதியுள்ளார்:

தமிழில் பெண்பால் விகுதி:

"'இ' என்பது தமிழில் பெண்பால் விகுதி என்று கூறப்படுகிறது. உண்மையில் பெண்பால் விகுதி 'இ' அல்ல. அது பெண்பால் விகுதியாயின், 'வில்லி, நாற்காலி' முதலியவற்றில் அப்பொருள் வராதிருப்பதேன்? உண்மை என்னவென்றால், 'இ' என்பது 'ஸ்திரி' என்பதன் சிதைவு. பெரும்பாலும் 'த்தி, ச்சி, ட்டி' என்பனவையே பெண்பால் விகுதிகளா.. வருகின்றன. இவை 'ஸ்திரி' என்பதன் மாறுபட்ட உருவங்கள் என்பது தெளிவு. முதலில் 'ஸ்திரி' யென்பதே பெண்பால் விகுதியாக இருந்து, பிறகு அது சிதைந்து, 'த்தி, ச்சி, ட்டி' என்று மாறியிருக்க வேண்டும். (உதாரணம்) குற—ஸ்திரி—குறத்தி; புலை—ஸ்திரி—புலைச்சி; வெள்ளான்—ஸ்திரி—வெள்ளாட்டி; வலை—ஸ்திரி—வலைச்சி; வண்ணன்—ஸ்திரி—வண்ணாத்தி; ஆய்—ஸ்திரி—ஆய்ச்சி; பார்ப்பான்—ஸ்திரி—பார்ப்பாத்தி; பிராமண—ஸ்திரி—பிராமணத்தி; ராஜா — ஸ்திரி—ராஜாத்தி; பறை—ஸ்திரி—பறைச்சி; பெண்டு—ஆம்—ஸ்திரி—பெண்டாட்டி; கண்—ஆம்—ஸ்திரி — கண்ணாட்டி; பொம்மனாட்டி; கம்மினாட்டி என்பவையும் இவ்வாறே வந்திருக்க வேண்டும்." — இதுதான் அவர்தம் ஆராய்ச்சி உரை.

'இ' என்பது 'ஸ்திரி' என்பதன் சிதைவன்று. 'இ' என்பது 'இ'யேதான். 'ஸ்திரி' என்பது இந்நாட்டுக்கு வருவதற்குப் பன்னெடுங் காலங்கட்கு முன்னிருந்தே 'இ' என்பது தமிழில் பெண்பால் விகுதியாக இருந்து வருகிறது. தமிழிலுள்ள மிகப் பழைய இலக்கண நூல் தொல்காப்பியம். தொல்காப்பியம் தோன்றுதொட்டு வந்த பழந்தமிழர் பழக்க வழக்கங்களை—வாழ்க்கை முறையினை—இலக்கண வகையால் கூறும் நூலாகையால், தொல்காப்பியத்தில் வரும் இலக்கண வழக்கம் தொல்காப்பியத்திற்குப் பன்னெடும் காலத்திற்கு முற்பட்ட தமிழர் வழக்கென்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

தொல்காப்பியச் சொல்லதிகாரத்தில் 'இ' என்பது பெண்பால் விகுதி என்று கூறப்பட்டிருக்கிறது. "பெண்மை அடுத்த இகர இறுதி (163)" பெண்டாட்டி. "இ உ ஐ ஓ என்னும் இறுதி" (120); சாத்தி. "அன பெடைமிகூஉம் இகர இறு பெயர்" (125); தோழி. "பெண்மை சுட்டிய எல்லாப் பெயரும்" (180); சாத்தி, முடத்தி, முடக்கொற்றி. "பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின் ஆண்மை திரிந்த பெயர் நிலைக் கிளவியும்...தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிள

...வடமொழிக் கருத்துக்களைத் தமிழில் புகுத்தி, தமிழ் இனப்பற்றை அருகச் செய்த பாரதியார்...

வியும்" (4); பேடி, தேவி. இவ்வெடுத்துக்காட்டுகள் பழைய உரையாசிரியர்களால் காட்டப்பெற்றவை.

'இ' என்பது, 'ஸ்திரி' என்பதன் சிதைவாயின், "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ எழுத்தொடு புணர்ந்தசொல்லாகும்மே" (401);"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்" (403) என வடசொல் தமிழில் எவ்வாறு வந்து வழங்கும் என இலக்கணம் செய்த ஆசிரியர் தொல்காப்பியர். 'ஸ்திரி' என்பதுதான் 'இ' எனத் திரிந்தது எனச் சொல்லாது விடுவரா? ஒரு சொல்லுக்குப் பகுதியினும் விகுதியிலக்கணம் சிறப்புடையதாகுமன்றே?

ஆசிரியர் தொல்காப்பியர் காலத்தே இடப்பெயர், மக்கட் பெயர் போன்ற சில வடமொழிப் பெயர்ச் சொற்களை அவ்வடமொழியாளர்கள் செய்யும் தமிழ்ச் சொற்களில் வழங்கிவர, அவற்றை எவ்வாறு தமிழ்மொழியில்—தமிழின் ஒலியியல்புக்கேற்ப—வழங்க வேண்டும் என்று ஆசிரியர் விதி செய்தனரேயன்றி சொல்லின் உறுப்பாகும் நிலையில் அன்று வடமொழி தமிழ்நாட்டில் மதிப்புப் பெறவில்லை. இன்னும் அயல் மொழியிடத்து சொல்லின் உறுப்புக் கடன் வாங்கும் அத்தகைய இழிநிலையைத் தமிழ்மொழி அடையவில்லை.

இனித் தொல்காப்பியத்தின் வழிநூலும், வடமொழிக்கு ஆக்கந் தந்ததுமான நன்னூலிலும், "கிளைமுதலாகக் கிளந்த பொருள்களுள் எவ்வொற்று இகரக்கேற்ற ஈற்றவும் தோழி செவிலி...பெண்பாற் பெயரே" (277) என இகரமே பெண்பாற் விகுதியென்று கூறப்பட்டுள்ளது. 'ஸ்திரி' என்பது தான் 'இ' என்றானது என்றால், புதிதாக வடமொழி ஆக்கங் கூறிய நன்னூலார், இதைக் கூறாமலா இருப்பர்?

இகர வீற்றுக்கு எடுத்துக் காட்டாக நன்னூல் உரையாசிரியரும்—ஒருத்தி, அவையத்தி, பொன்னி, குறத்தி, எயிற்றி, ஆய்ச்சி, உழத்தி, மலையாட்டி, சோழூச்சி, கருவூரி, வானத்தி, அகத்தி, புறத்தி, திணிதோளி, சுரிகுழலி, குறுந்தரனி, கூனி, பார்ப்பினி, படைத்தலைவி, தச்சக்கி, பாங்கி, பெண்டாட்டி யென்னும் பெயர்களைக் காட்டியுள்ளனர்.

இவற்றுள், பொன்—இ—பொன்னி, கருவூர்—இ—கருவூரி, தொன்—இ—தோழி, குழல்—இ—குழலி. கூன்—இ—கூனி, பார்ப்பு—இன்—இ—பார்ப்பினி, பாங்கு—இ—பாங்கி என இகரமே விகுதியாதல் காண்க.

இனி, 'த்தி, ச்சி, ட்டி' என்பவையும் 'ஸ்திரி' என்பதன் மாறுபட்ட உருவங்கள் அல்ல. அவை மாறுபடாத இயற்கை உருவங்களே. 'த்தி, ச்சி, ட்டி' பெண்பால் விகுதிகள் அல்ல. அவற்றின் ஈற்றிலுள்ள 'இ' என்பதே பெண்பால் விகுதியாகும். குற—த்—த்—இ—குறத்தி. குற—பகுதி. த்—சந்தி. த்—எழுத்துப் பேறு. இ—பெண்பால் விகுதி. வலைச்சி—வலைச்—ச்—இ. இதுவும் அவ்வாறே. பெண்டாட்டி—பெண்டு—ஆட்டி. ஆள் த்—இ. த்—எழுத்துப் பேறு. பெண் தன்மையை ஆள்பவள்.

'த்ச்ட்' என்னும் வல்லொற்றுக்கள் தமிழில் மொழிக்கு முதலில் வாராமையும், 'த்தி, ச்சி, ட்டி' என்பவை விகுதிகள் அல்ல, அவை, 'ஸ்திரி' என்பதன் திரியும் அல்ல என்பதற்குச் சான்றாகும்.

இனி, நன்னூலார் கொள்கைப்படி (நன்-141), குற—த்—த்—இ. த்—சந்தி. த்— பெயரிடைநிலை எனக் கொள்ளினும், இடைநிலையையும் (த்), சந்தியையும் (த்) சேர்த்து விகுதி எனவும், அது 'ஸ்திரி' என்னும் வடசொல்லின் திரிபெனவும் கூறும் ஆராய்ச்சித்திறன் வெகு அழகிது!

வடமொழியிலும், 'ஸ்திரி' என்பது பெண்பாலைக் குறிக்குமேயன்றிப் பெண்பால் விகுதியன்று. பரஸ்திரி—அயல்பெண்; அல்லது அயலான் பெண். பிராமண ஸ்திரி—பிராமணப் பெண். ஸ்திரி என்பதற்கு நேரான 'புருஷன்' என்னும் வடசொல் ஆண்பாலையே உணர்த்துகிறது. புகைவண்டிப் பேட்டைகளிலுள்ள கழிவிடச் சுவர்களில் காணலாம், 'ஸ்திரிகள், புருஷர்கள்' என்று எழுதியிருத்தலை.

'ஸ்திரி' என்பது 'இ' என்னும் பெண்பால் விகுதி ஆனால், 'புருஷன்' என்பது 'ஆன், ஆன்' என்னும் ஆண்பால் விகுதிகள் ஆகவேண்டும். அதாவது குற—ஸ்திரி—குறத்தி எனின், குற—புருஷன்—குறவன் என்றாக வேண்டும். ஆண்பாலைக் குறிக்கும் புருஷன் என்னும் வடசொல் தமிழில் ஆண்பால் விகுதியாகத் திரியாமல், பெண்பாலைக் குறிக்கும் 'ஸ்திரி' என்னும் வட சொல்மட்டும் எப்படித் தமிழில் பெண்பால் விகுதியாகத் திரியும்?

குற, புலை, வலை, ஆய், பறை எனச் சிலவற்றைப் பகுதியாகவும் வெள்ளான், வண்ணான், பார்ப்பான் எனச் சிலவற்றை ஆண்பாலாகவும் கொள்ளுதல் பொருத்த மற்றதாகும். வெள்ளான்—ஸ்திரி—வெள்ளாட்டியன்று. வெண்மை அல்லது வெள்ளை — ஆட்டி, வெள்—ஆட்டி—வெள்ளாட்டி. ஆட்டி—ஆள்—தி. தி—த்—இ.

வண்ணான் — ஸ்திரி— வண்ணாத்தி என்பது போல, குறவன்—ஸ்திரி— குறத்தி. வலையன்—ஸ்திரி—வலைச்சி. பறையன்—ஸ்திரி—பறைச்சி என்றே காட்டவேண்டும். ஆண்பால் சொல் பெண்பால் விகுதி சேர்ந்து பெண்பால் சொல் ஆகிறது என்பது, ஆதாம் என்னும் ஆதிமகனின் விலா எலும்பை ஒடித்து ஏவாள் என்னும் ஆதி மகளைக் கர்த்தன் உண்டாக்கினார் என்னும் விவிலிய நூற்கூற்றுப் போன்றதேயாகும்.

பார்ப்பு—ஆன் — பார்ப்பான்; பார்ப்ப — ஆ — த்—த்—இ— பார்ப்பாத்தி. ஆ—சாரியை.

எது கேவலம்?

நல்ல நிலைமையில் இருந்த ராமன் ஏழையாகப் போய் மிக மட்டமான ஒரு சிற்றுண்டி விடுதியில் 'சர்வ'ராக அமர்ந்தான். ஒரு நாள் அவன் நண்பன் அந்த ஓட்டலுக்கு சிற்றுண்டி அருந்த வந்தான். ராமனைக் கண்டதும் "உன் நிலைமை இவ்வளவு கேவலமாக ஆகிவிட்டதா? இந்த மட்டமான ஓட்டலில் சர்வராக இருக்கும்படி ஆகி விட்டதா?" என்றான்.

அதற்கு ராமன், "என் நிலைமை மோசமாகத்தான் ஆகிவிட்டது! ஆனால் இந்த ஓட்டலில் காப்பி சாப்பிடும்படி அத்தனை மோசமாகவில்லையே!" என்றான்.

பாப்பு—இன்—இ—பார்ப்பனி; அன்—சாரியை. பெண்டாட்டி பெண்டு—ஆட்டி. ஆட்டி — ஆள்—த்—இ என்பதல்லாமல், ஆட்டி என்பதே பெண்ணைக் குறிப்பதும் உண்டு. மனை யாட்டி, திருவாட்டி, பெரு மாட்டி, அயலிலாட்டி எனக் காண்க. பொம்மனாட்டி, கம்மி னாட்டி என்பன அக்கிரகாரச் சொற்கள். பொம்மன் ஆட்டி— பெண்டாட்டி. கம்மினாட்டி— கைம்பெண்டாட்டி.

இனி, "'இ' பெண்பால் விகுதியாயின் 'வில்லி, நாற்காலி' முதலியவற்றில் அப்பொருள் இல்லாதேன்?" என்பதும் ஆராய்ச்சியில்லாத வினாவே யாம். இகரம் பெண்பால் விகுதி யென்றால் மற்ற இடத்தில் வரக் கூடா தென்னும் வரையறை யில்லை. அவ்வாறு இலக்கண அமைவும் இல்லை.

நம்பி, சென்னி, கிள்ளி, அத்தி என இகர விகுதி ஆண்பாலி லும்—முள்ளி, முக்காலி என அஃறிணையிலும் வரும். உண்டி, தின்றி, உரைத்தி (தொல், சொல்-223) என முன்னிலை ஏவல் வினையிலும் வந்துள்ளது.

ஒரு விகுதி ஒரே பாலில் வர வேண்டுமென்பதில்லை. இகர விகுதி—ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால், முன் னிலை ஏவல்வினை ஆகிய இடங் களில் வந்திருப்பது போலவே, 'அன்' என்னும் விகுதி நடந்த னன் (அவன்), நடந்தனன் (யான்) எனப் படர்க்கை, தன்மை ஆகிய இரண்டிடங் களில் துளது. உண்பல் (யான்), உண்ணல் என, 'அல்' விகுதித் தன்மையிலும் தொழிற் பெயரி லும் வந்துள்ளது.

"முதலில், 'ஸ்திரி' என்பதே பெண்பால் விகுதியாயிருந்தது" என்பது, வடமொழியிலிருந்து தமிழ்மொழி உண்டானது என் னும் பொருந்தாப் பொய்க் கூற்றை உட்கொண்ட பொருந் தாக் கூற்றாகும். அதை உண்மை யென்றே வைத்துக் கொள் வோம். தமிழ் வடமொழியி லிருந்து பிறந்தபோது 'குறஸ் திரி' என்று வழங்கினதென் றால் அது எப்படித் தமிழாகும்? மணிப்பிரவாளமன்றோ ஆகும்? யார், எப்போது, எதற்காகக் 'குறஸ்திரி' என்பதைக் 'குறத்தி' எனத் திரித்தனர்? ஆரிய மக்கள் இந் நாட்டுக்கு வருமுன், தங்கள் மொழிக்கு எழுத்தின்றி 'எழு தாக்கிளவி' என்று கூறிக் கொண்டிருந்த அக்காலத்தி லேயே தமிழ்மொழி சீருஞ் சிறப்புடன், திணை, பால், எண், இடப் பாகுபாட்டுடன் விளங்கி வந்ததென்பதை அறியாத இவர், அறிந்திருந்தாலும் ஒப்புக் கொள்ள மனமில்லாத இவர், 'முதலில் 'ஸ்திரி' என்பதே பெண்பால் விகுதியாக இருந் தது' என்பது எவ்வளவு பொருந்தப் புளுகல்! அதற்கு என்ன சான்று? தமிழில் தனித் தனிப் பாலுணர்த்தும் ஈறு இருப்பதுபோல வடமொழியில் இல்லாதிருக்க, வடமொழி 'ஸ்திரி' பெண்பால் விகுதியாய் இருந்து பிறகு சிதைந்தது என் பதும் பொருந்தாக் கூற்றாகும்.

மறுமலர்ச்சியுறும் மனத்தை யுடைய மாணவர் படிக்கும் கல்லூரி மலரில், இவ்வாறு உண்மைக்கு மாறான ஒன்றை, மாணவமணிகள் ஆர்வத்துடன் அன்பு கொண்டு படிக்கும் தமிழ் மொழிக்குத் தாழ்வுண் டாக்கும் வகையில் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் எழுதுவ தென்பது தமிழின் பயக் குறையேயாம் — என்று இக் குறையினின்றும் தமிழன்னை வீடு பெறுவாளோ! ஃ

ஸ்ரீமான் அதிருப்தி

கே.எ. மதியழகன் பி.ஏ.,

ஒரு ஊரில் ஒரு வாலிபர் இருந்தார். ரொம்பவும் நேர்மையாளர். உலகம் வாழ வேண்டும்; சகலரும் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் — என்ற உயர்ந்த தத்துவம் அவர் உள்ளத்தில் குடி கொண்டது. நாட்டு மக்களின் அலங்கோலத்தையும் சீரழிவையும் கண்டு கவலை கொண்டார். அவர்களை வேதனைச் சேற்றிலிருந்து ஈடேற்ற வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார். பொது வாழ்வில் குதித்தார்.

''என் உடன் பிறந்தோரே! என் நாட்டவரே! அன்னைமீர்! தந்தைமார்களே! உமது விடுதலை — விமோசனம் உம்மிடம் தான்—உமது தூங்கும் ஆற்றலில்தான்— உமது கர வலிவால் தான் இருக்கிறது!'' என்று பிரசங்கமாரி பொழிந்தார்.

''உழைப்பு—அந்த உழைப்பு கல்லும் முள்ளும் நிறைந்த இடத்தை கவின் மலர்ச் சோலையாக்கும். கட்டாந் தரையில் கனகமணி மாளிகையை எழுப்பும். ஆற்றிற்கு அணைபோடும். வயலையும் வாய்க்காலையும் காட்டும். அறுவடையின் ஆனந்தம் உழைப்பிலேதான் உற்பத்தியாகிறது!''— இப்படி இடி முழக்கம் செய்தார்.

''அச்சம் — பயம்—அதுதான் ஆட்கொல்லி! அவனியில் அச்சப் படுவதற்கு அச்சத்தைத் தவிர வேறொன்றுமில்லை. அச்சத்திற்கு அடிமையாகிவிடாதீர்கள். அச்சத்தை துச்சமென மதியுங்கள்!'' என எச்சரித்தார்.

வாலிபர் வாய்ச் சொல் வீரராக இல்லை. தமது எடுத்துக்காட்டு மக்கள் மனதில் எழுச்சியை உண்டு பண்ணும் என்று கருதி கடுமையாக உழைத்தார். அவரது செயல்களில் அச்சம் தலைகாட்டவில்லை. அஞ்சாமை ஒளி விட்டது. அவரது எடுத்துக்காட்டோ, எழுச்சியோ மக்கள் மனதில் இம்மியளவும் மாறுதலை உண்டுபண்ணவில்லை. அவர்கள் தங்கள் வழியிலே நடந்தனர். உழைப்பைப் பற்றிய உபதேசம் அவர்களை ஒன்றும் செய்யவில்லை. செயலற்ற தன்மை அவர்கள் இரத்தத்தோடு இரத்தமாய் கலந்திருந்தது. அச்சத்திலிருந்து அவர்கள் விடுபடவில்லை. அவர்கள் இதயங்களில் திருமதி நம்பிக்கையின்மை நர்த்தனம் புரிந்தாள். அவளது திரு நடனம் பல தலைமுறைகளாக, ஓயா

மல் ஒழியாமல் நடைபெற்றுக் கொண்டே யிருந்தது.

வாலிபரின் உள்ளத்தில் தோல்வி மேகங்கள் சூழ்ந்தன. மக்களைப் பற்றிய நம்பிக்கையில் மனமொடிந்தார். திருமதி நம்பிக்கையின்மை அவரையும் கனவில் அடிக்கடி ஆலிங்கனம் செய்தாள். தனது நெடுநாளைய முயற்சி வீணே என்ற திகில் அவரது இதயத்தை பிழிந்தெடுத்தது. எதிலும் அவருக்கு நிறைவு ஏற்படவில்லை. அவரது செயல்கள் புதிய மாறுதலைப் பெற்றன. காணும் எல்லாப் பொருள்களிலும் அதிருப்தி கொண்டார். மனைவி அன்பாக அறுசுவை உணவு தயாரித்திருப்பாள். கணவனின் பாராட்டுதலால் தனது கடும் உழைப் பெல்லாம் பஞ்சாய்ப் பறந்துவிடும் என்று காத்திருந்து பரிவுடன் படைத்தாள்.

வாலிபர், "உப்புப் போதவில்லை, காரம் குறைவு, கசப்பு அதிகம்!" என்று அதிருப்தி விருத்தம் பாடுவார்.

குழந்தைகள் அப்பாவிடம் கொஞ்சி விளையாடலாம் என்று குதூகலித்து ஓடிவரும். களங்கமற்ற தங்க மதலைகளிடம் எரிந்து விழுவார்.

நண்பர் எவராவது அலுவலகத்தில் மேலதிகாரி செய்யத் தவறிய வேலைக்காக சினந்து கொண்டதை எடுத்துச் சொன்னால் "அதிகாரிக்கு உமது திறமையில் பொறாமை!" என்னு புதுக் காரணம் கூறுவார்.

நகரசபை புதிதாக ஒரு தெருவிற்கு மின்சார விளக்கு போட்டால் அதற்கும் ஒரு வியாக்யானம் சொல்வார். "இந்த வட்ட உறுப்பினர் வருகிற தேர்தலிலும் ஜெயிக்கசெய்கிற சூழ்ச்சி" என்று சொல்லிவைப்பார்.

வேறு ஏதாவது ஒரு வட்டத்தில் பாதைகள் சீர்படுத்தப்படாமல் இருந்தால் அந்த வட்டத்துப் பிரதிநிதி, அடுத்த தேர்தலில் நிற்கப் போவதில்லை என்று சொல்லி வைப்பார்.

கடும் வெயிலுக்கு ஒரு காரணம் கூறுவார்.

கொடு மழைக்கு வேறொரு காரணம் சொல்லுவார்.

சுருக்கமாக எதற்கும்காரணம் காட்டினார். அவரது உரையிலும் செயலிலும் அதிருப்தி பரவியிருந்தது. அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அவரை அணுகவே அஞ்சி நடுங்கினர். ஸ்ரீமான் அதிருப்தி என்பதே அவருக்குப் பெயராக மாறிவிட்டது. ஸ்ரீமான் அதிருப்தி மக்கள் கூட்டத்தில் ஒருவராக மக்கி மடிந்து விடுவாரோ என்ற நிலை வந்துவிட்டது. திருமதி நம்பிக்கையின்மை அவரிடம் அவ்வளவு இடம் பிடித்துவிட்டாள். நெடுநாளாகவே அவரை கவனித்துக் கொண்டிருந்த முதியவர் திருவாளர் அனுபவம் ஒருநாள் ஸ்ரீமான் அதிருப்தியிடம் அவராகவே பேச ஆரம்பித்தார்.

"தம்பி, நேர்மை மட்டும் போதாது. தோல்வி மாளிகைகளின் சுவர் முழுவதும் நேர்மை என்ற செங்கற்களால்தான் கட்டப்பட்டிருக்கிறது. உனது வழிதான் தவறு. உனது உழைப்பின் மேன்மை பற்றிய உபதேசமோ உனது செயல் முறையோ எழுச்சியை உண்டுபண்ணவில்லையென்றால் அது அவர்கள் தவறல்ல. மக்களே அப்படித்தான்!" என்று சொல்லி நிறுத்தினர்.

"வேறு என்ன வழியாம்?"— ஸ்ரீமான் அதிருப்தி கேட்டார்.

சிரித்துக்கொண்டே திருவா

ளர் அனுபவம் சொன்னூர்: "ஏன்; வழியா இல்லே? குறுக்கு வழி—அது எப்போதும் இருக்கிறது. அது ஒருபோதும் தோற்றதில்லே. உனக்கு காந்தியார் தெரியுமல்லவா?"

"என்ன, அப்படி கேட்கிறீர்கள்? காந்தியாரைத் தெரியாதவர் இந்தியப் பூபாகத்தில்..."

"அதற்காகச் சொல்லவில்லே. அவரது முறைகள்...?"

"அவரது முறைகள் எனக்குப் பிடிக்காது. பழங்காலத்தவை. காட்டுமிராண்டிக் காலத்தவை என்பது என் கருத்து."

"புரிகிறது. அவைகளே உனக்குப் பிடிக்காது. ஏனெனில் கெட்டவைகள். கெட்டவர்களிடமிருந்தும் சில வேளேகளில் நல்ல பாடங்களே— படிப்பினேகளேப் பெறமுடியும்; இல்லேயா?"

"ஆமாம்!"

"காந்தியார் சுயராஜ்யம் வேண்டும் என்று எண்ணிய போது, கடுமையாக உழையுங்கள் என்று சொல்லவில்லே. 'தண்டி கடற்கரையில் போய் உப்பு எடுங்கள்; சுயராஜ்யம் வந்துவிடும்' என்ருர்!"

"கோமாளிக் கூத்து!" என்ருர் ஸ்ரீமான் அதிருப்தி.

"மெத்த சரி. ஆனல் சுயராஜ்யம் வெற்றி பெற்றது!" என்று நிறுத்தினர் அனுபவம்.

ஸ்ரீமான் அதிருப்தியின் சிந்தனே வேலேசெய்ய ஆரம்பித்தது.

திருவாளர் அனுபவம் தமது உரையாடல் வெற்றிப் பாதையில் அடியெடுத்து வைக்கிறது என்று புரிந்துகொண்டார்.

"ஹிட்லரைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்ருர்.

"பரம அயோக்கியன். அக்ரமக்காரன். அழிவை ஏவிய அரக்கன். நாசத்தின் நண்பன். நல்லவர்களேப்பற்றிப் பேசுங்கள்!"

"பொறு தம்பி, ஆரம்பத்திலேயே சொன்னேனே அயோக்யர்களிடமும் சில நல்ல படிப்பினேகளே நாம் பெற முடியுமென்று. அதற்குள் மறந்துவிட்டாயா?"—திருவாளர் அனுபவம் விடுவதாயில்லே.

"ஜெர்மனியில் ஹிட்லருக்கு முன் எத்தனேயோ தலேவர்கள் கடுமையாக உழையுங்கள்; பாலம் கட்டுங்கள்; தொழிற்சாலே நிறுவுங்கள்—என்று உன்னேப்போல் உபதேசித்தார்கள். மக்கள் எங்கே கவனித்தார்கள்? ஹிட்லர் 'ஜெர்மனிய மக்களே! நீங்கள் ஆளப்பிறந்தவர்கள்; மற்றவர்கள் அடிமையாக சாகப் பிறந்தவர்கள். நீங்கள் அரசகுலம்' என்ருன். தீப்பிடித்துக் கொண்டது. ஜெர்மனி விழித்துக்கொண்டது!" என்ருர்.

"அவனுல் அவனிக்கு நேர்ந்த ஆபத்து...?" என்ருர் ஸ்ரீமான் அதிருப்தி.

"அது வேறு கதை. வெற்றியின் குறுக்கு வழிக்கும் அதற்கும் சம்பந்தமில்லே!" என்று நிறுத்தினுர் அனுபவம்.

மௌனம் நிலவியது. அருகே கிடந்த 'தீபாவளி மலர்' ஒன்றின்மீது திருவாளர் அனுபவத்தின் கவனம் பாய்ந்தது. அதனே எடுத்து வைத்துக் கொண்டு புரட்டினுர்.

ஒரு பக்கத்தைக் காண்பித்து, "இந்தப் படத்தைப் பாருங்கள்" என்ருர்.

அது ஓர் அழகிய வனிதை கூந்தலேக் கோதிக்கொண்டு, மெல்லிய ஆடை காற்றிலே பறக்க நின்று கொண்டிருந்த படம்.

வேறு ஒரு பக்கத்தைத் திருப்பினார். "இதனையும் பாருங்கள்" என்றார். அதுவும் வேறொரு பெண்ணின் படம்தான். ஆனால் அவளது முகமண்டலம் மட்டும் பளபளப்பாக காட்டப்பட்டிருந்தது. திருவாளர் அனுபவம் பேச்சைத் தொடர்ந்தார்.

"இந்தப் படங்கள் இந்த மலரிலே போடப்பட்டிருப்பது அழகியின் கூந்தலலங்காரம் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கல்ல; வனிதையின் வதனம் தீட்டப்பட்டிருப்பது அழகிய பெண்ணின் புருவம் இப்படித்தான் இருக்கவேண்டும்; கன்னங்கள் குழிந்திருக்க வேண்டும் என்ற இலக்கண விமர்சனத்திற்கல்ல. முன்னது ஒரு 'பம்பு செட்'டின் விளம்பரம். பின்னது 'எவர் சில்வர்' பாத்திரத்தின் விளம்பரம்!"

"விளம்பரப் பொருள்களுக்கும் அங்கு போட்டிருக்கும் உருவங்களுக்கும் உள்ள தொடர்பு சரியாக விளங்கவில்லை.

" ஸ்ரீமான் அதிருப்தி தமது சந்தேகத்தை வெளியிட்டார்.

"தொடர்பு இருந்தாலல்லவா, விளக்குவதற்கு? தொடர்பே கிடையாது!" என்று ஒரு போடு போட்டார் திருவாளர் அனுபவம்.

"வாங்குபவன் உள்ளத்தில் மகிழ்ச்சியான எண்ணங்களை உண்டுபண்ணவேண்டும். அந்த சௌந்தர்யமான சூழ்நிலையில் 'பம்பு செட்' எவ்வளவு தண்ணீர் இறைக்கும்? 'எவர் சில்வர் பாத்திரங்களின் பளபளப்பும் உறுதியும் எத்தனை நாளைக்கு நீடிக்கும்? என்ற நினைப்பிற்கு நேரமிருக்கக்கூடாது. இதுதான் சூட்சமம்! என்றார்.

ஸ்ரீமான் அதிருப்தி விழுந்து விழுந்து சிரித்தார். திருவாளர்

சலவைக்கல் சமாதி!

இறந்துவிட்ட நாய் ஒன்றை புதைத்த இடத்தில் பெரிய சலவைக் கல் சமாதி கட்டுகிற செய்தி கிடைத்திருக்கிறது.

இறந்து போனது அப்படி ஒன்றும் சாதாரண நாயல்ல!

பீஹார் அரசாங்கத்தைச் சேர்ந்த துப்பறியும்நாயாம் அது—பெயர் ரெக்ஸ்.

மூன்று ஆண்டுகள் திறமையுடன் வேலை செய்த அந்த ரெக்ஸ் பாட்னாவிலும், இன்னும் அநேக இடங்களிலும் முப்பத்தோரு பெருங் குற்றங்களைக் கண்டுபிடிக்கப் பேருதவி புரிந்ததாம்.

காகவுல் என்னும் இடத்தில் குற்றக் கண்டுபிடிப்பில் ஈடுபட்டிருந்த போது அதற்கு உன்மத்த நோய் கண்டது— விரைவிலேயே இறந்தது.

"போலீசாரின் உற்ற நண்பனாக இருந்த சகத் தொழிலாளி ஒருவன் இறந்து விட்டதாக நான் உணர்கிறேன்" என்றாராம் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், பிணத்திற்கு மாலையிட்டு, அதன் மரணத்திற்கு மரியாதை தெரிவிக்கும்போது.

"நித்திய உறக்கத்தில் ஆழ்ந்துள்ள — எங்கள் பேரன்புக்குரிய — இனிய குணம் பொருந்திய ரெக்சின் ஞாபகார்த்தமாக"

—அந்த சலவைக்கல் சமாதியிலே இந்த எழுத்துக்கள் காணப்படுகின்றன!

அனுபவம் அன்றாட அரசிய லுக்கே வந்துவிட்டார். "பாத் திரக் கடைக்காரன் மட்டுமல்ல; பெரும் நாடுகளேகூட இந்தத் திருப்பக் கலையில் கைதேர்ந்து விட்டன!" என்றார்.

ஸ்ரீ அதிருப்திக்குப் புரியவில்லை. திருவாளர் அனுபவம் சொன் னார், "இப்போதெல்லாம் இயற் கைச்சந்திரனுக்கு மதிப்பு போய் செயற்கைச் சந்திரன்களுக்கல் லவா மதிப்பு வந்துவிட்டது! ரஷ்யா ஒரு செயற்கைச் சந்தி ரன்பறக்கவிட்டால் அமெரிக்கா மற்றொரு செயற்கைச் சந்திரன் பறக்கவிடுகிறது. இவைகளும் கவனத்தைத் திருப்புவதுதான். பத்து நாளைக்கு முன்புகூட அமெரிக்கா புதிய சந்திரனைப் பறக்கவிட்டது."

"இவைகளிலெல்லாம் எனக் குக் கவர்ச்சி இல்லை"—ஸ்ரீ அதி ருப்தி நொந்துகொண்டார்.

"உமக்குக் கவலையோ கவர்ச்சியோ இல்லாமல் இருக் கலாம். ஆனால் இந்த திருப்ப விஷயங்களில் மக்கள் அக் கறை காட்டுகிறார்கள். சென்ற வருடத்தில் உலகில் நடந்த முக் கிய நிகழ்ச்சி என்ன என்று பெரிய அறிஞர்களைக் கொண்டு ஒரு போட்டி நடத்தினார்கள். பெரிய நிகழ்ச்சி 'செயற்கைச் சந்திரன்' என்று பதில் வந்தது. காட்சிப் பொருளாகவோ, கண்டுபிடிப்பாகவோ அவைக ளின் முக்கியத்துவத்தை யாரும் புறக்கணிக்கமுடியாது!" என்று ஆவேசமாய்ச் சொன்னார்.

"செயற்கைச் சந்திரன்கள் சுற்றுகின்றன. ஆனால் மக்கள் அதைமட்டும் கவனிப்பதில்லை. மக்கள் சமத்துவம், அரசியல் தத்துவம், ஜனநாயகம், கம்யூ னிஸம், ரஷ்ய முறை, அமெரிக்க வழி ஆகியவை பற்றி தங்கள் மனதை விவாத மண்டபமாக் கிக்கொள்கிறார்கள்!"

"கொஞ்சம்கூட பொருத்த மில்லை. தொடர்பும் இல்லை!"— ஸ்ரீமான் அதிருப்தி உரக்கக் கூவினார்.

"ஆனால் எவ்வளவு பெரும் வெற்றி!பெறவேண்டியபாடம்! நோக்கம் எதுவாயிருந்தாலும், பொதுமக்களின் கவனம் வேறொரு திக்கிலே திருப்பப்பட வேண்டும். அந்த நேரம், கவர்ச்சியின் விளைவாய் அறு வடை பெறவேண்டும். அது தான் சாரம்!" என்றார் திருவா ளர் அனுபவம்.

"ஐயா பெரியவரே! உமது குறுக்கு வழி அவ்வளவு அழகா யில்லை. ஆனால் அனுபவம் மிக் கவர் நீர். யோசிக்கிறேன்," என்றார் ஸ்ரீமான் அதிருப்தி.

"எனது வேலை முடிந்துவிட் டது!" என்று நடையைக் கட்டி னார் திருவாளர் அனுபவம்.

●●●

ஆசையே...பொல்லாது!

ஆசையிலிருந்து பிறக்கின்ற எண்ணங்களும், அவற்றின் தொடர்பான செயல்களும் எவ்வளவு பைத்தியக்காரத் தனமாக இருக்கின்றன! ஆனால், அவை அசட்டுத்தனம் என்பது அப்போது நமக்குப் புலப்படுவதில்லை. பின்னால் நினைத்துச் சிரித்துக் கொள்கிறோம்; வெட்கப் படுகிறோம்!

—எமர்சன்

ஆத்மா சாந்தியடைய...!

நாஞ்சில் கி. மனோகரன் எம். ஏ.,

"மல்லி"—பரமசிவம் கூப்பிட்டார். குரலிலே கடுமை தொனித்தது!

"இதோ வந்துவிட்டேன்!"—மல்லிகா சாதாரணமாகப் பதில் சொன்னாள். அதைத் தொடர்ந்தும் ஏதோ சொன்னாள். அவர் காதுகளுக்கு அவைகள் விழவில்லை. வந்த வார்த்தைகளைத் தொண்டைக்குள்ளே அழுத்திக்கொண்டாள்.

"எவ்வளவு நேரமாகக் கூப்பிடுவது?"—பரமசிவம் சொல்லி முடிப்பதற்குள் அங்கு வந்து நின்றாள். கண்களிலே அச்சம்! அவளுக்கேனோ உடம்பு நடுங்கியது. பதைத்தாள்.

"கூடத்தைக் கூட்டினாயா? தாழ்வாரத்திலே கிடந்த குப்பைகளை யார் அகற்றுவது? மேஜை மேலேயிருந்த புத்தகங்களை ஏன் ஒழுங்குபடுத்தவில்லை? ஊதுபத்தி கொளுத்தி வைக்க தினமும் சொல்லத்தான் வேண்டுமா? மாட்டியிருக்கின்ற கண்ணாடியை வாரத்திற்கு ஒரு முறையாவது சுத்தம் செய்யக் கூடாதா? அதன் பக்கத்திலே தொங்கும் உன் எஜமானியின் படம் சாய்ந்து கிடக்கிறதே—நிமிர்த்தி வைக்க எத்தனை நாள் சொல்வது? சீ! நீ சுத்த சோம்பேறியாயிருக்கியே!...மல்லி!... மல்லி!..."—கூப்பிட்டுக் கொண்டே அவளது பக்கத்திலே போனார்!

மருண்ட மல்லியின் கால்கள் துரித நடைபோட்டு அறையை விட்டு வெளியேற முயன்றன! வெடுக்கென்று கையை எட்டிப் பிடித்தார்! "ஓ"வென்று கத்தினாள்! அவள் வாயைக் கையாலே அழுத்தினார்!

"ஏன் வெட்கப்படுறே?"—பரமசிவம் பாகு மொழி புகன்றார்; பாவாடைக்காரி தன்னை விடுவிக்கத் திமிறினாள்!

நடைபெற்ற போராட்டத்தில் மல்லிதான் வென்றாள். அறையை விட்டே தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டாள்; அடுக்களை நோக்கி! பரமசிவம் சிரித்தார். பொக்கை வாய் மலர்ந்தது. வாய்ப்பு இன்றைக்கில்லாவிட்டாலும் நாளை—நம்பினார்! அவர் நம்பிக்கை அவரை என்றைக்கும் கைவிட்டதில்லை.

பரமசிவம் சமுதாயத்திலே செல்வாக்கு பெற்றவர். வயது சொற்பந்தான். சென்ற ஆண்டுதான் அவரது 'சஷ்டியப்தப் பூர்த்தி' நடந்து முடிந்திருந்தது. வழக்கம்போல் அவரும் பக்திமான். கோயிலில்லா ஊரில் குடியிருக்கக்கூடாது என்பதற்கு விளக்கம் தர வேண்டுமானால், ஏழு நாட்கள் தேவை என்று கணக்குப் போட்டுக் காட்டி,

அந்தக் காரணத்தினுலேயே கேள்வி கேட்டவனின் வாயை அடைத்தவர். திருநீறுக்கிருக்கின்ற 'மகத்துவ'த்தை அந்தப் பகுதியில் அறிய பேருதவி புரிந்தவர்.

'திருடர்க்கழகு திருநீறு அணிதல்' என்று ஊரிலே எவனே ஒரு வாலிபன், யார் பேச்சையோ கேட்டுச் சொன்னுன். அவன் கெட்டுப் போகிருன் என்பதற்காக அவனே ஊரைவிட்டே விரட்டி, சமுதாயத்தைக் காப்பாற்றியவர்.

அவருக்கு ஏராளமான சொத்துக்கள் இருந்தன! அதை அவர் அடைந்த விதத்தை பாதிக்கப்பட்டவன் ஒருவன் வெளியே சொன்னுன்! மூன்ருவது நாள் சொன்னவன் கொலை செய்யப்பட்டான்! யார் காரணம் என்பதைத் தீவிரமாகத் தேடியும் துப்புத் துலங்காத காரணத்தால், அப்பால் கைவிடப்பட்டது. அந்தக் கொலையாளியைக் கண்டு பிடிக்க போலீஸிற்கு உறுதுணையாக இருந்தவர், பரமசிவம் பிள்ளை. அவ்வளவு சமர்த்தர் அவர்!

அவரது மனையாட்டியை சென்ற ஆண்டு ஆண்டவன் அழைத்துக் கொண்டார். "என்னை விட்டுப் போறியே; இனி நான் யாருக்காக, யாரை நம்பி வாழ்வேன்?" என்று கேட்டு அன்று கதறினுர்.

"என்னையும் ஆண்டவன் அழைக்கக் கூடாதா? ஐயோ, பகவானே! பக்தனைச் சோதிக்கிறீர்களா? பரந்தாமா, புறக்கணிக்காதே! இந்தப் புல்லனைத் தழுவிக் கொள்!"—தழுதழுத்த குரலிலே பரமசிவம் அன்று கதறினுர். அவரது சமுதாயப் பணி இன்னும் கொஞ்சம் பாக்கி யிருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்ட இறைவன் அவரை அணைக்க மறுத்தான். அதை அவரே சொல்லி திருப்தி அடைந்தார்!

"பக்திமான் பரமசிவம் பிள்ளை நல்லவர்!"—நாட்டிலே அவருக்குக் கிடைத்த வாழ்த்துக்கள் இவை!

"பிள்ளையா? அடேயப்பா! பாவாடைக்காரியிலே யிருந்து—படு கிழவிவரை பதம் பார்க்கிற படு கிழமாயிற்றே அது!"—அவரை நெருங்கிப் பழகித் தெரிந்துகொண்டவர்கள் முழக்கிய வாழ்த்தொலி.

அன்று மல்லிகாவின் கையைப்பற்றி இழுத்த நேரத்தில், அவரது விலங்குணர்ச்சி, இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் சாகாமல், வாலிபத் துடிப்போடு தொடர்ந்தது. அதைக் காப்பாற்றிக்கொள்ள சூரணங்கள் என்ன; லேகியங்கள் என்ன; கஷாயங்கள் என்ன; 'அரிஷ்டங்கள்' என்ன;—மாத்திரைகள் என்ன; 'டானிக்'குகள் என்ன; அத்தனையும் சுவைத்தார். சித்தமும், ஆயுர்வேதமும், ஹோமியோபதியும், அலோபதியும், அவரது உடம்பில் சங்கமமாயின! அடிக்கடி ஊசிகள் உடம்பைத் துளைக்கும், டாக்டர்கள் கை வலிக்கின்றவரை! ஆனுல் பிள்ளையின் உள்ளம் மட்டும் வலிக்கவில்லை; சோர்வே தட்டுவதில்லை!

வாழ்க்கை—அது அனுபவிப்பதற்கே—அது அவரது குறிக்கோள்! அனுபவிக்க ஆரம்பித்த பிறகு வரம்பு முறையும், கட்டுப்பாடும் முட்டாள்தனமானது என்பது அவரது சித்தாந்தம்!

அழகை ரசிக்கிறேம்; சுவைக்கிறேம்; பருகுகிறேம்! மல்லியானுல் என்ன; சூரியகாந்தியானுல் என்ன; காட்டு ரோஜாவானுல் தான் என்ன?

உணர்ச்சி அலையிலே மிதக்கிறேம். அங்கே சாதியேது; சமூதாயம் ஏது? மொழியேது; மதமேது? பருவமேது; பக்குவமேது?... கவலைப்படக் கூடாது. பிள்ளை தனது கடைசிக் காலத்தில் பிழிந்தெடுத்த அனுபவச் சாறு இது!

மல்லிகா மலர்ந்து வரும் முல்லை; பிள்ளை உதிர்ந்து விழப் போகும் சருகு! அவள் எழு ஞாயிறு; அவர் சரிந்து, சாய்ந்து விழப்போகும் பகலவன்!

●

அன்று காலையிலே குளித்துவிட்டு, ஈர ஆடையோடு, பூஜை அறையை நோக்கி வந்துகொண்டிருந்தார். பொழுது இன்னும் புலரவில்லை. இருள் கட்டுக் குலையாமலே இன்னுமிருந்தது. குளிர் அவரை நடுக்கியது— உடம்பு விறைத்தது. பூஜையறையை நோக்கி சென்ற அவரது கால்கள் அடுக்களை நோக்கி நகர்ந்தன!

வாசல் பக்கம் சென்று பொத்தானை அழுத்தினர். அறையெங்கும் ஒளி பரவியது. மல்லிகா — அந்த அழகுப் பிம்பம் அறையின் மூலையிலே படுத்துக் கிடந்தாள். கோட்டைப் பொன்னுருக்கி வார்த்தெடுத்துவிட்ட வாளிப்பான உடற்கட்டு! ஒரு நாள் முழுவதும் மேற்கொண்ட பணியினுல் ஏற்பட்ட களைப்பால் அவள் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். தன்னை மறந்து துயில்கொண்ட அவளுக்கு ஆடைகளைப்பற்றிக் கவனிக்க நேரமேது? அவளது நிலை, அவரது மிருக உணர்ச்சிக்கு வரவேற்பு கூறியது. விளக்கை அணைத்தார்.

மல்லிகாவின் அலறல் — ஓர் உருவம் ஓடி மறைந்தது! ஆவேசத்தோடு எழுந்த மல்லிகா

பத்திரிகை தர்மம்!

நாட்டுப் புறத்தில் சிறிய பத்திரிகை ஒன்றை ஒருவர் நடத்திக் கொண்டிருந்தார். அவரே அதன் ஆசிரியர். எழுத்துக் கோர்ப்பவரும் அவரே தான். நல்ல தீரர். அஞ்சாது அபிப்பிராயம் எழுதுவார்.

அவருடைய ஐம்பதாவது பிறந்த நாள் வந்தது. அதைக் கொண்டாடிய மும்முரத்தில் வேலை எல்லாம் நின்று போயிற்று. பத்திரிகையின் புதிய இதழ் உருவாகவில்லை. பார்த்தார். முந்திய இதழை அச்சுக் கோர்த்த பாரம் அப்படியே இருந்தது. அதில் தலைப்பிலே கொட்டை எழுத்தில் ஒரு வரியைக் கோர்த்தார். அப்படியே அச்சிட்டுச் சந்தாதாரருக்கெல்லாம் அனுப்பிவிட்டார்.

முந்திய வார இதழே திரும்பவும் வந்ததைக் கண்ட சந்தாதாரரெல்லாம் மலைத்துப் போய்த் தலைப்பிலிருந்த கொட்டை எழுத்து வரியைப் பார்த்தார்கள். அதில் இருந்தது இந்த வாசகம்தான்: "வாசகர் பலர் வேண்டிக் கொண்டதன்மேல் மீண்டும் அச்சிட்டிருக்கிறேம்"

—'ஸ்பாட்லைட்'
(தென் ஆப்பிரிக்கா)

விளக்கைப் போட்டாள். பூஜை யறையை நோக்கிச் செல்லும் உருவத்தை அவள் கண்டாள்!

"சண்டாளா நீயா?........."— அவள் கத்திவிட்டாள்!

பூஜை யறையிலே மணிச் சத்தம் கேட்டது. அவள் குரல் ஆண்டவனின் காதில் விழக்கூடாதென்பதற்காக பலமாக மணியை அசைத்தார். அதையும் தூக்கித்துக்கொண்டு அந்தக் குரல் ஆண்டவனின் செவிகளில் நுழையா வண்ணம் சத்தம் போட்டு பதிகம் பாடினார். அவ்வளவு சிரமத்தை அவர் எடுத்திருக்க வேண்டியதில்லை. ஆண்டவன் இவைகளைப்பற்றி என்றைக்கும் அக்கரை காட்டியதில்லை. ஒரு வேளை காட்டுவதானால் பரமசிவன் பிள்ளைக்குப் பாதுகாப்புத் தேடிடும் பணியில்தான் அவர் ஈடுபட்டிருக்கக் கூடும். ஏனென்றால் அவர் பக்தர்!

காலை மலர்ந்தது. மல்லிகா தனது வேலைகளை எல்லாம் முடித்துவிட்டு பிள்ளைக்குக் 'காப்பி' கொண்டுவந்தாள். கையிலேயிருந்த உருத்திராட்ச மாலையை எண்ணிக் கொண்டே கண்ணை மூடி தியானத்தில் ஆழ்ந்திருந்தவரைப் போல் உட்கார்ந்திருந்தார், பிள்ளை எப்போதுமே அவரது அந்த மோன நிலைக்கு மல்லிகா மதிப்பு வைப்பதில்லை. காரணம், அவரது சிந்தனையில் 'யாரைச் சுவைக்கலாம்' என்ற எண்ணம் தான் குடிகொண்டிருக்கும் என்பது அவளுக்குத் தெரியும்.

"காப்பி, இதோ"—மல்லிகா மெல்லக் கூறினாள். பவள இதழை உடைத்து, வெல்லப் பாகு பெருக்கெடுத்தது பிள்ளையின் 'நிஷ்டை' கலைந்தது. இஷ்ட தேவதை பக்கத்திலே பிரசன்னமானதாக ஓர் எண்ணம்! கண்களை மெல்லத் திறந்தார். கவினுருக்கொண்டு நின்ற கனகக்கட்டி மல்லிகாவைப் பார்த்தார். அலை அலையாக எழுந்த ஆசைகளுக்கு அணை கட்ட முயன்றார்; முடியவில்லை. உதடுகளைப் பலமுறை கடித்தார். சுவையூறிற்றே தவிர ஆசை ஏனோ அடங்கவில்லை. தொண்டைபாலைவனமாயிற்று. கண்கள் வெறியுருக் கொண்டன. ஒரு வகை மின்சாரசக்தி உடலெங்கும் பரவியது. மல்லிகாவின் கரத்திலேயிருந்த 'காப்பி'யை வாங்கும் பாவனையில் அவளை இழுத்து அணைத்தார். திமிறிக்கொண்டு அவள் ஓடவில்லை. நின்றாள். பிள்ளைக்கு ஆச்சரியம் தாங்க வில்லை! ஆனந்தக் கூத்தாடினார்!

பிள்ளையின் நீண்ட நாள் 'கனவு' கைகூடிவிட்டது. மல்லிகாவின் மனது எப்படித்தான் இரங்கிற்றோ—என்ற ஆராய்ச்சியில் அவர் ஈடுபடவில்லை. அதற்கு நேரம் வைக்காமல் மல்லிகா எப்போதும் அவருடனேயே இருந்தாள்.

"மல்லிகா! எனக்கிருக்கிற சொத்து, சுகங்களுக்கெல்லாம் நீதான் வாரிசு! அத்தனையும் உன் பேருக்கு எழுதி வைக்கப் போகிறேன்!"—பிள்ளை, கிள்ளையின் கொஞ்சு மொழியில் தன்னை மறந்து இதைக் கூறினார்.

"ஏமாற்றிவிட மாட்டீர்களே?"—ஏக்கங் கலந்த குரலில், 'ஏந்திழை' யாகிவிட்ட எழிலரசி மல்லிகா கேட்டாள்.

தலைமயிரைப் பற்றி அன்பாக இழுத்து, கண்ணாடிக் கன்னத்தை வருடி, தன் முகத்தின் பக்கத்திற்குக் கொண்டு வந்து, அவர் சொன்னார்: "மல்லிகா!

என் மனம் நிறைந்தவளே! நீயே, நான்! நானே, நீ! உணர்ச்சியினுல் ஒன்றிவிட்ட உள்ளங்களில் சந்தேக அலைகளுக்கு இடமில்லை!''

பிள்ளை நம்பிக்கை யூட்டினுர்; பருவமும் வயோதிகமும் ஒன்றையொன்று தழுவின; வசந்தமும் குளிரும் பின்னிப் பிணைந்தன. எதிர் காலமற்ற பிள்ளையின் உள்ளத்தில் நிகழ் காலத்தின் இன்ப சுகம் பொங்கி வழிந்தது. எதிர்காலத்தை எண்ணி ஏங்கித் துடிக்கும் மல்லிகாவின் உள்ளத்தில் நிகழ்காலத்தின் ஒருசேர முடியாத உணர்ச்சிகள் ஏதோ ஒரு தேவையின் காரணமாக மகிழ்ந்தன.

''பரமசிவம் பிள்ளைக்குப் பிள்ளைகள் இல்லை; சுற்றமும் அற்றுப் போயிற்று. இலட்சக் கணக்கில் அவருக்கு சொத்து சுகங்கள்—இத்தனைக்கும் வாரிசு நான்தானே!'' — மல்லிகாவின் துய்மையான—ஆனுல் ஆசைகளின் வளர்பண்ணையாகி விட்ட நெஞ்சத்தில், எண்ணங்கள் இப்படி பேரிரைச்சலைக் கிளப்பி விட்டன.

●

ஒரு நாள் மாலை கடற்கரைப் பக்கமாக உலவப்போன பிள்ளை மணற்பரப்பில் அமர்ந்து, மல்லியின் மடிமீது படுத்துக் கொண்டே சொன்னுர்: ''மல்லி! கொஞ்ச நாளா உடம்புக்கு என்னவோ மாதிரி இருக்கு. ஏனே தெரியவில்லை. செத்துப் போவேனே? என்னவோ...''

அவர் சொல்லி முடிப்பதற்குள் அவரது வாயைப் பொத்திக் கொண்டு, ''அப்படி யெல்லாம் சொல்லாதீர்கள். இன்னும் இரண்டு மாதங்களில் வெளிவர இருக்கும் குழந்தையைப் பார்த்துக் கொஞ்சப் போகிறீர்கள்!'' — சொல்லி விட்டு நாணத்தால் முகம் கவிழ்ந்தாள். கவிழ்ந்தவளின் கண்கள் பிள்ளையின் கண்களைச் சந்தித்தன.

''சரி ... சரி ... புறப்படு!''— பிள்ளை கர்ஜித்தார். மல்லிகா மருண்டாள். கார் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. அவளது அடிப்படை ஆடி அசைந்து கொண்டிருந்தது. கார் வீட்டை அடைந்தது. பிள்ளையின் மாற்றத்திற்குக் காரணம் தேட முயன்ருள் மல்லி. அவர், எரிமலையாகிக் கனல் கக்கினுர்.

''ஏன் கோபப்படுகின்றீர்கள்?'' — எழுந்த அச்சத்தை அடக்கிக் கொண்டு கேட்டாள்; மல்லிகா.

''ஒஹோ! என்னிடம் காரணம் கேட்கின்ற அளவுக்கு உரிமை கொண்டாட வந்துவிட்டாயா?''—பிள்ளை புதுத் தத்துவம் பேசினுர்.

லாபக் கணக்கு

கணவர் தள்ளு வண்டியில் குழந்தையை வைத்துக் கொண்டு கடற்கரையில் சற்று உலாத்தி விட்டுத் திரும்பினுர்.

மனைவி, ''என்ன? இது நம் குழந்தை இல்லையே!'' என்று திகிலுடன் கேட்டாள்.

கணவர், ''உஷ்! சப்தம் போடாதே. இதற்கு டயர் போட்டிருக்கிறது, பார்!'' என்று வண்டியைச் சுட்டிக் காட்டினுர்.

—'விரெக்கோ விட்'

காவின் இதயத்தில் வீழ்ந்த அணுகுண்டாயிற்று; எதிர்காலம்

"கூடாதா?"—மல்லிகா உரிமைக் குரல் எழுப்பினாள். அவளது உதடுகள் துடித்துக் கொண்டிருந்தன.

"சரி, சரி! வேலையைக் கவனி, போ! இந்த வேலைக்கார நாய்களுக்குக் கொஞ்சம் இடங் கொடுத்தாலே இப்படித்தான்!"—பழ ரசத்தை முற்றிலும் பருகிவிட்டு கண்ணாடிக் கிண்ணத்தை வீசி கீழே எறிந்தார். இடத்தை விட்டகன்று கூடத்திற்குப் போனார். அவர் உதிர்த்த கடைசி வார்த்தைகள், மல்லி

'நாகசாகி' யாயிற்று. மாதங்கள் இரண்டு ஓடி மறைந்தன!

•

அன்றிரவு...பிள்ளை வீட்டில்

அங்கு மிங்குமாக அலைந்தார். அவரது கோரமான நெஞ்சத்தின் படபடப்பை முகம் படம் பிடித்துக் காட்டியது. நின்ற இடமெல்லாம் வியர்வையைக் கொட்டினார். உள்ளறையில் ஒரே முனகல் சத்தம் கேட்டது. நள்ளிரவும் நெருங்கிக்கொண்டிருந்தது.

திடீரென்று "ஐயையோ!... அம்மா!' என்ற அலறல்! பிள்ளை நடுங்கிப்போனார். உள்ளறைக்கு ஓடினார். மல்லிகா அயர்ந்து படுத்திருந்தாள். துணியெல்லாம் ஒரே இரத்த வெள்ளம்! பக்கத்தில் கொஞ்சும்

மழலை—பிள்ளைக் கனியமுது—பக்திமான் பரமசிவம் பிள்ளையின் வாரிசு—ஆண் மகவொன்று படுத்துக் கிடந்தது. பரமசிவம் பிள்ளை தலையில் கை வைத்து, அங்கு மிங்குமாக ஓடிக்கொண்டிருந்தார். இல்லாத மானப் பிரச்சினை அவரை ஆட்டி அசைத்தது; வாட்டி வதைத்தது! யாருக்கும் பதில் சொல்லவேண்டிய தேவையற்ற அவருக்கு, இப்போது சமூகத்தின்முன் பதில் சொல்லவேண்டிய நிர்ப்பந்தமும், தலை குனிய வேண்டிய பரிதாபமும்!

அந்தஸ்து...அவர் முன்னாலே நின்று ஏளனம் பேசிற்று!

ஜாதி...அவரைச் சவாலுக்கு அழைத்தது!

"பக்தா! இது நியாயமா?"—ஆண்டவன் அவர் முன்னாலேயே தோன்றினன்.

கை கொட்டி, சிரிப்பொலி முழங்கிய திக்கைத் திரும்பிப் பார்த்தார்...வாலிப உலகு கேலி செய்தது.

"மாபாதகா! எனக்கு நீ செய்கிற கைமாறு இதுதானா?"—மாண்ட மனைவி மீண்டாள்; பதைத்துத் துடித்தாள்.

பிள்ளையின் தலை சுழன்றது; இதயம் நின்றுவிடும் போலாயிற்று பதில் காண முடியாத கேள்வியொன்று அவரது முன்னால் எழுந்து நின்றது!

"வெளியே எங்ஙனம் தலை காட்டுவேன்?"

—மேற்குப் புற ஜன்னலைத் திறந்துவிட்டார். சூடேறிப் போன அவரது உடம்பைக் குளிர் காற்றுத் தழுவி ஓடியது. பிள்ளையின் மூளை, பயங்கரச் சிந்தனைகளின் கூடாரமாயிற்று. சதித் திட்டம் உருவாகியது. ஓடோடியும் உள்ளே வந்தார்; மல்லியைக் கூப்பிட்டார். மயக்கந் தெளிந்த மல்லி கண் திறந்தாள்.

"உன் எதிர்காலம் கருதிச் சொல்கிறேன் — குழந்தையின் கழுத்தை நெறித்துக் கொல்லு!"—நயவஞ்சக உள்ளம் ஆணை பிறப்பித்தது.

"ஐயோ! பாதகா! பெற்ற குழந்தையைக் கழுத்தை நெறித்துக் கொல்வதா? அதுவும் நானே கொல்வதா? உனக்கு இதயமே கிடையாதா? உன் இரத்தத் தொடர்பிலே விளைந்த குழந்தையாயிற்றே இது!"—மல்லிகா வார்த்தைகளைக் கொட்டினள்; மயக்கமடைந்து படுக்கையிலே வீழ்ந்தாள்.

கொஞ்ச நேரத்திற்குப் பிறகு நான்கைந்து முரடர்கள் உள்ளே நுழைந்தார்கள். "உப்...புறப்படு!" எனச் சொல்லிக் கொண்டே முரடன் ஒருவன் குழந்தையைப் பிடித் திழுத்தான்.

"ஐயா! நான் எங்காவது ஓடி விடுகிறேன், தயை செய்து என் குழந்தையை மட்டும் ஒன்றும் செய்யாதீர்கள்!"—அவள் கெஞ்சிக் கூத்தாடினள்; காலை வருடினள்; மன்றாடினள்.

பிள்ளை, அவளைப் பிடித்து வெளியே தள்ளினர். பாவாடைக்காரியாக வந்து, சேலைக்காரியாக வளர்ந்து, இன்றைக்குத் தாயாகி, அதே நேரத்தில் அனாதையாகவும் பிள்ளையால் ஆக்கப்பட்டுவிட்ட மல்லிகா குழந்தையைத் தூக்கிக் கொண்டு உலகத்தை விழுங்கிக் கொண்டிருந்த இருள் வேளையில் வெளியேறத் தயாரானள்.

புறப்படுவதற்கு முன் பிள்ளையின் முன்னே வந்து நின்றாள். குழந்தை 'வீல்' என்று கத்தியது.

"வருகிறேன்" — மல்லிகா சொல்லி முடித்தாள்.

"தொலைந்து போ"—பிள்ளை முற்றுப்புள்ளி வைத்தார்.

மல்லிகாவையே] பின்பற்றிச் சென்ற முரடர்களில் ஒருவனை அழைத்துக் கையிலே எதையோ தந்தார்; வாங்கிக் கொண்டு புறப்பட்டு விட்டார்கள்.

●

நகரத்தைத் தாண்டி நெடுந்தூரம் நடந்து விட்டார்கள். குருதியோட்டமற்ற அவளுடைய உடம்பு துவண்டு துடித்தது. அவளால் நிற்க முடியவில்லை. ரொம்பவும் களைத்துப் போய்விட்டாள். பலகீனத்தின் காரணமாகப் பாதையிலே உட்காரவைக்கப்பட்டாள். ஐந்து முரடர்களிலே இரண்டு பேர் மற்ற முரடர்களுக்கு காதோடு காதாக ஏதோ பேசிவிட்டுப் போய்விட்டார்கள். மல்லிகாவின் கண்களைத் தூக்கம் துளைத்தது; களைப்பு அவளை வீழ்த்தியது; அவள் தூங்கிவிட்டாள்!

அந்த நேரமாகப் பார்த்து, கல் நெஞ்சக் கயவன் ஒருவனின் கண்கள், கண்களாலே வையத்தை விழுங்கும் தூய்மையான குழந்தையைச் சந்தித்தன. உள்ளத்தைக் கல்லாக்கிவிட்ட உலுத்தன் குழந்தையின் கழுத்தை நெறித்துக் கொன்ருன். இரத்தத்தை அவளது கரத்திலே பூசிவிட்டு ஓடிவிட்டார்கள்.

காலை மணி மூன்று. திடீரென்று ஒரு போலீஸ் வண்டி வந்து நின்றது. யாரோ பாதையிலே அழுதுகொண்டிருந்தார்கள். காரை நிறுத்தி விளக்கு வெளிச்சத்தில் பார்த்தார்கள். தாங்க முடியாத காட்சி! தாய் அழுதாள்! மல்லிகாவின் தாய்மைக்கு இருந்த வலிமையைவிட பணக்காரனின் வஞ்சகத்திற்குத்தான் சக்தி அதிகம் இருந்தது!

"சார்! சார்! இவள்தான் பிள்ளையின் வீட்டில் தங்கச் சங்கிலியைத் திருடியவள்! திருடிமட்டுமல்ல; விபச்சாரியாகக்கூட இருக்கிருளே! எவனேடோ சேர்ந்து குழந்தையைப் பெற்றதுமல்லாமல், கொலைகாரியாகவும் ஆகிவிட்டாளே! அடிப்பாவி! ஆண்டவனுக்குப் பொறுக்குமா இது?"—வழி நடுவே, விட்டுப்பிரிந்த இரண்டு முரடர்கள்—தமது சதித் திட்டத்தின் பிரதான கட்டம் பெற்ற வெற்றியிலே தம்மை மறந்தார்கள்.

"பக்திமான் பரமசிவம் பிள்ளையின் வீட்டிலே வேலை செய்தவளே இப்படியானுல் இவள் எந்த உலகத்தில்தான் வாழப் போகிருளோ?"—ஒரு போலீஸ்காரர் அவளது வாழ்க்கை ஏட்டின் கடைசிப் பகுதியை எழுதி முடித்துவிட்டார்.

"பிள்ளை, பக்திமான்—குழந்தை இல்லாதவர். அவரிடமே இந்தப் பெண் ஒழுங்காக இருக்கவில்லையே! உண்ட வீட்டுக்கே இரண்டகம் செய்துட்டாளே! அவரது அந்தஸ்துக்கே களங்கம் கற்பித்துவிட்டாளே! இவைகளெல்லாம் அவருக்குத் தெரிந்தால்......?" —இன்ஸ்பெக்டர் பிள்ளை அனுபவிக்கும் வேதனைக்கு ஓர் அளவு கோலானுர். வண்டி போலீஸ் ஸ்டேஷன் நோக்கிப் புறப்பட்டது.

●

"குழந்தையை நீ கொன்ருயா?" — மாஜிஸ்டிரேட் கேட்டார். மல்லிகா மௌனம் சாதித்தாள்.

"தங்கச் சங்கிலியைத் திருடிய

வள் நீதானே?" — மல்லிகாவின் கண்கள் நீரால் நிறைந்தன.

மல்லிகா குற்றவாளி ஆனுள். திறந்த சிறைக் கதவுகள், அவளை உள்ளிழுத்துத் தாளிட்டுக் கொண்டன. அடுத்த நாள் பத்திரிகையிலே இந்தச் செய்தி வந்திருந்தது. ஒரு முறைக்குப் பலமுறை அச் செய்தியைப் படித்தார். பிள்ளை தனது மூளை பலத்தை அவரே பாராட்டிக் கொண்டார். முரடர்களின் முழு முயற்சிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். செய்தியைத் திருப்பித் திருப்பிப் படித்தார். செய்தியிலே பிள்ளையின் பூர்வோத்திரம் இருந்தது. அவரது பக்தி பற்றிய விளக்கம் இருந்தது. தர்மவான் என்பதற்கும், தயாளன் என்பதற்கும் ஆதாரங்கள் இருந்தன. இப்படிப்பட்டவர் வீட்டிலே வேலைக்காரியாகப் பணியாற்றிய மல்லிகா திருடினுள்; கொலைகாரியானுள்; விபசாரியானுள்— என்பதாகச் செய்தி முடிந்தது. விழுந்து விழுந்து சிரித்தார். இதயம் இலேசாகியது. குதித்துக் கூத்தாடினுர்.

யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. திறப்பதற்காக ஓடினுர். அவரது கால்கள் மூலையிலே கிடந்த பழத்தோலில் சிக்குண்டன. வழுக்கி விழுந்தார். தலை, பக்கத்துச் சுவற்றிலே மோதி வெடித்துச் சிதறியது. பக்திமான் பரமசிவம் பிள்ளை பரம பிதாவின் பாதார விந்தங்களுக்குத் தன்னை ஒப்புவித்தார்!

வெளியே நின்றவர் இந்தக் காட்சியைப் பார்த்துக் கதவையுடைத்து உள்ளே வந்தார். இரத்த வெள்ளத்திலே பிள்ளை! அவர் கையிலே அன்று காலை வந்த பத்திரிகை! அதிலே மல்லிகாவைப் பற்றிய செய்தி!

மறுநாள் காலை வந்த பத்திரிகையில் கீழ்க் காணும் செய்தி வெளியாயிற்று:

"கோட்டூரைச் சார்ந்த பரமசிவம் பிள்ளை சிறந்த பக்திமான்; தர்மவான். அவரது 'ஷஷ்டியப்த பூர்த்தி' சென்ற ஆண்டுதான் நடைபெற்று முடிந்தது. மாநில பேரமைச்சர்களெல்லாம் அந்த விழாவிலே பங்கு பெற்றனர். பாரத நாட்டின் பல திசைகளிலிருந்தும் வாழ்த்துக்கள் ஏராளம் வந்து குவிந்தன. அவர் சமீபகாலமாக, தனது மனைவியார் காலமான பிறகு வாழ்க்கையிலே வெறுப்புற்று, ஆண்டவன் திருவடி நிழலை அடையும் திவ்ய நாளை எதிர்பார்த்து, நாட்களை எண்ணி வந்தார்.

"அவரது வீட்டில் வேலை செய்து வந்த பெண்தான் கொலைகாரி மல்லிகா! அவளைக் குழந்தைபோல் பிள்ளை பராமரித்து வளர்த்தார். பத்து வயதிலேயே பிள்ளையின் வீட்டுக்கு வந்தவள். தனது மனைவி இறந்ததற்குப் பிறகு தனது மகளைப்போல் அவளை வளர்த்து வந்தார். தனது பிள்ளையில்லாக் குறையை அவள் ஈடு செய்துவிட்டாள் என்றே அவர் நம்பினுர். ஆனுல் மல்லிகா, எவனுடனே கள்ளக் காதல் கொண்டு, பிள்ளையைப் பெற்றெடுத்து, அதைக் கொல்லவும் துணிந்தது மட்டுமல்ல; உண்ட வீட்டிற்கே கன்னமும் வைத்தாள். அருமையான மகளைப்போல் வளர்த்த மல்லிகா கொலைகாரியாக ஆகிவிட்டாளே என்ற செய்தி கேட்டுப் பிள்ளையவர்கள் துடித்துத் துடித்துச் செத்திருக்கிறுர்கள். அவரது ஆத்மா சாந்தியடையட்டும்!"

ஃ

எழுதியவர் :
பி. வி. ஆர். பாண்டியன்

உப்புத் தொழிலைக் காப்பாற்றுவீர்!

இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, அதன் மூலம் வெளிநாட்டு நாணயத்தை இந்தியப் பேரரசுக்கு வருவாயாகத் தரக் கூடிய பொருட்கள் ஒன்றிரண்டே இருக்கின்றன. உப்பு அந்தச் சிலவற்றுள் ஒன்ருகும். இந்தியாவில் கீழ்க்கண்ட இடங்களில் உப்பு உற்பத்தி செய்யப் படுகிறது:

1. கிழக்கு பஞ்சாபிலுள்ள ராஜஸ்தானத்தில் சாம்பர் ஏரியைச் சுற்றியுள்ள நிலப் பரப்பு.

2. சௌராஷ்டிரக் கரையில் போர்பந்தர் வட்டாரத்தினைச் சேர்ந்த பகுதி.

3. ஆந்திராவில் விசாகப்பட்டினத்தை ஒட்டிய சில இடங்கள்.

4. மேற்கு வங்கத்தில் சில இடங்கள்.

5. மேற்குக் கடற்கரையின் தென் கோடியில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த குளச்சல் பகுதி.

6. தூத்துக்குடி நகரமும் அதைச் சேர்ந்த சுமார் 30 மைல் வட்டமும்.

இதைத் தவிர ஆங்காங்கு சில இடங்களில் உப்பு உற்பத்தி செய்யப்பட்டாலும், அவை



குறிப்பிடத் தகுந்த அளவின தாக இல்லை. இந்த ஆறு இடங்களிலும் சாம்பர் ஏரி பகுதியிலுள்ள உப்பளங்கள் சர்க்காரால் ஏற்று நடத்தப்படுபவை. அவற்றின் உற்பத்தியும் மதிப்பும் குறைந்த அளவேயாகும். ஆந்திரம், மேற்கு வங்கம், குளச்சல் பகுதி—ஆகியவற்றின் உற்பத்தியும் பிரதேசத் தேவைக்குக் கூடப் பற்ருக் குறையானதே. ஆக, வடக்கே போர்பந்தர் வட்டாரமும், தெற்கே தூத்துக்குடி வட்டாரமும்தான் பெருவாரியான அளவில் உப்பு உற்பத்தி செய்து வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யும் பகுதிகளாக விளங்குகின்றன.

நமது திராவிடத்தைப் பொறுத்தவரை உப்புத் தொழிலின் கேந்திரமாக விளங்குவது தூத்துக்குடி. உப்பு வர்த்தகப் பிரமுகர்களின் உத்தேச மதிப்புப்படி தூத்துக்குடி வட்டாரத்தில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 3 இலட்சம் டன்னுக்கு அதிகமான உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் சென்ற ஆண்டு வரையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சம் டன்னுக்கு மேல் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இந்த ஒவ்வொரு ஆண்டின் உப்பு ஏற்றுமதியினுடைய மதிப்பு சுமார் 30 இலட்சம் ரூபாய் ஆகும். உப்புத் தொழிலில் மட்டும் தூத்துக்குடியில், உள்நாட்டு-வெளிநாட்டு வாணிபம் சேர்ந்து ஆண்டுக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமான வியாபாரம் நடைபெறுகிறது. இந்தவாணிபத்தினுல் ஏற்றுமதி வரி, ஹார்பர் கட்டணங்கள், வாகன் கட்டணங்கள் முதலிய பல வழிகளில் பெருந் தொகை மத்திய அரசுக்கு வருவாயாகக் கிடைக்கிறது. தூத்துக்குடி நகரிலிருந்து வடக்கே சுமார் 10 மைல்களும், தெற்கே சுமார் இருபது மைல்களும் கடற்கரையை யொட்டிய பாதையில் பயணம் செய்வோர் இடைவிடாத உப்பளங்களையும், பெரிய பெரிய உப்புக் குவியல்களையும் காணலாம்.

இத்தகைய பெரிய தொழில் மத்திய அரசின் பாராமுகத்தாலும், ஓரவஞ்சனைப் போக்காலும் இன்று மிகுந்த நெருக்கடியான கட்டத்தில் இருக்கிறது.

சென்ற ஆண்டு வரையில் ஜப்பான், இந்தோனேஷியா போன்ற கீழ்த்திசை நாடுகள் பலவற்றுக்கு தூத்துக்குடியிலிருந்து உப்பு பெருமளவு ஏற்றுமதியாகியது. அரைத்த உப்பு ('டேபிள் சால்ட்') மேலை நாடுகள் சிலவற்றுக்குக்கூட அனுப்பப்பட்டது. இந்த ஏற்றுமதி வாணிபத்தால் உற்பத்தியாகும் உப்புக்கு நல்ல கிராக்கியும், விலையும், வணிகர்க்கு நல்ல இலாபமும், தொழிலாளருக்கு தகுந்த ஊதியமும், அரசினர்க்கு வருவாயும் ஒருங்கே கிடைத்து வந்தன.

இந்த நிலையில் 1955-ம் ஆண்டு இறுதியில், சீனுவிலிருந்து ஒரு வணிக நிபுணர் குழு, உப்புத் தொழிலைப் பற்றிய விவரங்களை அறிந்து போவதற்காக தூத்துக்குடி வந்தது. அந்த குழுவினர் தூத்துக்குடியில் உப்பு உற்பத்தி செய்யப்படும் முறைகளையும் தொழில் நுணுக்கங்களையும் கண்டுணர்ந்து சென்றனர். இதன் விளைவாக, சென்ற 1957-ம் ஆண்டிலேயே சீனுவின் உப்பு உற்பத்தி அதற்கு முந்திய ஆண்டுகளைவிட பத்து மடங்கு அதிகரித்து விட்டது. இதனுல் சீனுவின் அண்டை நாடுகளான ஜப்பானும் இந்தோனேஷியா

வும் தங்களின் உப்புத் தேவை யை சீனுவிடமிருந்தே பெற்றுக் கொள்ளத் தொடங்கிவிட்டன. தூர நாடான இந்தியாவிலி ருந்து வருவதைவிட சீனுவிலி ருந்து உப்பு வாங்குவது அந்த நாடுகளுக்கு சுலபமாகவும் மலி வாகவும் அமைந்து விட்டது. இந்த வெளி நாட்டு வாணிபப் போட்டியினுல் தென்னுட்டின் உப்புக்கு வெளி நாடுகளில இருந்த "மார்க்கெட்" பறி போயிற்று.

வெளி நாட்டு ஏற்றுமதி முறையில் இருந்து கொண்டி ருந்த காலத்திலும் மிகுந்த சிர மத்தின் மத்தியில்தான் தூத் துக்குடி வணிகர்கள் உப்பு ஏற்றுமதி செய்ய முடிந்தது. ஏற்றுமதிக்குக் கப்பல்கள் சரி வரக் கிடைக்காததுதான் அதற் குக் காரணம். தூத்துக்குடிக்கு வந்து போகும் கப்பல்களில பெரும்பாலானவை வட நாட்ட வரைச் சேர்ந்தவை. தூத்துக் குடியில் 'ஏஜென்ஸி' வைத் துள்ள,

"பாரத் லைன்ஸ் லிமிடெட்,"

"ஸிந்தியா ஸ்டீம் நாவிகே ஷன் கம்பெனி லிமிடெட்,"

"அம்பிகா ஸ்டீம்ஷிப் கம் பெனி லிமிடெட்,"

"மெரியன் ஸ்டீம்ஷிப் கம் பெனி லிமிடெட்,"

"ஈஸ்ட் இந்தியா ஸ்டீம் நாவி கேஷன் கம்பெனி லிமிடெட்,"

மற்றும் பல கப்பல் கம்பெனி கள் வட நாட்டுப் பம்பாய், கல் கத்தா போன்ற நகரங்களில் தலைமைப் பீடத்தைக்கொண்ட வடக்கத்தியக் கம்பெனிகள். இவர்கள் தென்னுட்டின் துறை முகமான தூத்துக்குடிக்குக் கப்பல்களைப் போதிய அளவு அனுப்பி உதவுவதில்லை. கப்பல் நெருக்கடியைப் பற்றி மத்திய

மரணம்...!

முதலாளி: மரணத்துக்குப் பின் வாழ்வு உண்டு என்று நீ நம்புகிருயா?

ஆபீஸ் பையன்: நம்புகிறேன் சார்.

முதலாளி: அப்படியானுல், எல்லாம் சரிதான். நேற்று மாலையில் உன் தாத்தா வைப் புதைப்பதற்காக நீ போனுய்; இல்லையா? அதற் குப் பிறகு உன்னைப் பார்ப் பதற்காக அந்தத் தாத்தா இங்கே வந்து விட்டுப் போனுர்.

—'வார்ட் ஹெம்' ஸ்வீடன்

சர்க்காருக்கு உப்பு வர்த்தகர் கள் எத்தனையோ முறை 'மகஜர் கள்' அனுப்பியும் டில்லி அரசு தலையிட்டு எவ்வித உதவியும் செய்யாமல் மௌனம் சாதித்து வந்தது. இந்த சிரமமான சூழ் நிலையிலும்கூட உப்பு ஏற்றுமதி வாணிபத்திற்கு இடையூறு விளைவிக்க இயலாத அளவு வாணிபம் நடந்தே வந்தது.

வட நாட்டுக் கப்பல் கம்பெனி களின் இந்த ஒத்துழையா மைக்குக் காரணமும் இருந்தது. வடநாட்டு உப்புத் தொழில் கேந் திரமான போர்பந்தர் வட்டா ரத்தில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 5 லட்சம் டன்னுக்கும் அதிக மான அளவு உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது. அந்த வட் டாரத்தின் உப்பு ஏற்று மதியும் ஆண்டுக்கு லட்சம் டன்னுக்கு மேலிருக்கும்.

பெரிய ஸ்டீமர் கம்பெனி யான 'பாரத் லைன்ஸ்' ஸ்தாப னத்தாருக்கு அந்த வட்டாரத்

தில் பெருவாரியான உப்பளங்கள் சொந்தமாக உள்ளன. தூத்துக்குடி துறைமுகத்துக்குத் தொடர்ந்து கப்பல்களை அனுப்பி விட்டால், தங்கள் பிரதேச உப்பு ஏற்றுமதி தடைபட்டு பாதிக்கப்படும் என்று 'பாரத் லைன்ஸ்' கம்பெனியாரும், மற்ற வடநாட்டுக் கம்பெனிகளும் கருதினர். இதனாலேயே தொடர்ந்து தூத்துக்குடிக்குக் கப்பல்களைத் தரத் தயங்கினர். தென்னாட்டின் கப்பல் தேவையைப் பூர்த்தி செய்யும் தென்னகக் கப்பல் கம்பெனி ஒன்றுகூட இல்லாதது தமிழகத்துக்கு பெருத்த அவமானமாகும்.

பாரத் லைன்ஸ் கம்பெனியார் தூத்துக்குடி உப்பு உள்நாட்டில்கூட நல்லபடியாக விற்பனையாவதைத் தடுக்க முற்பட்டனர். தங்களுக்குச் சொந்தமான போர்பந்தர் உப்பளங்களிலிருந்து, தங்கள் சொந்தக் கப்பல்களில் உப்பைக் கல்கத்தாவுக்குக் குறைந்த செலவில் (கப்பல் செலவு இல்லாதபடியால்) கொண்டு சென்று வங்காள மார்க்கெட்டில் பலத்த போட்டியை ஏற்படுத்தி விட்டனர். தூத்துக்குடி வர்த்தகர்கள் இந்தப் போட்டியினால் விலை கட்டுபடியாகாமல் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் வழி செய்யாமல், உள்நாட்டுப் போட்டியிலும் தலையிட்டு நியாயம் வழங்காமல், ஒரேயடியாக மௌனம் சாதிப்பதன் மூலம் மத்திய அரசு வடநாட்டிற்கு மறைமுகமாக ஆதரவளித்து, தென்னாட்டு வாணிபம் பாழடைவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

வெளிநாட்டு ஏற்றுமதி இல்லையென்றால் தூத்துக்குடி வட்டாரத்தில் உற்பத்தியாகும் உப்பில் குறிப்பிடத் தகுந்த அளவாள சுமார் ஒரு லட்சம் டன் ஆண்டுதோறும் தேங்கும்படியான நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அப்படி நேரிட்டால் உப்புத் தொழிலை நம்பி வாழும் தொழிலாளர்களில் 1-ல் 3 பங்கு பேர் வேலை இழந்து தவிப்பார்கள்.

தூத்துக்குடி நகரில் மட்டும் உப்புத் தொழில் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு வாழ்க்கை நடத்துவோரின் தொகை ஏறத்தாழ இருபதினாயிரம் பேர் இருக்கும். அதைச் சேர்ந்த சுமார் முப்பது மைல் வட்டாரத்திலும் சேர்த்து மொத்தம் ஒரு லட்சத்துக்கு மேல் இந்தத் தொகை உயரும். தொழிலில் இன்றுள்ள நிலை நீடித்தால் சுமார் நாற்பதாயிரம் மக்கள் பிழைப்புக்கு வழியின்றித் திண்டாட வேண்டி நேரிடும். அந்த அபாயகரமான நிலைமை மாறி, அழிந்து கொண்டிருக்கும் ஒரு மாபெருந் தொழில் ஆரம்பத்திலேயே காப்பாற்றப்பட வேண்டும்.

'தூத்துக்குடி உப்பு உற்பத்தி அண்டு விற்பனையாளர் சங்க'மும், மற்றும் பல அமைப்புகளும் மத்திய அரசாங்கத்திடம் இந்த மகத்தான ஆபத்தைப் பற்றி எத்தனையோ முறையீடுகள் செய்தும், தூது கோஷ்டிகள் அனுப்பியும் ஒன்றும் பயன் தரவில்லை. வெளிநாட்டுக் கிராக்கியை மீண்டும் ஏற்படுத்தித் தர சர்க்கார் முயல வேண்டும். குறைந்த விலையில் சரக்கு ஏற்றித் தர தயாராயிருக்கிறோம் என்று வர்த்தகர்கள் சார்பில் எடுத்துக் கூறப்பட்டும் பலன் ஏதும் கிட்டவில்லை. இவ்வாறு வெளிநாட்டு 'மார்க்கெட்'டையும், உள்நாட்டுக் கிராக்கிகளையும், வடநாட்ட

வரின் போட்டியினுல் பறி கொடுத்துக் கொண்டு நாளுக்கு நாள் அழிவுப் பாதையில் வேக நடை போட்டுக் கொண்டிருக் கிறது, தென்னுட்டின் உப்பு வர்த்தகம்.

இங்கிலேயில் தூத்துக்குடி வட்டாரத்தில் இரசாயன உர உற்பத்திச் சாலே அமைக்கப்படுவதாக இருந்தது. சென்னே அரசில் முன்னுள் உணவு அமைச்சராகப் பணியாற்றிய திரு ரோச் விக்டோரியா அவர்களும் மற்றும் பல தூத்துக்குடிப் பிரமுகர்களும் 'ஹெவி கெமிகல்ஸ் லிமிடெட்' என்ற பெயரில் மேற்கூறிய தொழிற்சாலேயை நிறுவ பெரும்முயற்சிகள் செய்தனர். தூத்துக்குடிக்கு மேற்கில் சுமார் மூன்று கல் தூரத்தில் இடம் வாங்கி தொழிற்சாலேக்கு வேண்டிய கட்டிடங்கள் எல்லாம் கட்டப்பட்டன. இந்த முயற்சியின் விளேவாகத் தேங்கிவிடக்கூடிய உப்பில் பெரும் பகுதி இத் தொழிற்சாலேயின் தேவைக்குப் பயன்படும். ஓரளவு தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறையும் என்று உப்பு வணிகர்கள் ஆறுதல் பெற்றிருந்தனர்.

ஆனுல் வடவரின் ஆதிக்கபுரியாக விளங்கும் டில்லி அரசு திரு. ரோச் விக்டோரியாவின் முயற்சிக்கு அனுமதியளிக்காமல், தூத்துக்குடிக்குத் தெற்கே சுமார் 12 மைல் தொலேவிலுள்ள ஆத்தூர் என்னுமிடத்தில் இதே போன்ற ஒரு தொழிற்சாலேயை நிறுவ 'தரங்கதாரா கெமிகல் ஒர்க்ஸ் லிமிடெட்' என்ற வடநாட்டுக் கம்பெனிக்கு அனுமதி அளித்துவிட்டது! இதனுல் தென்னுட்டுத் தொழிலதிபருக்குப் பெரிய அதிர்ச்சி ஏற்பட்டுவிட்டது.

திரு. ரோச் விக்டோரியா நீண்ட நாளேய காங்கிரஸ்காரர்; தூத்துக்குடித் தொகுதியிலிருந்து பலமுறை காங்கிரஸ் எம். எல். ஏ. வாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், அமைச்சராகவும் இருந்தவர். அத்தகையவரின் முயற்சிக்கே மத்திய அரசு ஆதரவளிக்கவில்லே—அனுமதி தரவில்லே என்ருல் தென்னுட்டில் வேறு எவரும் பெரிய தொழிற்சாலேகளேச்

கவனம் எதிலே?

விமானம் வந்தது. கணவன் இறங்கினுன். அப்படி இறங்கும்போது, "சென்று வரட்டுமா மிஸ் டிரேசி?" என்று விமான சிப்பந்தியாகிய ஒரு அழகிய பெண்ணிடம் சொல்லிக் கொண்டான்.

"அவளுடைய பெயர் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்ருள் கோபமுடன் வரவேற்க வந்த மனேவி.

"விமானி, துணே விமானி, முதலியோருடைய பட்டியலில் அவள் பெயரும் இருந்தது!..."

"அப்படியானுல் விமானியினுடைய பெயர் என்ன தெரியுமா?" கணவன் விழித்தான்!

செய்திட வடவர் அனுமதிப் பார்களா என்பதை நேயர்கள் சிந்திக்கக் கோருகிறோம். மேலும், தென்னாட்டுத் தொழில் வல்லுநரின் முந்திய முயற்சிக்கு ஆதரவு தராமல், வடநாட்டுப் புதிய கம்பெனிக்கு அனுமதி வழங்கும் மத்திய அரசின் ஓர வஞ்சனையையும் 'அகில இந்திய விசுவாசிகள்' உணரக்கோருகிறோம்.

மேலே குறிப்பிட்ட அந்த வடநாட்டுக் கம்பெனியினர் ஆரம்பத்திலேயே பெரிய 'வெடி குண்டு' ஒன்றைத் தூக்கிப் போட்டுவிட்டனர். அதாவது அவர்களது தொழிற்சாலைக்கு வேண்டிய உப்பு முழுவதும் வெளியிலிருந்து அவர்கள் வாங்கப்போவதில்லையாம். அவர்களே உற்பத்தி செய்து கொள்ளப் போகிறார்களாம். இதற்காக ஆயிரக் கணக்கான ஏக்கர்கள் சர்க்காரின் புறம்போக்கு நிலத்தை அந்தக் கம்பெனிக்கு 'ஜாரி' செய்து கொடுத்துள்ளார்களாம். அத்துடன் ஒரு சில ஏழை எளியவரின் நிலங்கள் அந்த நிலப் பகுதிக்கு மத்தியில் இருப்பதையும் டில்லி அரசு தானே நடுநிலையாளராக இருந்து நிர்ணயிக்கும் 'நியாயமான மதிப்புத் தொகைக்கு' அந்தக் கம்பெனிக்கு விற்று விடும்படி வற்புறுத்துகிறதாம். உபரியாகக் கிடைக்கும் உப்பு செல்வாக வழி கிடைக்கும் என்று கருதிய வணிகர்களின் எண்ணத்தில் மண்ணைப் போட்டதுமன்றி, ஏழை எளியவரின் அற்பமான சொத்துக்களையும் கூடக் 'கபளீகரம்' செய்யும் எமனாக வாய்த்துவிட்டது வடநாட்டுத் தரங்கதாரா கம்பெனி!

எனவே, தென்னாட்டின் உப்புத் தொழிலின் வருங்காலம் மிகவும் இருண்டு தோற்றமளிக்கிறது. அதைக் காப்பாற்றும் அதிகாரமோ நமது மாநில அரசுக்கு இல்லை. வெளிநாட்டு 'மார்க்கெட்'டைப் பிடிப்பதும், ஏற்றுமதியை அதிகப்படுத்துவதும் மத்திய அரசின் ஆதிக்கத்தின் பாற்பட்டவை. ஆனால் மத்திய அரசோ வடநாட்டு முதலாளிகளின் சதிக் கூடாரமாக இருந்து தென்னாட்டை வஞ்சித்து வருகிறது.

பொறுப்புள்ள அரசாங்கமாக இருந்தால், இந்த நிலையில் தனது வெளி நாட்டுத் தூதராலயங்களின் மூலம் நமது உப்புக்கு 'மார்க்கெட்' தேடலாம்; உப்பு உற்பத்தியாகும் பிரதேசத்தில் மேலும் பல ரசாயன உரத் தொழிற்சாலைகளை நிறுவி உப்பின் உபயோகத்தைப் பெருக்கலாம். உப்பு இந்தியத் துணைக் கண்டத்தில் உபரியான ஒரு பொருள். மேலும் ஏற்றுமதிகளின்மூலம் உப்பின் விலை எவ்வளவு அதிகரித்தாலும் பொது மக்களை பாதிக்கவே செய்யாது. எவ்வகையிலும் அரசின் வருமானத்துக்கும், பல்லாயிர மக்களின் வயிற்றுப் பிழைப்புக்கும் வழி செய்யும் ஒரு பெரிய தொழில் அழிந்து விடாமல் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

ஆனால் வடவர் ஆட்சி தென்னகத்தின் இந்த முக்கியத் தொழில் பிரச்சினையைத் தொடர்ந்துஅலட்சியப்படுத்திக் கொண்டே வருகிறது. தென்னக மக்கள் தங்கள் ஒருமித்த எழுச்சியின் மூலமாவது அவர்களை இதுபோன்ற நல்ல காரியங்களில் பணிய வைத்தே தீர வேண்டும். அத்தகைய ஒன்றுபட்ட எழுச்சியைத் தூண்ட நமக்குள்ள ஒரே முழக்கம்—இறுதி முழக்கம் இதுதான்: திராவிடநாடு திராவிடருக்கே!

ஒவ்வொரு சமுதாய மக்களும், அங்குள்ள பழக்க வழக்கங்கள் "தங்களுடையதே" என்றும், இலங்கும் பொருட்களும், துலங்கும் திட்டங்களும், தங்களுடைய கலாச்சாரமெனும் நீரோடையில் கண்டெடுக்கப்பட்ட தெனவும் எண்ணுகிறார்கள். இதைப்பற்றி ஓரளவு அறிந்தவர்களேகூட ஒரு நாட்டிலிருந்து — ஒரு கலாச்சாரத்திலிருந்து பெற்ற ஒன்றை பிறருடையதென ஒத்துக் கொள்ளத் தயங்குகிறார்கள். வரலாற்றை அடிப்படை

அமெரிக்கனின் சொந்தம்!

யாக வைத்துப் பார்ப்போமாயின் ஒவ்வொருவரின் கலாச்சாரமும், பழக்க வழக்கங்களும் மற்றொன்றுடன் ஓரளவு ஒத்துப் போவதையும், ஒரு சில பிறருடைய 'கண்டு பிடிப்புகள்' எனவும் உணரலாம். அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பல பொருட்களைக் கையாள்வதும், பல பழக்க வழக்கங்களையும் கொள்வதுமாக இருக்கிறார்கள். நாட்டுப் பற்றின் காரணமாக தம் நாட்டிலேயே உண்டானவை என்ற உணர்வை எழுப்பலாம். இதனை உணர்ந்த ஓர் அமெரிக்க மனித இயல் ஆசிரியர், ஓர் அமெரிக்கனுடைய அன்றாட வாழ்க்கையில் கையாளப் படும் பொருட்களையும், பழக்க வழக்கங்களையும், அவற்றின் பிறப்பிடங்களையும் எழுதியிருப்பது பல உண்மைகளை புலப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

காலையில் படுக்கையிலிருந்து எழும் அமெரிக்கன் 'பைஜாமா' அணிந்திருக்கிறான். அந்த உடை இந்தியர்களின் கண்டு பிடிப்பாகும். இந்தியாவின் பருத்தியும், கீழ் நாட்டின் 'லின'னும், ஆசியா மைனரின் கம்பளியும், சீன நாட்டின் பட்டும் சேர்ந்த துணி. உருவாகிய முறை தென் மேற்கு ஆசியாவைச் சார்ந்தது.

அந்த அமெரிக்கன் காலையில் எழுகின்ற நேரத்தில் மத்திய ஐரோப்பாவில் கண்டு பிடிக்கப் பட்ட கடிகாரத்தைப் பார்க்கிறுன்.

அவன் பின் குளிக்கும்போது அங்கு உபயோகிக்கும் 'சோப்' பண்டை பிரான்சு நாட்டைச் சார்ந்தது.

அவன் பல் துலக்குகின்ற பழக்கம் பதினெட்டாம் நூற்ருண்டின் பிற் பகுதியில் ஐரோப்பியர்களிடமிருந்து கற்றுக் கொண்டது.

அவன் முகச் சவரம் செய்து கொள்வது, பண்டை எகிப்திய குருமார் ஆரம்பித்த முறையாகும்.

இந்தியாவிலோ துருக்கியிலோ செய்த கத்தியால் முகச் சவரம் செய்து கொண்ட அவன், துருக்கி நாட்டுத் துண்டால் துடைத்துக் கொள்கிறுன்.

உடைகள் உடுத்த முற்படும் போது பண்டை ஆசியாக் கண்டத்து மக்கள் முறையைப் பின்பற்றி, குளிர் காலத்திற்கு மட்டுமே ஏற்றதான உடைகளைப் பிடிப்பாகப் போட்டுக் கொள்கிறுன்.

எல்லாவற்றையும் உடுத்திக் கொண்டு தன் அழகை, மத்திய தரைக்கு உரிய கண்ணுடியில் பார்க்கிறுன்.

அவன் சிற்றுண்டி உண்ணச் செல்கையில், அவனுக்கு முன்னுல் வைத்திருப்பது அனைத்தும் அயல் நாட்டுச் சரக்குகளென்பதை உணர்வதில்லை. உணவும். பானமும் சின நாட்டு மண் பாண்டத்தில் வைக்கப் பட்டிருக்கின்றன. அவன் உபயோகிக்கும் 'கரண்டி' இத்தாலியையும், 'ஸ்பூன்' ரோம் நாட்டையும் பிறப்புரிமையாகக் கொள்கின்றன. அவன் முதலில் குடிக்கும் காபி, அராபியர்களால் கண்டுபிடிக்கப்பட்ட அபிசினியச் செடியிலிருந்து கிடைப்பது. கீழை நாட்டிலும் ஐரோப்பாவிலும் உற்பத்தியான பானங்களையும் குடிக்கிறுன். அராபிய நாட்டுக் காப்பியுடன் இந்திய நாட்டு சர்க்கரையைச் சேர்க்கிறுன். அதனுடன் சேர்க்கும் பாலும், அது கறக்கும் முறையும் ஆசியா மைனரைச் சார்ந்ததாகும்.

பின், தனது வேலைக்கு வெளியே செல்லும்போது மழை பெய்யுமாயின் மெக்ஸிகோவில் தயாரான இரப்பர் செருப்பை அணிந்து கொண்டு, இந்திய நாட்டுக் குடையுடன் புறப்படுகிறுன்.

அவன் புகைபிடிக்க மெக்ஸிகோவின் சிகரெட்டையோ, பிரேசிலைச் சேர்ந்த சுருட்டையோ உபயோகிக்க வேண்டும்.

அதனைப் பெற கொடுக்கும் காசுகள் லிடியாவைச்சார்ந்தது.

அன்றைய செய்தி உணர செய்தித் தாள் வாங்குகிறுன். செய்தித் தாள் முறை பண்டைய செமைட்சுகளைச் சேர்ந்தது.

அதை அச்சடிக்கும் முறை ஜெர்மானியர்களையும், அச்சடிக்கும் இயந்திரம் சைனுவையும் சேர்ந்ததாகும்.

மேற்கண்ட எடுத்துக்காட்டால், எல்லாம் 'தன்னுடைய' நாட்டினுடையதென பெருமை கொள்ள எந்த அமெரிக்கனுலும் முடியாது. அவற்றிற்குரிய நாடுகளின் நாகரிக மேம்பாட்டுக்கு அவ்வப் பொருட்கள் உரியன என்பதை மறந்துவிடக்கூடாது. ❀

—"எழில்"

198956

சீனக் கதை

தமிழில்:

வ. சம்பந்தன் பி.ஏ.

பிரிவு

மறு நாள் இந்த ஜப்பானிய நாட்டை விட்டு என் தாய் நாடான சீனுவுக்கு நான் புறப் பட வேண்டும். போவதற்கு முன்னுல் கடைசி முறையாக டோக்கியோ நகரத்தைச் சுற் றிப் பார்த்துவிட்டு வரப் புறப் பட்டேன்.

அந்தி மாலை நேரம்......உல கத்தின் உன்னதமான நகரங்க ளில் ஒன்ருன டோக்கியோ தனிச் சோபையுடன் விளங்கிக் கொண்டிருந்தது. நெடுந் தூரம் நடந்து விட்டேன். களைப்பாக இருந்தது. பசி லேசாக வயிற் றைக் கிள்ளியது. காப்பி சாப் பிட எனக்கு எப்பொழுதுமே பிடிப்பதில்லை. என்னவோ காப்பி சாப்பிட்டால் எனக்கு இரவெல்லாம் தூக்கம் வருவ தில்லை. தூக்கம் வரவில்லை யென்ருல் படுக்கையில் படுத் துக்கொண்டே...என் தாய் நாடான சீனத் திருநாடு...என் மனேரம்யமான இளமைப் பரு வம்...சீனுவின் பசுமை நிறைந்த வயல்கள்...வயல்களிலே வேலை செய்யும் இளங் கன்னியர்கள்... இப்படிப்பட்ட நினைவுகளை நெஞ்சிலே சுமந்து கொண்டே கற்பனை உல கில் மூழ்கி விடுவேன். இந்த நினைவுகள் எனக்கு மிக்க வேதனையைத்தான் தரும். அதுவும் முழு நிலவு சாளரத்தின் வழி யாகப் பாய்ந்து, படுக்கை யிலேயே அமுதைப் பொழிந்து கொண்டிருக் கும் வேளையில் பசுமை யும் இனிமையும் நிரம்பி யத் தாய்த் திருநாட்டின் நினைவுகள் என் இதயத்

தைக் கசக்கிப் பிழிந்துவிடும்... ஆகவே டீ அருந்தத்தான் நான் விரும்பினேன். அதுவும் ஜப்பானிய ஹோட்டல்கள் இருக்கின்றனவே; அவை அத்தனையும் வெறும் போலி நாகரிகத்தின் பிரதிபிம்பங்களாகத்தான் எனக்குக் காணப்பட்டன. நாகரிகம் என்பதின் பெயரால் ஒரே கூத்தும் பாட்டும்கூச்சலும் நிறைந்த போலி வாழ்க்கையின் சின்னங்களாகத்தான் ஜப்பானிய ஹோட்டல்கள் இருந்தன.

ஆனால் எனக்கோ, நிர்மலமான அமைதி ஆட்சி புரியும் இடத்தில் அமர்ந்து, எதிரே பரந்து கிடக்கும் பசுமையான இயற்கையின் எழிலை ரசித்துக் கொண்டே ஒரு கப் சீன தேசத்து டீ சாப்பிட வேண்டும் போலிருந்தது!

பாதையின் இரு மருங்கிலும் ஏகப்பட்ட ஹோட்டல்கள் இருந்தன. ஆனால் ஒன்றிலாவது உள்ளே நுழைய என் மனம் ஒப்பவில்லை. வெறும் உதட்டு உபசாரமும், சங்கீதம் என்பதின் பெயரால் உயிரே இல்லாமல் எழுப்பப்படும் காட்டுக் கூச்சலும், வாடிக்கைக்காரர்களின் மகிழ்ச்சிக்காக ஹோட்டல் சிப்பந்திப் பெண்கள் உடுக்கும் ஆபாச உடையும், போலி நடை உடை பாவனைகளும் எனக்குப் பிடிப்பதேயில்லை. ஆகவே, ஊரைக்கடந்து ஒரு கோடிக்குச் சென்றேன். அரை மணி நேரம் மெதுவாக நடந்து நகரத்தின் நெருக்கமான பகுதியைக் கடந்து அமைதியான இடத்திற்கு வந்துவிட்டேன். அங்கே ஒரு மூலையில் தனிமையான இடத்தில் ஒரு ஹோட்டல் இருந்தது.

நான் முன்பு டோக்கியோ பல்கலைக் கழகத்தில் மாணவனாக இருந்த காலத்தில்— நாலைந்து வருடங்களுக்கு முன்னால் அந்த ஹோட்டலுக்கு எத்தனையோ முறை வந்திருக்கிறேன். என்னுடைய கல்லூரித் தோழன் நாகசாகியினுடையது அந்த ஹோட்டல்! நாகசாகி முற்போக்கு கருத்துக்கள் உடையவன். அந்தக் காலத்தில் நண்பர்கள் கூடி அரசியலையும் உலக நிலையையும் விவாதிக்க வசதியான இடமாக விளங்கியது அந்த ஹோட்டல். நானும் அங்கு செல்வேன். நண்பன் நாகசாகியுடன் பல விஷயங்களைப்பற்றி விவாதிப்பேன்.

ஆனால் போன வருடம் நாகசாகி அரசியலாருக்கு விரோதமான கொள்கையுடையவன் என்று கருதப்பட்டு கைது செய்யப்பட்டதும் நான் அங்கு செல்வதை நிறுத்திக்கொண்டேன். ஆனால் இப்பொழுது டீ குடிக்க வேண்டுமென்ற ஆவல் என்னை அங்கே பிடித்துத் தள்ளியது. ஹோட்டலினுள் நுழைந்தேன்.

நேரம் அதிகமாகி விட்டதால் கூட்டமே இல்லை. ஹோட்டலினுள் யாரையுமே காணோம். ஒருவேளை ஹோட்டல் கைமாறிப் போயிருக்கலாம். அப்படியிருந்தால் மகிழ்ச்சிதான். அந்த மாதிரி தனிமையான இடம் தான் எனக்கு அந்தச் சமயத்தில் தேவையாக இருந்தது. ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு ஒரு டீயுக்கு 'ஆர்டர்' கொடுத்தேன்.

ஹோட்டலினுள்ளே வருபவர்களைக் கவனித்துக் கொள்வதற்கென்று ஓர் இளம் பெண் மட்டும் தானிருந்தாள். அவள் உயரமாகவும் ஆனால் சற்று ஒல்லியாகவும் காணப்பட்டாள். அழகான நீல நிற கௌன் அணிந்திருந்தாள். அதிலே பட்டாம் பூச்சிகள் பறப்பதுபோல சித்திரங்கள் போடப்பட்டிருந்தன.

அவள் அப்படியும் இப்படியும் போகும்பொழுது பட்டாம் பூச்சிகள் பறப்பது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது.

அந்தப் பெண்ணை நான் இதற்கு முன் அந்த ஹோட்டலில் பார்த்ததே கிடையாது. என் நண்பன் நாகசாகி இருக்கும் பொழுது அவனுடைய இளம் மனைவிதான் அவனுக்கு ஒத்தாசையாக இருந்து வந்தாள். அந்தப் பெண்ணைப் பார்த்ததும் யாரோ ஒரு பாட்டுக்காரியோ நாட்டியக்காரியோ வயிற்றுப் பிழைப்புக்காகவே அங்கே வேலை செய்கிறாள் என நினைத்துக்கொண்டேன். அவளுடைய நடை உடை பாவனைகள் என் கவனத்தை அவள் பக்கம் இழுத்தது. அவளுடைய அசைவிலே ஒரு ரம்யம் இருந்தது. அவளைச் சுற்றி ஒரு ரசிக்கத்தக்க சூழ்நிலையே உண்டாகி இருந்ததுபோல் காணப்பட்டது. இளமையும் அழகும் கலந்த அவளுடைய தோற்றம் மிகவும் அசாதாரணமான கிளர்ச்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தது. மேஜையின் மீது டீகோப்பையை வைத்துவிட்டு என்னை நோக்கி ஒரு புன்முறுவலை உதிர்த்தாள் அவள். ஆனால் அந்த புன்சிரிப்பிலே உயிரே இல்லை. உள்ளத்திலிருந்து வரவில்லை அந்தச் சிரிப்பு. ஏதோ கடமைக்காகச் செய்வது போல்தான் இருந்தது. அவளுடைய ஆழமான இரு கண்களிலும் விவரிக்க முடியாத ஒரு ஏக்கம்...ஒரு சோகத்தின் சாயல் படிந்திருந்தது.

"ஐயா...உங்களுக்குப் பாட்டு பிடிக்குமா? பாட்டு வேணுமென்றால் பாடட்டுமா?"—என் எதிரில் அமர்ந்து கொண்டே அவள் கேட்டாள். அவள் முகத்தில் என்னவென்று கண்டுகொள்ள முடியாத ஒரு கவலைத் திரை அப்போதும் தென்பட்டது.

"வேண்டாம்........எனக்குப் பிடிக்காது ... உண்மையைச் சொல்லப்போனால் ஒரு கப் டீ சாப்பிட்டுவிட்டு இனாமாக பாட்டும் கூத்தும் அனுபவித்துவிட்டுப் போகும் கீழ்த்தரமான ஆள் அல்ல நான். அது கிடக்கட்டும் ...உன்னுடன் நான் சில வார்த்தைகள் பேசவேண்டுமே!" என்றேன்.

"தாராளமாகப் பேசலாம்... அதற்கென்ன?" என்று பதில் கூறிவிட்டு என்னை அப்படியே விழுங்கி விடுவதுபோல் பார்த்தாள் அவள். களங்கமற்ற அந்த பார்வை......அவளது அகண்ட நீலமணிக் கண்கள்......அற்புதமான பெண் அவள்! சிறிது நேரம் அந்த இடத்தில் அமைதி

சமாதானம்!

பிரெஞ்சு நாட்டு அறிஞர் வால்டேர், யுத்தத்தால் ஏற்படுகின்ற பயங்கர விளைவுகளை வெறுப்பவர்.

அவர் காலத்தில் ஏற்பட இருந்த ஒரு யுத்தத்திற்கு முன்னால், சம்மந்தப்பட்ட யுத்த வெறி பிடித்த ஒரு அதிகாரியை அணுகி, "இப்போது ஆரம்பமாகும் யுத்தம் முடிந்த பின் நீங்கள் சமாதானம் செய்து கொள்வீர்கள் அல்லவா?" என்று கேட்டார்.

"நிச்சயமாக..." என்றார், அவர்.

உடனே வால்டேர் இப்படிச் சொன்னார்: "அந்த சமாதானத்தை இப்போதே செய்து கொண்டு விடுவது தானே!"

நிலவியது. பின்பு அவளை நோக்கி, "இப்பொழுது இந்த ஹோட்டலின் முதலாளி யார்? யார் இப்பொழுது இதை வாங்கியிருக்கிறார்கள்? முன்பெல்லாம் நான் இங்கு பலமுறை வந்திருக்கிறேன்; உன்னை இங்கே பார்த்ததில்லையே?" என்று கேட்டேன்.

"பழைய மனிதர்தானா நீங்கள்? அப்பொழுதெல்லாம் இங்கே அடிக்கடி வந்து போன மகானுபாவர்களில் நீங்களும் ஒருவரா? உங்களையெல்லாம் நம்பவே கூடாதே! இந்த இடம் நான் பொறுப்பேற்ற பிறகு கசந்துபோய் விட்டதாக்கும்!" என்று அவள் சொன்னாள். அவள் பேச்சிலே கிண்டலும் கேலியும் காணப்பட்டது!

"ஓஹோ, நீதான் தற்போதைய முதலாளியா? ... மெத்த மகிழ்ச்சி!...எனக்கு முன்பே தெரிந்திருந்தால் எப்பொழுதோ இங்கே வந்திருப்பேன்," என்று அவளைத் தூக்கி வைத்துப் பேசும் தோரணையில் பதில் சொன்னேன்.

"சே ... சே ... இது என்னுடைய சொந்த ஹோட்டல் அல்ல. இது நாகசாகியின் கடைதான். ஆனால் தற்சமயம் நான் தான் பார்த்துக்கொள்கிறேன்!" என்றாள்.

எனக்கு ஒரே குழப்பம்...யார் இந்தப் பெண்? வார்த்தைகளை படபடவென்று கொட்டுகிறாளே தவிர, மிகவும் மரியாதையுடன் பழகுகிறாள்! நாகசாகியின் மனைவியோ இவள்? அவளை நான் பார்த்திருக்கிறேனே!... தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையின் ஒரு அந்தரங்கத்தைக் கூட நாகசாகி என்னிடம் ஒளித்து வைத்தது கிடையாதே! அவளையே கூர்ந்து நோக்கினேன். கண் காணாத நாட்டிலிருந்து வந்தவள்போல் அவளையே உற்றுப் பார்த்தேன்! எனக்கு வேண்டியவர்களின் முகங்களை யெல்லாம் என் நினைவுக்குக் கொண்டு வந்து பார்த்தேன். கொஞ்சம் புரிகிறது. பல வருடங்களுக்கு முன்னால் இந்தப் பெண்ணை நான் எங்கேயோ பார்த்திருக்கிறேன். அவளுடைய அழகான உருண்டு திரண்ட முகம்...ஜப்பானிய பெண்களிடமிருந்து மாறுபட்ட அந்த முக ஜாடை நான் பார்த்துப் பழகின ஏதோ ஒரு முகத்தைத்தான் என் ஞாபகத்திற்குக் கொண்டு வந்தது. அவளை நான் எங்கு பார்த்திருக்கிறேன்? வாழ்விலே ஒரே ஒரு தடவைதான் வரும் கனவு போல அந்த முகம் எனக்கு அந்தச் சமயத்தில் ஒரு பிரமையை உண்டாக்கியது.

என்னிடம் ஏற்பட்ட கலவரத்தை அவள் உணர்ந்து கொண்டவள்போல "ஐயா...... நான் வேலைக்காரியோ, நாட்டியக்காரியோ அல்ல......நாகசாகியின் இளைய சகோதரி......நாகசாகிக்கு ஒரு தங்கை இருந்தாள் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

எனக்கு இப்பொழுது எல்லாம் புரிந்து விட்டது. "சரி... சரி...இப்பொழுது தெரிகிறது. நான் முதல் வருடம் இங்கு வந்திருந்தபொழுது விடுமுறை சமயத்தில், நாகசாகி உங்கள் கிராமத்திற்கு அழைத்துச் சென்றான். அப்பொழுதுதான் நான் அந்த வீட்டின் தோட்டத்தில் நீ உலாவிக் கொண்டிருந்ததைப் பார்த்திருக்கிறேன்!" என்றேன்!

"உண்மைதான்," என்று மெதுவாகக் கூறிக் கொண்டே அவள் மேஜையின்மீது தலை

யைச் சாய்த்துக் கொண்டே என்னை நோக்கினாள் அவள். வெளியே பால் நிலவு காய்ந்து கொண்டிருந்தது. நிலவின் ஒளி சாளரத்தின் வழியாக உள்ளேயும் புகுந்து விளையாடிக் கொண்டிருந்தது. மேஜையில் தலையைச் சாய்த்துக் கொண்டே கால வெள்ளத்திலே எதிர் நீச்சல் போட்டு எப்பொழுதோ மறந்து விட்ட இளமை நினைவுகளை தன் இதய வட்டிலிலே பசுமையாக்கிக் கொண்டிருந்தாள் அவள். அவளுடைய அகண்ட சோகம் படிந்த அழகு விழிகள் ஏதோ ஆழங் காண முடியாத ரகசியத்தை பேசிக் கொண்டிருந்தன.

தலையைத் தூக்கி எதிரே மஞ்சள் நிற விளக்கொளி பட்டு மங்கலாகத் தெரியும் சுவரைப் பார்த்தேன். அந்தச் சுவரில் ஓர் இளம் பெண்ணின் உருவப்படம், எளிமையும் இனிமையும் கலந்து கிராமத்துப் பெண்போலக் காட்சியளிக்கும் ஒரு பெண்ணின் படம்—அந்தக் காலத்தில் நாகசாகி உரிமையுள்ள மனிதனாக இருந்த அந்தக் காலத்தில் மாட்டப்பட்டிருக்கும். நான் டோக்கியோ பல்கலைக் கழக முதல் வருட மாணவனாக இருந்த காலத்தில் இங்கு வரும் பொழுதெல்லாம் அந்தப் படத்தைப் பார்க்கத் தவறுவதேயில்லை. தாய்த் திருநாடான சீன நாட்டின் பரந்து கிடக்கும் பசுமையான வயல்கள் ...வயல்களிலே வேலை செய்யும் பெருமையும் அழகும் நிறைந்த கள்ளம் கபடமற்ற இளம் விவசாயப் பெண்கள்...அவர்கள் இனிய குர

லெடுத்துப் பாடும் அற்புதமான நாடோடிப் பாடல்கள்...அந்தப் பாடல்களின் இன்னிசையை சுமந்து வரும் மென்மை நிறைந்த இனிய தென்றல்... இந்த மனோரம்யமான நினைவுகளை யெல்லாம் அந்தப் படம் உண்டாக்கிவிடும் என் நெஞ்சில். அந்தப் படத்தில் தோற்றமளித்த அந்தப் பெண்தான்... இதோ, என் கண்ணெதிரில் இளமையும் அழகும் பொங்கி வழியும் பருவப் பெண்ணாகக் காட்சி அளிக்கிருள். என்ன விசித்திரம்!......பொழுது விடிந்தால் இந்த நாட்டைவிட்டே புறப்பட்டுச் செல்லப்போகும் நிலையில்தான் நான் அவளைச் சந்திக்க வேண்டுமா?

''ஆம்...எனக்கு இப்பொழுது தான் ஞாபகத்திற்கு வருகிறது. அப்பொழுது நான் விபரம் தெரியாத சிறுமி. பதினைந்து வயதுகூட இருக்காது. நான் பார்த்த முதல் சீன நாட்டு வாலிபன் நீங்கள்தான். என் அண்ணன் நாகசாகி உங்களைப் பற்றி எவ்வளவோ சொல்லியிருக்கிருன். காலத்தின் கோலம் நாம் இப்பொழுது மிகவும் எதிர்பாராத முறையிலே இந்த நிலையில் சந்திக்கிறோம்; இல்லையா?''—அவள் வார்த்தைகளில் சோகத்தின் சாயல் தென்பட்டது. விம்மும் நெஞ்சுடன் பேசினுள் அவள்.

''உன்னைப் பற்றிக்கூட உன் அண்ணன் என்னிடத்தில் சொல்லியிருக்கிருன். உன்னிடத்தில் தன் உயிரையே வைத்திருப்பானுமே! உன் பெயர் கூட மிகவும் இனிமையாக இருக்க வேண்டுமென்று அவன் தான் வைத்தானுமே......என்ன பெயர்...? மறந்துவிட்டேன்.... ஞாபகம் வரவில்லை...'' என்றேன். ஏதோ விவரிக்கமுடியாத ஓர் இணைப்பு எங்களிருவரிடையேயும் ஏற்பட்டிருப்பதாக எண்ணினேன் நான்.

''என் பெயர் பற்றிய கதை... எங்கள் குடும்ப விவகாரங்கள் கூட உங்களுக்குத் தெரிந்திருக்கிறதே!'' என்று கூறி அவள் கலகலவென்று சிரித்தாள். அந்த மோகனச் சிரிப்பு......என்னைப் பித்தனுக்கியது.

''என் பெயர்தானே கேட்கிறீர்கள்? 'வசந்தம்'...அதுதான் என் பெயர்!'' என்று மேலும் சொன்னுள் அவள். வாழ்க்கையிலே என்றும் வசந்தமும் மகிழ்ச்சியும் இணைந்து விளையாட வேண்டுமென்ற கொள்கையுடையவன் நாகசாகி. வாழ்க்கை புனிதமும் பூரிப்பும் உடையதாக—தெளிந்த வசந்த காலத் தென்றலாக மிளிர வேண்டுமென்ற லட்சியத்தின் அடிப்படையில் உண்டான தல்லவா அந்தப் பெயர்—என்று நினைத்துக் கொண்டேன். ஆனுல் வாழ்வு என்றுமே வசந்தமாகவே இருக்க முடியுமா என்ன?

நான் என்ன நினைக்கிறேன் என்பதை அவள் யூகித்துக் கொண்டவள்போல் ''என் அண்ணன் அப்படி நினைத்தான். அது அற்ப ஆசையாகி விட்டது!... வாழ்க்கைதான் என்ன விசித்திரமான விளையாட்டு...... என் பெற்றோர்கள் இறந்ததுமே என் அண்ணன்தான் என்னைப் பாதுகாத்து வந்தான். நன் கிராமத்திலேயே இருந்து வந்தேன். இயற்கையோடு ஒட்டிய தெளிந்த வாழ்க்கை வாழ வேண்டும் என்பதுதான் அவனுடைய ஆசை,'' என்ருள். அவளுடைய வார்த்தைகளிலே முன்பு காணப்பட்ட மகிழ்ச்சி இப்பொழுது இல்லை.

''அதனுல்தான் உன்னைப் பார்க்க முடியவில்லை. அது சரி... கிராமத்தில் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்?''

''பெரிய தோட்டம்...அதைப் பார்த்துக் கொள்வதிலேயே பொழுது போய்விடும். அதனோடு நல்ல நல்ல புத்தகங்களையும் படிக்கக் கற்றுக் கொண்டேன். அப்பொழுதெல்லாம் சிறகடித்துப் பறக்கும் இளம் வானம் பாடிபோல் சுதந்திரமாக இருந்தேன். ஆனால் இப்பொழுது......இந்த நிலையில்...?'' —அவளால் அதற்குமேல் பேச முடியவில்லை. வார்த்தைகள் வெளி வராமல் தொண்டையை அடைத்துக் கொண்டன. மேஜையின்மீது தலையை வைத்துக் கொண்டே விம்மினாள். அந்தப் பேசும் இரு விழிகளிலே கண்ணீர் தேங்கி நின்றது.

அவள் இதயத்திலே நடக்கும் போராட்டம் எனக்கு நன்ருகத் தெரிந்தது. எளிமை நிறைந்த அவள் பால்ய வாழ்வுதான் உண்மையானது. இந்த டீ கோப்பைகள்....ஹோட்டல்..... பழக்கப்பட்டுப்போன சிரிப்பு... வேடிக்கை.........இவையெல்லாம் போலி......இதயத்திலே இடம் பெருதவை! சோகப் பதுமையாக அவள் அமர்ந்திருந்த தோற்றம் என்னையும் சோகத்தில் ஆழ்த்தியது. விவரிக்க முடியாத ஒரு பாசமும் தோழமை உணர்ச்சியும் உந்த அவளுடைய மலர்க் கரங்களை எடுத்து என் கையில் வைத்துக் கொண்டேன். அவள் ஒன்றும் பேசவில்லை. அசையாமல் அப்படியே என்னை அன்பு ததும்பப் பார்த்தாள். கனிந்த அன்புப் பார்வையிலே ஆயிரமாயிரம் எண்ண அலைகள் மோதுவதைக் கண்டேன். ''உன்னுடைய அண்ணி எங்கே?'' என்று கேட்டேன்.

அவள் கண்கள் எரிந்து கொண்டிருந்த மஞ்சள் நிற விளக்கையே பார்த்துக் கொண்டிருந்தன. அவள் அப்படியே சிலை போல் அமர்ந்திருந்தாள். அவள் எதைப் பற்றி நினைப்பாள்? பால்யத்திலே ஓடி ஆடி விளையாடிய பசுமை ததும்பிய தோட்டத்தையா? ஆற்றுச் சுழல் போல் தோன்றி மறையும் மறுபடியும் வராத அவளுடைய இளமைப் பருவத்தைப் பற்றியா? கனவு காணும் அந்த இனிய முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

மெதுவாக என் பிடியிலிருந்து தன் கையை விடுவித்துக்

கட்டளை!

இத்தாலியில் முசோலினியின் ஆட்சிக் காலத்தில், பள்ளிகளில் ஏழைப் பிள்ளைகளுக்கு அரசாங்கச் செலவில் இடைவேளை உணவு அளிக்கப்பட்டு வந்தது. அப்படி சாப்பிட உட்காருவதற்கு முன்னர், அந்தப் பிள்ளைகள் பின் வரும் பிரார்த்தனையைச் செய்யும்படி உத்திரவிடப் பட்டிருந்தனர்.

''இல் ட்யூஷே! (முஸோலினியே) நான் ஆரோக்கியமாகவும் பலசாலியாகவும் வளர்ச்சியடைய வேண்டுமென்பதற்காகவே நீங்கள் எனக்கு அளிக்கும் ஆகாரத்துக்கு வந்தனம் அளிக்கிறேன். கடவுளே! பாசிஸ்ட் இத்தாலி நீண்ட காலம் நிலைத்திருப்பதற்காக இல் ட்யூஷேவைக் காப்பாற்று!''

கொண்டு "கடந்த மூன்று மாதங்களாக அவள் படுத்த படுக்கையாக இருக்கிருள். இழுப்பு நோய். எம் மருந்தாலும் குணப்படுத்த முடியவில்லை. மனம் கெட்டு விட்டால்?..."—மெதுவாகப் பதில் சொன்னுள் அவள். அந்த இடத்திலே பூர்ண அமைதி தாண்டவமாடிக் கொண்டிருந்தது. வீதியில் வண்டிகள் நடமாட்டம் வெகுவாகக் குறைந்திருந்தது. நேரம் போவதே தெரியவில்லை.

"இப்பொழுது நடுநிசியாகி இருக்கலாம்...."—முணகிக் கொண்டே என்னைப் பார்த்து பேசத் தொடங்கினுள் அவள்... "நேரம் போனதே தெரியவில்லை. சிறிது நேரத்திற்கு முன்னுல் ஏதோ வேறு உலகத்தில் வசிப்பது போன்ற பிரமையில்தான் நான் இருந்தேன். உங்களுக்குத் தெரியுமா? என் அண்ணன் நாகசாகி கொல்லப்பட்டான்!..."

"என்ன?"—நான் என்னையும் மீறி அலறிவிட்டேன். ஆனுல் அவள் என்னவோ அப்படியேதான் அமர்ந்திருந்தாள்.

"ஆமாம்.......அரசியலாருக்கு விரோதமான கருத்துக்கள் உள்ளவன் என்று சந்தேகப்பட்டு அவனைப் போலீஸ்காரர்கள் பிடித்துக்கொண்டு போனுர்கள். அவனிடமிருந்து ஏதோ விஷயத்தைக் கிரகிக்க வேண்டி அவனை அடித்து நொறுக்கினுர்கள். சொல்ல வேண்டியதொன்றும் அவனிடம் இல்லை. கடைசியில் ஆத்திரத்தில் அவனை அடித்தே கொன்று விட்டார்கள்!"

என் நண்பனின் முடிவு இப்படியா ஆக வேண்டும்? என்னுல் நம்பவே முடியவில்லை. என் முகத்தைப் பார்த்துக் கொண்டே அவள் உணர்ச்சியுடன் பேசிக்கொண்டே போனுள். "அவ்வளவுதான்... அவன் கதை முடிந்துவிட்டது. இப்பொழுது நடுநிசியாகி விட்டது; எங்கள் வாழ்வில்கூட இப்பொழுது நடுநிசிதான்!"

அவள் கண்களிலே நீர் கலங்கியது. இரண்டு துளி கண்ணீர் கன்னங்களிலே உருண்டோடியது. அந்தக் கண்ணீர்த் துளிகள்...அவளுடைய துயர வாழ்வின் பிரதிபலிப்புகள்......ஜப்பானில் பிறந்தாலும் ஜப்பானிய வாழ்வு முறைக்கு மாறுபட்ட அவளுடைய வாழ்க்கை...அவளுடைய எண்ணங்கள்...அந்த நல்ல மனதின் அன்புக் காணிக்கைகள்தான் அந்தக் கண்ணீர்த் துளிகள்! நானும் அன்னிய நாட்டைச் சேர்ந்தவன்தான். சீன நாட்டுக்காரன் நான். ஆனுல் எண்ணத்திலே ஒன்றுபட்டவர்கள் அல்லவா? விவரிக்க முடியாத ஒரு சக்தி என்னை ஆட்கொண்டது. இரக்க உணர்ச்சி உந்த அவளை அப்படியே வாரி எடுத்து அணைத்துக் கொண்டேன். தன் சொந்த சகோதரியின் துயர் கண்டு எப்படிப்பட்ட இரக்க உணர்ச்சி ஒரு சகோதரனுக்கு உண்டாகுமோ அந்த இரக்க உணர்ச்சி தான் என் உள்ளத்திலே அந்தச் சமயத்தில் மேலோங்கி நின்றது!

"இதோ பார்...என் அன்புச் சகோதரிபோல்தான் உன்னை நான் பாவிக்கிறேன். என்னுடன் என்னுடைய நாடான சீனுவுக்கு வந்து விடு! அங்கே நாங்கள் புதியதொரு சமுதாயத்தை உருவாக்கிக் கொண்டு வருகிறேம். இந்த ஜப்பான் நாடு 'நரக'த்திற்கு ஒப்பானது! இன்றுதான் நான் இந்த நாட்டில் தங்கியிருக்கும் கடைசி நாள். நாளைக்கு இந்த நாட்டை விட்டே புறப்பட்டு விடுகிறேன்.



"நீங்க ஒன்றும் கவலைப்படாதிங்க......பூர்வாங்க விசாரணைக்கு ஏற்பாடு செய்துவிட்டோமே!"

சொல் சகோதரி; வருகிறாயா?'' என்று அவளிடம் கேட்டேன்.

அவள் ஒன்றும் பேசவில்லை. எனனைப் புரிந்து கொள்ளாதவளாக—ஏதோ விவரிக்க இயலாத ஒரு கனவுலகிலிருந்து பார்ப்பது போல் என்னைப் பார்த்தாள். சூடான கண்ணீர்த் துளிகள் என் கையின் பின்புறத்திலே விழுந்தது. அவைகளைப் பார்த்துக்கொண்டே அவள் சொன்னாள்: ''உங்கள் அன்புக்கு நன்றி. ஆனால் உங்கள் அழைப்பை ஏற்றுக் கொள்ள இயலாத நிலையில் இருக்கிறேன். நான் எங்கும் வருவதற்கில்லை. இங்கேதான் என் வாழ்க்கை கழியவேண்டும். என் அண்ணன் இருந்த இடம். இதை விட்டு நான் எங்கும் வரமுடியாது!'' — அவள் வார்த்தைகளிலே கண்டிப்பு இருந்தது!

தூரத்து மாதா கோயிலின் மணி 'கணீர்' என்று அடித்தது. கடிகாரத்தைப் பார்த்தேன். இரவு ஒரு மணியாகி இருந்தது. ''நான் நாளைய தினம் காலை புறப்படவேண்டும். அதிகமான வேலை இருக்கிறது. சாமான் எல்லாம் கட்ட வேண்டும்!'' என்று கூறிக்கொண்டே எழுந்தேன்.

''உங்கள் முகவரியையாவது கொடுத்து விட்டுப் போங்கள். நான் உங்களுக்குஎழுதுகிறேன்; கண்டிப்பாக எழுதுகிறேன்!'' என்று கம்மிய குரலில் கூறிக் கொண்டே ஒரு புத்தகத்தை எடுத்து என்னிடம் நீட்டினாள். கை நீட்டி வாங்கினேன். அழகான புத்தகம்...அவள் பெயர் மேலட்டையில் பொறித்திருந்தது.

புத்தகத்தைத் திறந்தேன். ஒரு பக்கத்தில் இரண்டு ரோஜா இதழ்கள் வைக்கப்பட்டிருந்தன. நாளாகி விட்டாலும் வாசனை போக வில்லை. அந்த இரண்டு ரோஜா இதழ்களோடு உள்ளே ஒரு சிறு புகைப்படம் இருந்தது. 'யூனிபாரம்' உடையில் இருக்கும் ஒரு வாலிபனின் தோற்றம் அது. என்ன கேட்பதென்றே தெரியாமல், ''யார் இந்தப் படத்தில் இருப்பது?'' என்றேன்.

நாணம் கலந்த லேசான புன்முறுவலை உதிர்த்துக் கொண்டே ''என் உயிரினுமினிய அன்பர்'' என்று பதில் கூறினாள். ''ஆனால் அவர் இப்பொழுது இல்லை!''

''என்ன?'' என்று ஆவல் ததும்பக் கேட்டேன்.

''மஞ்சூரியாவில் சண்டையில் அவர் கொல்லப்பட்டார்!''

எனக்கு ஒன்றும் புரியவில்லை. ''ரோஜா இதழ்களுக்கிடையே வைத்துப் பத்திரமாக பாதுகாக்கப்படும் இந்த போட்டோவில் காணப்படும் வாலிபன்......என் நாட்டிலே போர்க் களத்திலே கொல்லப்பட்ட அந்த வாலிபன் ...நாகசாகியின் சகோதரியின் இன்னுயிர்க் காதலன்...'' —அதற்குமேல் என் நினைவு ஓடவில்லை. புத்தகத்தை அவளிடமே கொடுத்து விட்டேன். என்னுடைய முகவரியைக்கூட எழுதவில்லை. ஒரு வார்த்தையும் பேசாமல் வெளியே செல்லப் புறப்பட்டேன்.

ஆனால்...அந்த முகம்...அண்ணனை இழந்தாள்; அவன் கடையில் நடமாடி அந்தக் கவலையை மறக்கிறாள்......காதலனைப் பறிகொடுத்தாள்; வாடிப்போன இதழ்களுக்கு மத்தியிலே அவன் புகைப் படத்தை வைத்துக் கொண்டு திருப்தி அடைகிறாள் ...அவளது ஏகாந்தமான பார்வைக்கும், பற்றற்ற வாழ்க்கைக்கும் காரணம் எனக்குப் புலப்

பட்டுவிட்டது. அந்தச் சின்னஞ் சிறு வயதில் ஏற்பட்ட இரண்டு பேரிடிகளைத் தாங்கிக் கொள்ளும் சக்தி அவளுக்கு எப்படித்தான் கிடைத்தது?...

"நீங்கள் புறப்பட்டுவிட்டீர்களா?"—அவளுடைய குரலிலே தடுமாற்றம் காணப்பட்டது.

எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. லேசாகத் தலையை ஆட்டினேன். கதவு வரையில் அவள் வந்து நின்று "நீங்கள் எப்படி சொல்லிக் கொள்ளாமல்கூட போகலாம்? பிரியும்பொழுதுகூட சொல்லிக் கொள்ளாமல் போக வேண்டுமா?" என்று கேட்டாள்.

"பிரிவு.....போகிறேன்...அப்படிப்பட்ட வார்த்தைகளையே சொல்ல வேண்டாம்"—குனிந்த தலை நிமிராமல் விம்மும் நெஞ்சுடன் கூறிக் கொண்டே வெளியேறினேன் நான். அவளுடைய முகத்தை கடைசி முறையாக ஏறிட்டுப் பார்க்கக்கூட எனக்கு திராணி இல்லை!

●

பகலில் ஹோஹயாமாவை விட்டுக் கப்பலில் போகும் பொழுது மேல் தளத்தில் நின்று கொண்டே ஆறு ஆண்டுகள் என் இளமைப் பருவத்தை, என் எண்ணங்களை, என் ஆசைகளை ஊட்டி வளர்த்த அந்த ஜப்பான் நாட்டையே பார்த்துக் கொண்டிருந்தேன். அங்கே......டோக்கியோ நகரத்தின் ஒரு மூலையில் தன்னந் தனியாக ஒரு சோகப் பதுமை...சகோதரப் பாசத்தையும், காதல் நினைவுகளையும் நெஞ்சிலே சுமந்து கொண்டு வானம்பாடிபோல் இன்பச் சிறகடித்துப் பறக்க வேண்டிய இளமைப் பருவத்தில் துயரே உருவாகி நிற்கும் அந்தப் பருவ மங்கை...அந்த நினைவு அலைகள் கடல் அலைகளோடு போட்டியிட்டன. வர வர அந்தத் தீவு என் பார்வையிலிருந்து மறைந்து கொண்டே வந்து கடைசியில் அழிந்து போய் விட்டது. இதயத்திலே சம்மட்டியால் அடித்தது போல் இருந்தது. நெஞ்சின் பாரம் என்னை உருத்தியது. மூன்றும் நாள் கப்பலை விட்டு ஹாங்காங் நகரில் இறங்கினேன். ஜப்பானியருடன் யுத்தம் அப்பொழுது தான் ஆரம்ப நிலையில் இருந்தது. வேறு எதைப்பற்றியுமே நினைக்காமல் சீனப் போர்ப் படையில் என்னையும் ஒரு போர் வீரனைப் பதிவு செய்து கொண்டேன்.

●●●

சந்தேக மயம்!

ஒரு பெண்ணுக்குத் தன் கணவனிடம் பெரிய சந்தேகம்! ஒவ்வொரு நாள் மாலையிலும் அவன் வெளியிலிருந்து வந்ததும், அவனுடைய கோட்டைப் பரிசோதிப்பாள். அதிலிருந்து எப்படியோ ஒரு ரோமம் அகப்பட்டு விடும். இதைப் பற்றி இரவு முழுவதும் ஒரே அமர்க்களம் செய்வாள்.

ஒரு நாள் மாலையில் அவள் துருவித் துருவித் தேடியும் கோட்டிலிருந்து ஒருரோமம் கூட அகப்படவில்லை. "சரிதான்; இப்போது தலை வழுக்கையான பெண்களின் சகவாசங்கூட ஏற்பட்டு விட்டதா?" என்று புலம்பத் தொடங்கினள்.

—'கான்ஸ்டலேஷன்' (பாரிஸ்)

நீதி மன்றத்தில்

நீதி மன்றம்—சட்டத்தை மீறி சமுதாயத்தில் கொட்டமடிக்கும் கயவர்களைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தி தண்டிக்கும் கோயில்—அதிகாரத்தை அமுலாக்கும் அரண்மனை— என்றுதான் மக்கள் பொதுவாக எண்ணிக்கொண்டிருக்கிருர்கள். செங்கோல் வீற்றிருக்கும் அக்கொலு மண்டபத்தில்–சட்டத்திற்குப் பங்கம் ஏற்படாமல் பாதுகாக்கும் சன்னிதானத்தில்—அதிகாரத்தின் துணைகொண்டு அக்ரமங்களைச் செய்யும் அநியாயக்காரர்களை அடக்கும் கூடத்தில்—சிரிப்புக்கோ, வேடிக்கைக்கோ, விநோதத்திற்கோ இடமில்லை என்றுதான் நினைப்பீர்கள்.

ஆனல் அங்கும் வேடிக்கையான நிகழ்ச்சிகள்—விலா நோக சிரிக்கவைக்கும் சம்பவங்கள் —விந்தையான காட்சிகள்— இடம்பெறத்தான் செய்கின்றன. நீதி மன்றத்தின் 'இப்பகுதி' மக்களுக்குத் தெரிவதில்லைதான். அங்கு நடைபெறுகின்ற நகைச்சுவைக் காட்சிகள் பலருக்குத் தெரியாமலே போய்விடுகின்றன!

நீதிமன்றத்தில் வீற்றிருக்கும் நீதிபதிகளும், கூண்டிலே தண்டனையை எதிர் நோக்கிக் காத்திருக்கும் குற்றவாளிகளும், பல துறையில் பணியாற்றும் அலுவலாளர்களும், மனிதர்கள் தான். ஆகவே நீதி மன்றத்திலும் பல நகைச்சுவைச் சம்பவங்கள்—சுவையான நிகழ்ச்சிகள் நடைபெறத்தான் செய்கின்றன.

வக்கீல்கள் மக்களின் வசை புராணத்திற்கு அதிகமாக இலக்காவார்கள். ஆனல் அவர்கள் வாழ்க்கை மிகவும் விசித்திரமானது. அவர்கள் பலதுறைகளிலும் அனுபவப்பட்டவர்களாக இருக்க வேண்டும். ஏனென்ருல், வைத்தியரை— கணக்காளரை—ரேகை நிபுணரை—இன்னும் பலரை அவர்கள் குறுக்குக் கேள்வி கேட்க வேண்டியிருப்பதால், எல்லா துறைகளிலும் அவர்கள் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும். மற்றவர்களுக்காக வாதாடுவதே அவர்களது வாழ்க்கையின் முக்கிய அம்சம். நாட்டுக்காகப் போரிடும் வீரனைப் போல கட்சிக்காரனுக்காக வக்கீல்கள் போராடவேண்டியிருக்கிறது. அவர்களது வாழ்வு நீதிமன்றம், நீதிபதி, சாட்சி — ஆகியவர்களுடன் அடங்கி விடுகிறது.

ஆனல் இந்தக் கட்டுரையின் நோக்கம், சட்டப் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டு நகைச்சுவையையும் அள்ளித் தெளிக்கிருர்கள் வக்கீல்கள் என்பதை தெரியப்படுத்துகிறது. அவ்வப்போது நீதி மன்றத்தில் நடைபெற்ற நகைச்சுவை நிகழ்ச்சிகளில் சில கீழே தொகுத்துத் தரப்பட்டிருக்கிறது.

●

ஒரு கடிகாரத் திருட்டு வழக்கில் நீதிபதி 'குற்றவாளி அல்ல'

நகைச் சுவை

என்று கூண்டிலே நிறுத்தப் பட்டிருந்த குற்றவாளியைப் பார்த்துக் கூறினர்.

அந்தக் குற்றவாளி தனது வக்கீலைப் பார்த்து ''அப்படி என்ருல் என்ன பொருள்?'' என வினவினன்.

அதற்கு வக்கீல், ''நீ வீட்டிற்குப்போவதற்கு அனுமதி அளிக்கிருர்கள்—விடுதலை கிடைத்து விட்டது!'' என்ருர்.

உடனே அந்தக் குற்றவாளி வக்கீலைப் பார்த்து, ''அப்படியானல் கடிகாரத்தை நான் திருப்பித் தர வேண்டுமா?'' என்று கேட்டான்!

●

ஒரு வழக்கில், தனது கட்சிக்காரனை சிறையினுள் அடைபடுவதைத் தடுப்பதற்காக தனது திறமை முழுவதையும் பயன்படுத்தி வாதாடிக்கொண்டிருந்தார், ஒரு வக்கீல்.

''ஜுரர்களே! இந்தக் குற்றத்தை என் கட்சிக்காரன் செய்வதற்கு என்ன காரணம் இருக்க முடியும்? அவன் மிகவும் சாதாரணமானவன்—படிக்காதவன்—முட்டாள்...'' — இப்படி வர்ணித்தார்.

குற்றவாளி விடுதலை அடைந்தான். பிறகு அவன் வீட்டிற்குச் சென்றதும் மனைவி நடந்ததைப்பற்றி விசாரித்தாள். அதற்கு அவன், ''நான் விடுதலை அடைந்துவிட்டேன். ஆனல் இனிமேல் இந்த வக்கீலை என் வழக்குகளுக்காக ஏற்பாடு செய்யமாட்டேன். அவன் என்னை முட்டாள் என்று அழைத்தான். அதை நீதிபதி நம்பிவிட்டாரே!'' என்ருன்!

●

அடிதடி வழக்கொன்றில் சாட்சியம் அளிக்க வந்தவரை வக்கில் குறுக்குக்கேள்வி கேட்க ஆரம்பித்தார்.

வக்கீல்: அவர்கள் அடித்துக் கொண்டிருக்கும்போது நீ எவ்வளவு தூரத்தில் இருந்தாய்?

சாட்சி: நான்கு அடி, ஐந்தரை அங்குலம் தூரத்தில்!

வக்கீல்: இவ்வளவு சரியாக எப்படிச் சொல்கிருய்?

சாட்சி: இதைப்போல யாராவது ஒரு முட்டாள் கேட்பான் என்று எண்ணி நான் அதை அளந்து பார்த்துக் கொண்டேன்!

●

ஒரு வழக்கில் சாட்சியைப் பார்த்து வக்கீல், ''நீங்கள் மிகவும் நல்ல மனிதர்!'' என்ருர்.

அதற்கு அந்த சாட்சி உடனே பதிலளித்தார்: ''நானும் உங்களை அப்படித்தான் அழைக்க விரும்புகிறேன், பிரமாணம் மட்டும் எடுக்காமல் இருந்தால்!

●

சாட்சியின் குணத்தை விளக்குவதற்காக வக்கீல் குறுக்குக் கேள்வி கேட்க ஆரம்பித்தார்.

வக்கில்: நீ இந்த இருவருடனும் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தாய் அல்லவா?

சாட்சி: ஆம், இரு நண்பர்களுடன்...!

வக்கீல்: இரு திருடர்களுடன் ...அப்படித்தானே?

சாட்சி: இருக்கலாம். ஆனால் அவர்கள் இருவரும் வக்கீல்கள்!

●

வக்கீல்: இந்தக் கைதி மிகவும் நாணயமானவன் என்று நீங்கள் கருதுகிறீர்கள்; அல்லவா?

சாட்சி: ஆம்......நாணயமானவர் என்பதற்கு எடுத்துக்காட்டே அவர்தான்.

வக்கீல்: எந்த ஆதாரத்தின் பேரில் இதைக் கூறுகிறீர்கள்?

சாட்சி: ஒருமுறை அவர் வக்கீலாக முயன்று தோல்வி கண்டார்!

●

கார் விபத்தில் அடிபட்டவனைப் பிராஸிகியூஷன் தரப்பில் சாட்சியாக விசாரித்து முடிந்தது. எதிரி வக்கீல் குறுக்கு விசாரணை செய்யத் தொடங்கினார்.

வக்கீல்: விபத்து நடந்தவுடன், எதிரி உம்மை 'உமக்கு ஒன்றும் வேதனை இல்லையே?' என்று கேட்டதற்கு, 'இல்லை' என்று நீர் பதில் சொன்னதுண்டா, இல்லை?

சாட்சி: அதைக் கேட்கிறீர்களா? சொல்லுகிறேன் கேளுங்கள்; நடந்த விஷயம் இது: என் கிழக் குதிரை பூட்டிய பழைய வண்டியை ஓட்டிக் கொண்டு சாலையிலே போய்க் கொண்டிருந்தேன். எதிரே மோட்டார் காரை ஓட்டி வந்த எதிரி என் வண்டியை இடித்து ஒரு குழியிலே தள்ளினார். உங்கள் வாழ் நாளிலேயே அந்த மாதிரி காட்சியை நீங்கள் கண்டிருக்க மாட்டீர்கள். நான் அப்படியே மல்லாந்து விழுந்தேன்; என் கால்கள் அந்தரத்தில் தூக்கிக் கொண்டிருந்தன. என் குதிரை அப்படியே மல்லாந்து விழுந்தது; அதன் கால்கள் அந்தரத்தில் தூக்கிக் கொண்டிருந்தன. என் வண்டி மல்லாந்து விழுந்தது; அதன் கால்கள் அந்தரத்தில் தூக்கிக் கொண்டிருந்தன. இதோ இந்த மோட்டார் டிரைவர் தம் காரை விட்டு வெளியே வந்தார். வண்டியையும் குதிரையையும் என்னையும் பார்த்தார். என் குதிரையின் கால்கள் முறிந்து போயிருக்கக் கண்டார். திரும்பவும் காருக்கு அருகே போனார். உள்ளே கையை விட்டு ஒரு பிஸ்டலை எடுத்தார். குதிரையைச் சுட்டுக் கொன்றார். பிறகு என்னிடம் வந்தார். 'இனி உம் சங்கதி என்ன? உமக்கு ஒன்றும் வேதனை இல்லையே?' என்றார். 'இல்லை' என்று அழுத்தமாய்ச் சொன்னேன்.

●●●

ஜனநாயக நாட்டிலே...

ஜனநாயக நாட்டின் இலட்சணம் என்ன தெரியுமா? அங்கே அவசியமில்லாத வகையில் ஒரு பைசாவைச் செலவழித்தாலும்கூட அது ஒரு உழைப்பாளியை ஒழித்துக் கட்டியதற்குச் சமமாகும்.

—டி. எம்மென்

எருமையும் குவளை மலரும்

முதல்வன்

நல்ல குளிர் வேளை. பகலவன் இன்னும் உதயமாகவில்லை. தூங்கி யெழுந்த தோழியர் இருவரும் மாடுகளை அவிழ்த்து விட்டு, அவற்றை மேய்ச்சலுக்கு ஓட்டிப்போகப் புறப்பட்டனர். கொட்டடியில் இருந்த ஒரு எருமை வயலில் நுழைந்து, அங்கு விளைந்திருந்த மெல்லிய கரும்புகளை மோதியது. அதைப் பார்த்த தலைவி, தன் தோழியிடம், "இந்த எருமையைப் பார்த்தாயா?' என்றாள்.

"ஏன்? அதற்கென்ன?" என்றாள் தோழி.

"அந்த எருமை வயலில் உள்ள கரும்புகளின்மீது மோதி விட்டு, அந்தத் தடாகத்திற்குப் போகிறது பார்; அதோ, அங்குள்ள குமுத மலர்களை விலக்கி விட்டு, அந்த அழகான குவளை மலரைத் தின்கிறதே! அதைத் தின்றுவிட்டு இப்போது அசை போடுகிறது!"

"தினந்தோறும் பார்க்கும் காட்சிதானே? இதிலே என்ன புதுமை இருக்கிறது?" என்று கேட்டாள் தோழி.

"ஒன்றுமில்லை; ஏதோ தோன்றியது; சொன்னேன்!" என்று தலைவி கூறினாள். தோழிக்கு ஒன்றும் புரியவில்லை. 'அவள் எதற்காக எருமையைப்பற்றி இப்போது தன்னிடம் சொல்ல வேண்டும்?' என்று அவளுக்கு விளங்க வில்லை.

"கருங்கோட்டுச் செங்கண் எருமை கழனி
இருங்கோட்டு மென்கரும்பு சாடி—அருங்கோட்டால்
ஆம்பல் மயக்கி அணிவளை ஆர்ந்து அழகாத்
தாம்பல் அசையினவாய் தாழ்ந்து."

[திணைமாலை நூற்றைம்பது 137]

இதைத்தான் தலைவி சொன்னாள், "பெரிய கொம்பையும், சிவந்த கண்களையும் உடைய இந்த எருமையானது, வயலில் விளைந்துள்ள கொம்பு போன்ற மெதுவான கரும்பை மோதி, பிறகு தனது அரிய கொம்புகளால் குமுத (ஆம்பல்) மலர்களை விலக்கி, அங்குள்ள அழகான குவளை மலரைத் தின்று விட்டு, தன் வாயினைத் தாழ வைத்து அழகாக தம் பற்கள் அசை போடுவனவாகக் காணப்படுவதை தோழியே! நீ பாராய்!" என்று தன் தோழியிடம் கூறினாள். தலைவி இதை எதற்காகக் கூறுகிறாள் என்பது புரியாமல் தோழி தவித்தாள். மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் இந்தப் பாட்டின் உட்பொருள் விளங்காது.

ஷேக்ஸ்பியரின் இலக்கியங்களைத் துருவித் துருவி ஆராய்ந்து, அதன் நயம் பற்றியும், சுவை பற்றியும் பலர் நிறைய எழுதிக் குவித்திருக்கின்றனர். ஆனால் இலக்கியச் சுரங்கம் எனப் புகழப்படும் பைந்தமிழின் இலக்கியங்களின் திறனாய்ந்து (Criticism) யாரும் எழுதவில்லை. இப்போதுதான்

பல அறிஞர்கள் அந்தப் பெரும் பணியை செய்து வருகிறார்கள்.

இலக்கியத்திற்கு நம் மொழி தவிர வேறு எந்த மொழியிலும் இலக்கணம் கிடையாது. ஒரு பாடலில் தலைவனோ தலைவியோ, தன்னைப்பற்றி ஏதும் கூறுவிட்டாலும், அவர்கள் வாழும் இடம், உண்ணும் உணவு, செய்யும் தொழில், அங்கு பறக்கும் பறவைகள், உலவும் மிருகங்கள், விளையும் பயிர்கள், தலைவன் தலைவியரது மனோநிலை, இத்தனையும் அறிந்து கொள்ளலாம். அப்படி அறிந்து கொள்ள தொல்காப்பியமும், இறையனார் களவியல் உரையும் நமக்கு உதவுகின்றன.

எனவே, கணிமேதாவியார் பாடிய இந்தப் பாட்டில் வரும் தலைவியின் நிலையையும் புரிந்து கொள்ள முடியும்.

தலைவியின் பேச்சிலிருந்து நாம் தெரிந்து கொள்ளும் பொருள்கள் :— 'வயல், குமுத மலர், குவளை மலர், கரும்பு' முதலியன. மேலும் எருமையைப் பற்றியும் குறிப்பிடுகிறாள்.

இவை யாவும் மருதத் திணைக்கு உரியவை. வயலும் வயலைச் சார்ந்த நிலமும் மருத நிலமாகும். அகத்திணையை தொல்காப்பியர் ஏழு திணைகளாகப் பிரித்து, ஒவ்வொரு திணையிலும் இன்னதுதான் நிகழ வேண்டும் என்று ஒரு வரையறை செய்திருக்கிறார். அதன்படி 'ஊடலும், ஊடல் நிமித்தமும்' நிகழும் திணையாக மருதத்திணையைச் செய்திருக்கிறார்.



கணவனிடம் செல்லமாகக் கோபித்துக் கொள்வது ஊடலாகும். ஒரு விலைமகளிடம் போய்விட்டு வீடு திரும்பும் தலைவனைத் திருத்தவும் தலைவி ஊடுவாள்.

அந் நாளிலும் விலைமகளிர் இருக்கக் காரணம் என்ன என்று சிந்திக்கிறார்கள். போரில் வீரமரணம் அடையும் ஆண்கள் பலர்; அதிகமாக ஆண்கள்தான் இளமையில் இறந்துவிடுவதாக ஜனத்தொகை (Census) கணக்கெடுப்போர் அறிவிக்கிறார்கள். ஆகவே ஆண்களைவிட பெண்களின் தொகை அதிகமாக இருந்தது. இன்றும் அப்படித்தான் இருக்கிறது! ஆகையால் ஆண்களில் சிலர் பெண்கள் பலரோடு வாழ நேர்கின்றது என்று உலக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்!

மருதத்திணையில் தலைவியின் ஊடலுக்கு பரத்தையர் காரணமாக அமைந்திருப்பதை பெரும்பாலும் காணலாம். எனவே இந்தப் பாடலிலும் ஒரு விலைமகள் காரணமாக அமைந்திருப்பாள் என்று யூகிக்கலாம். இந்த யூகத்தோடு பாடலை உற்று நோக்கினால், இதில் வரும் குவளை மலர் ஒரு விலைமகளைக் குறிக்கும் என்பது விளங்கும். அப்படியானால் எருமை என்பது யாரைக் குறிக்கும்? தலைவனைத் தானே குறிக்கும்!

என்னதான் இருந்தாலும் தன் கணவனை ஒரு பெண், 'எருமை' என்று கூறலாமா?'' என்று அறுவறுப்போடு பலர் கேட்கலாம். அவன் குணம் அப்படியிருந்தால் அவள் என்ன செய்வாள்? குணத்திற்காக இப்படி உவமை கூறுவது இழுக்கல்ல என்பது முடிந்த முடிவாகும்.

மெல்லிய கரும்பைப் போன்ற தலைவி; அவளுடைய கணவன் எருமைப் பண்பு கொண்டவன்; தன் மனைவியை விட்டு பொது மகளிரை நாடுபவன்; குவளை மலரைச் சுற்றி குமுத மலர்கள் இருப்பதுபோல், அந்த விலைமகளைச் சுற்றி அவளது தோழியரும் தாயும் இருக்கின்றனர். எருமையானது குமுத மலர்களை விலக்குவதுபோல், அவனும் அவர்களை விலக்கிவிட்டு அந்த விலைமகளிடம் இன்பமடைகிறான். குவளை மலரைத் தின்றுவிட்டு எருமை அசை போடுவதைப் போல், தலைவனும் அந்தப் பொதுமகளிடம் தான் பெற்ற இன்பத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்திருக்கிறான். இந்தக் கருத்தில்தான் தலைவி எருமையைப் பற்றி பேசினாள். அவன் பரத்தையர் இல்லத்திலே காலங் கழிக்கிறானே என்ற வருத்தமும், தன்னை அவன் மறந்துவிட்டானே என்ற ஏக்கமும் அவளது பேச்சில் மறைந்திருக்கிறது.

இப்படியாக ஒரு பாட்டின் அர்த்தம் ஒன்றாகவும், அதை உற்று நோக்கினால் அதில் வரும் பொருள்கள் ஒரு நிகழ்ச்சிக்கு உவமையாகவும் இருந்தால் அதற்கு ''உள்ளுறை உவமம்'' என்று பெயர். இந்த உள்ளுறை உவமைக்குக்கூட தொல்காப்பியர் இலக்கணம் அமைத்திருக்கிறார்.

இம்மாதிரியான பலபாடல்கள் நமது இலக்கியத்தில் இருக்கின்றன. அவை நம் சிந்தனைக்கு வேலை கொடுத்து, அலாதியான ஒரு சுவையையும் தருகின்றன. அச்சுவையை தமிழ் மக்கள் அனைவரும் உணர்ந்து மகிழும் நாள் என்நாளோ? ❀

★ பிரிவுபசாரம் ★

சமையல் அறையில் கொஞ்சம் கொஞ்சமாக இருள் பரவியதால், நேரம் அதிகமாகிவிட்டதென்று அவளுக்கு நன்ருகத் தெரிந்தது. வெளிச்சத்திற்காக விளக்கு போட்டுக் கொள்ளவும், மணி எவ்வளவாகியிருக்கிறது என்று பார்க்கவும் அவள் விரும்பவில்லை. ஏனெனில் அவ் வேலைகளை கவனிப்பதில் அவள் இரண்டொரு நிமிடங்களை வீணுக்க வேண்டி இருக்கும். ஏற்கனவே நேரம் அதிகமாகி விட்டது! இன்னும் கவனிக்க வேண்டிய காரியங்களோ நிறைய இருக்கிறது. அதனுல் எதிலும் கவனத்தைச் செலுத்தாமல் மனதை ஒரு நிலைப் படுத்தி காரியத்தில் கண்ணுக இருந்தாள். இன்னெரு கவலை அவளுக்கு.........வீட்டில் துணிகளைத் துவைத்து, பெட்டி போடுவது ஒழுங்காக இருக்காது என்று யாரோ சொல்லி விட்டார்களாம்! எப்படி ஒழுங்காக இருக்காதோ பார்க்கலாம்! மனதில் வைராக்கியம் வந்து விட்டால், வேலை நன்ருக இருக்கக் கேட்பானேன்?

"அம்மா!.......ஓ......அம்மா!"—அவன் குரல் வீட்டின் அடுத்தப் பகுதியிலிருந்து கேட்டது.

"இதோ வந்துவிட்டேன், விக்டர்!"—இவள் உடனே பதில் சொன்னுள்.

கையிலிருந்த கடைசி துணியையும் தேய்த்து, மடித்து, ஒழுங்காக மற்றவைகளோடு வைத்துவிட்டு, கணப்போடு இருந்த பெட்டியைத் தூர வைத்தாள். பிறகு துணிகளைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். அப்போது தான் மணி பார்க்க வேண்டும் என்கிற எண்ணம் அவளுக்கு உதித்தது. தலை நிமிர்ந்து பார்த்தாள். மணி ஆறரை ஆகி இருந்தது. இன்னும் அவ்வளவு வேலைகள் தலைக்குமேல் கிடக்கின்றனவே, அவள் எப்படி செய்யப் போகிருளோ? கவலை இல்லாமல் இல்லை அவளுக்கு!

கண்ணுடி முன்னுல் நின்று, அவன் கழுத்தில் கட்டியிருந்த 'டை'யை சரிப்படுத்திக் கொண்டிருந்தான். அவள் துணிகளோடு அறைக்குள் நுழைந்தபோது கண்ணுடி வழியாக அவன் தன்னைக் கவனிக்கிருன் என்று அவளுக்குத் தெரியாமல் இல்லை. துணிகள் வைக்கும் பெட்டியைத் திறந்து, அவனுக்காக துணிகளை அடுக்கி வைத்தாள். பெட்டியில் துணிகளை எப்படி வைப்பதென்றுகூட அவனுக்குத் தெரியாது. கலைக்காமல் வைக்க அவள் உதவி அவனுக்கு அவசியம். அதனுல் அவ் வேலையை அவளே செய்து விட்டாள்!

துணிகளைப் பெட்டியில் அடுக்கி வைத்த பின் அவள் எழுந்து நடந்தாள். வாயிலைக் கடந்து வெளியே போகுமுன், சற்றுத் தயங்கி நின்ருள்.

ஆங்கில மூலம்:
ஜெரோம் விட்மான்

தமிழில்:
"அதிகமான்"

"நான் கொஞ்சம் கடை வரையில் போய் வருகிறேன் விக்டர்.........இன்று இரவுக்கு எனக்குக் கொஞ்சம் சாமான்கள் வேண்டியிருக்கிறது!" என்ருள்.

"போய் வாயேன் அம்மா! ஆனுல் சீக்கிரம் வந்துவிடு..." என்ருன் விக்டர் மணியைப் பார்த்துக் கொண்டு.

மளிகைக் கடையை அவள் அடைந்தபோது அங்கு ஏற்கனவே இரண்டு பெண்கள் ஏதோ வாங்கிக் கொண்டிருந்தார்கள், கடைக்காரனிடத்தில்! இவளைப் பார்த்தவுடன், அவர்களைக் கவனிப்பதை நிறுத்திவிட்டு, அருகில் வந்தான் கடைக்காரன்.

"என்ன திருமதி மோரிஸ்! நீங்கள் இப்பக்கம் இன்றைக்கு தலை காட்டவே இல்லையே — பையனை அனுப்பலாமென்றல்லவா நான் முடிவு செய்து வைத்திருந்தேன்," என்று கூறினன்.

பிறகு மற்றவர்கள் பக்கம் திரும்பி, "தயவு செய்து நீங்கள் கொஞ்சம் பொறுமையாக இருங்கள்........திருமதி மோரிஸ் வீட்டில் இன்று ஒரு விருந்து... அவர்கள் மகனுக்கு பிரிவுபசாரம்.....என்ன திருமதி மோரிஸ், அப்படித்தானே?" என்று கேட்டான். அவள் பதில் பேசாமல் தலையை மட்டும் அசைத்தாள்.

"சரி.........உங்களுக்கு என்னென்ன வேண்டும்? அதைச் சொல்லுங்கள் திருமதி மோரிஸ்!"

அவள் கொண்டு வந்திருந்த

பட்டியலை அவனிடம் நீட்டினுள்.

"எப்படிப்பட்ட விருந்து?" என்று ஒருவள் கேட்டாள்.

"பிரிவுபசாரவிருந்துதான்... திருமதி மோரிஸின் மகன் விக்டர் இங்கிலாந்துக்குப் போகிறுன் நாளைக்கு! அதனுல்தான்... அப்படித்தானே?" — கடைக்காரன் திருமதி மோரிஸிடம் கேட்டான். அவள் அப்போதும் தலையை மட்டுந்தான் ஆட்டி வைத்தாள்.

"இங்கிலாந்துக்கா?"–ஒருத்தி வியப்போடு வினவ, கடைக்காரன் வேலையை விட்டு விட்டு ஆரம்பித்துவிட்டான்.

"என்ன, நீங்களெல்லாம் மிகவும் அருகில் இருக்கிறீர்கள்... இவ்விஷயம் பற்றி உங்களுக்குத் தெரியவே தெரியாதா? கல்லூரியில் விக்டருக்கு உபகாரச் சம்பளம் கிடைத்திருக்கிறது.

ஆருயிரம் பேர் படிக்கும் கல்லூரியில் இவன் ஒருவனுக்குத்தான் அச் சலுகை. படிப்பில் கெட்டிக்காரன். அதனுல் மேல் படிப்புக்கு அயல் நாட்டுக்கு அனுப்புகிருர்கள். அப்படித்தானே திருமதி மோரிஸ்?''

''ஆமாம்!'' — அமைதியாக அவள் பதில் சொன்னுள். முகத்தில் எவ்வளவோ உணர்ச்சிகள்!

''பையன் மிகவும் புத்திசாலி; கெட்டிக்காரன். அதனுலதான் அவனுக்கு இந்தச் சலுகை கிடைத்திருக்கிறது. வயதுகூட அவனுக்கு அப்படி யொன்றும் அதிகமாகவில்லை.......இன்றைக்கெல்லாம் இருந்தால் பதினெட்டுக்கு மேல் இருக்காது....உம்... உங்களைக் கேட்டால் தெரியுமே; அவனுக்கு எவ்வளவு வயதாகிறது திருமதி மோரிஸ்?''

''பதினேழு!''—அவள் சொன்னுள்.

''பார்த்தீர்களா? நான் சொல்லவில்லை...அவன் இன்னும் குழந்தைதான்!''

''இவ்வளவு சிறு வயதில் பையனை ஒரு வருடத்திற்கு வெளி நாட்டிற்கு அனுப்பி வைக்க உங்களுக்கு பயமாக இல்லை?...'' என்று கேட்டாள் ஒருத்தி, தாயைப் பார்த்து.

''பயமென்ன இதில்? ஒரு வருடத்திற்குத்தானே பிரிவு?'' —கடைக்காரன் சமாதானம் சொன்னுன் இடையில்!

அதை அவளும் திருப்பிச் சொன்னுள். ''ஆமாம்! ஒரு வருடத்திற்குத்தானே?''

* * *

மகன் தாய்க்காக வாயிலில் காத்துக் கொண்டிருந்தான், மணியைப் பார்த்தபடியே.

''சீக்கிரம் கவனி அம்மா...... என் நண்பர்களெல்லாம் வரும் நேரமாகி விட்டதே!'' என்று அவன் அவளை அவசரப் படுத்தினுன்!

''கவலைப்படாதே விக்டர்...... விரைவில் எல்லாவற்றையும் முடித்து விடுகிறேன்,'' என்று தாய் மகனுக்கு ஆறுதல் கூறி விட்டு உள்ளே போய் வேலையைக் கவனிக்க ஆரம்பித்து விட்டாள். விக்டர் அதோடு நின்று விடவில்லை. அடிக்கடி தாய் உள்ளே விரைவாக தின்பண்டங்களைத் தயாரிக்கிருளா என்று கவனித்த வண்ணம் இருந்தான்.

நண்பர்கள் வரும்போது பானம்மட்டும் தயாராக இருக்கவில்லை.

''நீங்கள் இவைகளை எல்லாம் சாப்பிட்டு முடிப்பதற்குள்ளே பானத்தைத் தயார் செய்துவிடுகிறேன்,'' என்ருள் தாய். மகன் தன்னிடமிருந்து தற்காலிகமாகப் பிரிகிருனே என்கிற வேதனை அவளை ஒவ்வொரு அடியிலும் தடுக்கிறது. அதனுல் வேலையில் வேகமில்லை. முகத்தில் மகிழ்ச்சிக் களை இல்லை. அல்லும் பகலும் தன் அருகே இருந்து... வளர்ந்த மைந்தனின் முகம்...... மறந்து போய் விடுமோ, பிரிந்து இருந்தால் — என்கிற பயம் அவளைக் கொல்லாமல் கொன்றது. பானத்திற்குச் சரியாக சர்க்கரை போட்டோமா இல்லையா என்கிற நினைப்பில் இரண்டொரு தடவை சர்க்கரையை அதிகமாக அள்ளிப் போட்டுவிட்டாள். அதனுல் மறுபடியும் ஒரு தடவை அவள் பானம் தயாரிக்க வேண்டியிருந்தது.

இதற்குள் விக்டரின் நண்பர்கள் ஏக் அமர்க்களமாக

அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தார்கள். அவர்கள் எதிரில் விக்டர் தாயை அடிக்கடி கூப்பிட்டு 'இதைக் கொண்டுவா; அதைக் கொண்டுவா! என்றான். இடையிடையே பானத்தையும் கேட்க அவன் தவறவில்லை.

தாயின் உள்ளத்தில் ஏற்பட்ட போராட்டத்தைப் பற்றி மகன் நினைக்கவில்லை.

கடைசியில் ஒரு வழியாக திருமதி மோரிஸ் கையில் பானத்தோடு ஹாலுக்குள் நுழைந்தாள்.

பிள்ளைகள் எல்லாம் சாப்பிட்டு முடித்துவிட்டு அமர்ந்திருந்ததால் ஆரவாரத்தோடு 'இனிப்பை' வரவேற்றார்கள்.

''உங்கள் மகனைப் பிரிந்திருப்பது உங்களுக்குக் கஷ்டமாக இருக்கும்; இல்லையா?''

எவனோ ஒரு பொடியன் கேட்டான் இப்படி. அவள் பதில் சொல்லவில்லை. சொன்னால் குரல் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடும் என்று அவளுக்குத் தெரியாதா? அதனால் கேள்விக்குப் பதிலாக புன்னகையைக் காட்டி அவள் உள்ளே போய்விட்டாள்.

தீர்ந்துவிட்ட பானத்தை, திரும்பவும் தயாரிக்க, இளைஞர்கள் நன்றாக அனுபவித்துக் குடித்தார்கள்.

அவள் கையிலிருந்த காரியம் முடிவதற்குள் மகன் ஏழு தடவை கூப்பிட்டு விட்டான். எல்லாம் முடிந்தது. உள்ளத்தில் இருந்த சோகத்திற்கு அவளால் அணைபோட முடியாததால், ஒரு பக்கம் சோர்ந்து நின்றுவிட்டாள். எவ்வளவு நேரம் அப்படி நிற்க முடியும்?

காலையிலிருந்து ஓடி ஆடி வேலை செய்த சிரமம்கூட அவளுக்கு இப்போது பெரிதாகத் தெரியவில்லை!

காலியாகக் கிடந்த கிண்ணங்களையும், தட்டுகளையும், ஹாலிலிருந்து எடுத்து வரலாம் என்று அவள் புறப்பட்டாள். ஆனால் ஹாலுக்குள் அடியெடுத்து வைக்கும் முன், விக்டரின் நண்பன் ஒருவன் பேசிய பேச்சைக் கேட்டு அவள் மேலே நடக்காமல் நின்றுவிட்டாள்.

''அது ஒன்றும் அவ்வளவு பெரிய விஷயம் அல்ல...நீ பாரிசுக்குப் போய்விட்டால் போதும் ...பெண்கள் தானாக வந்து உன் மீது விழுவார்கள்...பிறகு கோலாகலம்தான்...!''

அதைத் தொடர்ந்து வீடே அதிரும்வரை எல்லோரும் சிரித்தார்கள். அந்த சமயத்தில் தாய் உள்ளே நுழைந்தாள். சிரிப்பு அடங்கியது.

ஒவ்வொரு பாத்திரத்தையும் அவள் நிதானமாக எடுத்து கூடைக்குள் வைத்தாள். எடுத்து வைத்தவுடன் அவள் அவ்விடத்தை விட்டு அமைதியாக சமையல் அறையை நோக்கி நடந்தாள்.

ஹாலில் இருந்த வாலிபர்களின் கண்களில் சிரிப்பு துள்ளுவதையும், உரக்கச் சிரிக்காமல் இருக்க அவர்கள் பாடுபடுவதையும் அவள் அறியாமல் இல்லை.

இவ்வளவு நேரமாக அவள் உள்ளத்தில் இருந்த சோகம் போன இடம் தெரியவில்லை; அதற்குப் பதில் அவள் முகத்தில் கடூரம் குடி கொண்டது.

சோகமிருந்தால் விளைவு வேறு.

ஆத்திரம் வந்தால் விளைவு வேறுதான். திருமதி மோரிஸ் இப்போது விளைவைப் பற்றிக் கவலைப்படவில்லை. மகன் யோக்கியனாக இருக்க வேண்டும் என்றுதான் விரும்பினாள். ஃ

மாபசான் எழுதிய பிரெஞ்சுக் கதை

மார்கரெட் இறக்கும் நிலையில் இருந்தாள். அவளுக்கு வயது 56. எனினும் அவள் 75–தைக் கடந்தவள் போன்று தோன்றினாள். அவளால் எளிதாக மூச்சுவிட முடியவில்லை. முகம் மிகவும் வெளுத்துக் காணப்பட்டது. உடல் நடுங்கிக்கொண்டிருந்தது. வாழ்வின் எல்லையை நோக்கி அவள் வெகு வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தாள்.

அவளுடைய அக்கா சுசேன் கட்டிலினருகே தேம்பிக்கொண்டிருந்தாள். சுசேன், மார்கரெட்டைக் காட்டிலும் ஆறு வயது மூத்தவள்.

நோயாளியின் கட்டிலின் அருகே ஒரு சிறு மேசை இடம் பெற்றிருந்தது. அதன் மீது தூய வெண்மையான துணி விரிக்கப்பட்டிருந்தது. இரண்டு மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டிருந்தன. மார்கரெட்டிற்காகப் பாதிரிக்கு ஆள் அனுப்பியாகிவிட்டது. பாதிரியின் வரவு ஒவ்வொரு வினாடியும் எதிர் நோக்கப்பட்டது.

மார்கரெட் படுத்திருந்த அறையில் மரண அமைதி நிலவியது. அறையின் பல பக்கங்களிலும் மருந்துச் சீசாக்கள் பல்வேறு ரகங்களில் காட்சியளித்தன. மேசை, நாற்காலிகளும் பிற பொருள்களும் மூலைக்கொன்றாகச் சிதறிக் கிடந்தன. மரணம் அந்த அறையில் ஒளிந்துகொண்டிருந்தது. அது விரைவில் தனது இரையைப் பிடித்துக் கொள்ளும்; ஓர் உயிர் இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்று விடும்.

*

இவ்விரு சகோதரிகளின் வரலாறு என்ன தெரியுமா? அது ஒரு சோகக் கதை. எனினும் இவர்களைப் பற்றித் தெரியாதவர்களோ அன்றி இரக்கப்படாதவர்களோ அப் பகுதியில் யாரும் இருக்க முடியாது.

சுசேன் மூத்தவள். இளமையில் ஓர் இளைஞனைக் காதலித்தாள். அவன் பெயர் ஹென்ரி. அவனும் சுசேனை உள்ளன்புடன் விரும்பினான். இருவரும் மணம் செய்து கொள்வதென முடிவு செய்தனர். மண நாள் நிச்சயிக்கப்பட்டது. ஆனால் ஹென்ரி திடீரென இறந்து விட்டான்.

சுசேனின் இளமைக் கனவு அழிந்துவிட்டது. அவள் வாழ்க்கையையே, ஏன், உலகத்தையே வெறுத்துவிட்டாள். தன் வாழ்நாளில் ஒருவரையும் மணந்துகொள்வதில்லை என்று முடிவு செய்துகொண்டாள். அவள் தன் உறுதியை என்றுமே விட்டுக்கொடுக்கவில்லை. கன்னி அழியாத கைம்பெண்ணாகவே வாழ்ந்து வந்தாள்.

காதல் என்பது அழகிய கனவல்ல. மின்னல் போன்று தோன்றி மறையும் உடலின்பமுமல்ல. காதல் என்பது இரு மனங்களின் சேர்க்கை. ஆண், பெண் இருவருக்கும் ஒருவரை ஒருவர் பூரணமாக்குவதற்காக ஒரு விவரிக்க இயலாத தவிப்பு உண்டாகிறதே—அதன் பெயர்

தமிழில்: **எம். ஆரெம். முத்து** பி. ஏ.

மன்னிப்பு

தான் காதல்! சுசேனுக்கும் இத் தவிப்பு ஏற்பட்டது. ஆனால் முற்றுப் பெறவில்லை.

இந் நிகழ்ச்சி நடைபெற்ற பொழுது மார்கரெட்டிற்கு வயது 12.

ஒரு நாள் காலை நேரம். மார்கரெட் சுசேனைக் கட்டிக் கொண்டு அழத் தொடங்கினாள். "அக்கா, நீ கன்னியாகவே வாழ்வதென முடிவு செய்துவிட்டாய். உனது வாழ்க்கை வெறும் பாலைவனமாகிவிட்



டது. அதில் மறு முறையும் நீர் ஊற்றுக்கள் தோன்றும் என்ற நம்பிக்கைக்கு இடமில்லை. நீ வாழ்நாள் முழுவதும் துன்பத்தில் உழலும் பொழுது நான் எல்லா வசதிகளுடனும் வாழ விரும்பவில்லை. நீ சுவைக்காத வாழ்வை நான் ருசிக்க விரும்பவில்லை. நானும் மணம் செய்து கொள்வதில்லை என்று முடிவு செய்து விட்டேன். நான் என்றும் உன்னுடன்தானிருப்பேன்!''

சுசேனின் மனம் நெகிழ்ந்தது. தங்கையின் அன்பை எண்ணி அவள் வியந்தாள். எனினும் மார்கரெட்டின் உறுதியில் சுசேனுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை.

ஆனால் மார்கரெட் தனது வாக்கைக் காப்பாற்றி விட்டாள். அவளது பெற்றோர்களும் சுசேனும் எவ்வளவோ வற்புறுத்திக் கூறியும் அவள் மணம் செய்துகொள்ளவில்லை. அவளிடம் அழகு கொஞ்சி விளையாடிற்று. எனினும் அவள் மணவினையை வெறுத்தாள். அவள் சுசேனைவிட்டு என்றுமே நீங்கியதில்லை.

சுசேனும் மார்கரெட்டும் ஒன்றாக வாழ்க்கை நடத்தினர். இருவரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்ததில்லை. எனினும் இருவரிலும் மார்கரெட் மிகவும் சோகமாகக் காட்சியளித்தாள். அவள் தனது அக்காவிற்கெனத் தனது வாழ்க்கையையே தியாகம் செய்துவிட்டாள். அவள் விரைவில் முதுமையடைந்து விட்டாள். 30 வயதிலேயே அவள் கூந்தல் நரைத்துவிட்டது. அடிக்கடி அவள் உடல் நலிவுற்றாள். ஆண்டுகள் செல்லச் செல்ல அவள் உடல் மிகவும் சீர்கெட்டு வந்தது. இன்று அவள் வாழ்வின் இறுதியை அடைந்துவிட்டாள். இறப்பிலும் அவள் தனது அக்கா சுசேனை முந்திக்கொண்டு விடுவாள் போலத் தோன்றியது.

''அக்கா,'' என்றால் பேச முடியவில்லை. நான் இனி நீண்ட நேரம் உயிருடன் இருக்கமாட்டேன். விரைவில் பாதிரிக்கு ஆள் அனுப்பு!'' என்று மார்கரெட் மிகுந்த சிரமத்தினிடையே கூறினாள்.

சுசேனுக்கு என்ன கூறுவதென்றே புரியவில்லை. தேம்பித் தேம்பி அழத் தொடங்கினாள்.

விஞ்ஞானம் எவ்வளவோ முன்னேறிக்கொண்டு போகிறது. எனினும் பயனில்லை. நெஞ்சில் தோன்றும் இன்ப அலைகளையும் துன்ப அலைகளையும் அளந்து கூறும் ஒரு கருவி இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை.

பீரங்கிக் குண்டுகளுக்கு முன் ஒருவேளை மனிதன் அசையாமல் நிற்கக் கூடும். எனினும் அவன் அன்பிற்கு முன்பு பின்னடையத்தானே வேண்டியிருக்கிறது.

*

மாடிப் படிகளில் யாரோ ஏறி வருவது போன்ற சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து கதவு திறக்கப்பட்டது. வயது முதிர்ந்த பாதிரி ஒருவர் அங்கு தோன்றினர். பாதிரியைக் கண்டவுடன் மார்கரெட் திடீரென்று படுக்கையை விட்டு எழுந்தாள். அவளுடைய உதடுகள் திறந்து திறந்து மூடின.

பாதிரி மார்கரெட்டிற்கு அண்மையில் வந்தார். அவளுடைய கைகளைத் தாங்கிக்கொண்டு நெற்றியில் ஒரு முத்தமிட்டார்.

''மன உறுதியைத் தளர விடாதே. நீ செய்த 'பாவ'ங்களுக்கு மன்னிப்புக் கோரும் சம

யம் நெருங்கிவிட்டது. மகளே! நீ செய்த 'பாவ'ங்களைக் கூறு!''

மார்கரெட்டின் முடி முதல் அடிவரை உடல் நடுங்கியது. அதன் பயனு அவள் படுத்திருந்த கட்டில் அசைந்தது.

''அக்கா, அழாதே! நன்கு உட்கார்ந்துகொள். உனக்காகத்தான் நான் இப்பொழுது எனது இரகசியத்தைக் கூறுகிறேன்!''

தேம்பிக்கொண்டிருந்த சுசேனைத் தூக்கி பாதிரி ஒரு நாற்காலியில் அமரச்செய்தார். பின்னர் சுசேன், மார்கரெட் இருவரின் கைகளையும் ஒன்ருக இணைத்தார்.

மார்கரெட் பேசத் தொடங்கினுள். வார்த்தைகள் ஒவ்வொன்ருக வெளி வந்தன.

''அக்கா, என்னை மன்னித்து விடு. நீ என்னை மன்னிக்கத்தான் வேண்டும். எனது வாழ்க்கையில் இந்த நிமிடத்தை நான் எத்தனை ஆண்டுகளாக அச்சத்துடன் எதிர் நோக்கிக் கொண்டிருந்தேன் என்பது உனக்குத் தெரிந்தால்..............?''

சுசேனுல் பீறிட்டுக்கொண்டு வரும் அழுகையை நிறுத்த முடியவில்லை. ''நான் எதற்காக உன்னை மன்னிக்க வேண்டும் மார்கரெட்? என் பொருட்டு நீ மணம் செய்து கொள்ளவில்லை. இதுவரை நீ என்னை விட்டுப் பிரிந்ததில்லை. எனக்காக நீ எதுவும் செய்யத் தயாராயிருந்தாய். நீ தியாகத்தின் சின்னம் மார்கரெட்!'' என்று விம்மல்களுக்கிடையே கூறினுள்.

''அக்கா, நீ நிதானமாக இருக்க வேண்டும். நான் கூறுவது முழுவதையும் பொறுமையாகக் கேள். இடையே என்னைத் தடுத்து நிறுத்தாதே. உனக்கு ஹென்ரியை நினைவிருக்கிறதா?''

சுசேனின் மனத் திரையில் அவளது காதலன் ஹென்ரி தோன்றினுன். அவள் மார்கரெட்டின் முகத்தை ஏறிட்டு நோக்கினுள். மார்கரெட் தொடர்ந்தாள்.

''எனக்கு அப்பொழுது வயது 12. என் மனம்போல் ஆடிப் பாடித் திரிந்தேன். இளமையிலேயே நான் பிடிவாதக்காரி என்று பெயரெடுத்தேன். முதன்

ஒன்று பலவாக...

பிணிகள் பெருக வழி வகுக்கும் ஈக்களை மருந்திட்டுக் கொன்றுவிட முடியும். அப்படி இன்றைய தினம் (ஏப்ரல்—**1**) நாம் ஒரு ஈயைக் கொல்லாமல் விட்டால், அந்த ஒரே ஒரு ஈ மாத்திரமே, செப்டம்பர் மாதம் **10**—ம் தேதி முடிவதற்குள்,

5, 598, 720, 000, 000

ஈக்களாகப் பெருகி விடுமோம்! —('நல்வழி')

முதலில் ஹென்ரி நமது வீட்டிற்கு வந்தபொழுது குதிரை வீரனைப் போன்று உடை அணிந்திருந்தார். அவர் குதிரையை விட்டு இறங்கி நமது அப்பாவைப் பார்க்க வேண்டுமென்று கூறினர். உனக்கு நினைவிருக்கிறதா? நான் அவரைப் பார்த்தவுடனே அவருடைய அழகில் மயங்கிவிட்டேன். அவர் நமது அப்பாவுடன் பேசிக்கொண்டிருந்த பொழுது நான் அந்த அறையில் ஒரு ஓரத்தில் நின்று கொண்டு அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். குழந்தைகளின் உணர்ச்சி பல்வேறு வகைப்பட்டது. ஆம்; அது முற்றிலும் உண்மை. அவரைப்பற்றி நான் கனவு காணத் தொடங்கினேன்.

''பின்னர் அவர் உன்னை மணக்கப் போவதாக என்னிடம் கூறினர்கள். அது எனக்குப் பேரதிர்ச்சியாயிருந்தது. அந்த அதிர்ச்சியை என்னல் தாங்க முடியவில்லை. தொடர்ந்து நான் மூன்று இரவுகள் தூங்கவில்லை. அழுதுகொண்டே இருந்தேன். ஹென்ரி ஒவ்வொரு நாள் மாலையும் நமது வீட்டிற்கு வந்தார். அது உனக்கு நினைவிருக்கலாம். அவருக்குப் பிடித்தமான முறையில் நீ அவருக்கென 'கேக்கு'கள் தயார் செய்வாய். அவரும் நீ தயாரித்தவைகளைத் தின்றுவிட்டு ஒயினை அருந்துவார். இறுதியில் 'மிகவும் இனிமையாயிருந்தது' என்று கூறுவார். கதிரவனைக் கண்ட தாமரையன்ன உன் முகம் மலரும். 'இனிமையாயிருந்தது' என்ற சொல்லை அவர் எந்த முறையில் கூறுவார் என்பது எனக்கு இன்றும் நினைவிலிருக்கிறது.

''நான் உன்பால் பொருமை கொண்டேன். உனது மணநாள் நெருங்கிக் கொண்டிருந்தது. உனது திருமணத்திற்குப் பதினைந்து நாட்களே இருந்தன. என் மனம் நிலையற்றுத் தவித்தது. ஹென்ரி சுசேனை மணக்கக் கூடாது. அவர் வேறு யாரையுமே மணக்கக்கூடாது. எனக்கு உரிய வயது வந்தவுடன் என்னைத்தான் மணந்து கொள்ள வேண்டும். ஹென்ரியைத் தவிர வேறெவரையும் என்னல் காதலிக்க முடியாது—என்று என் உள்ளுணர்வு கூறியது.

''உனது மண நாளுக்குப் பத்து நாட்களுக்கு முன்பு ஒரு நாள் மாலை—நீ அவருடன் நிலவொளியில் காற்று வாங்கச் சென்ருய். நமது வீட்டிற்கு அண்மையில் உள்ள 'பைன்' மரத்தடியில் — அவர் உனக்கொரு முத்தமளித்தார் — ஆம்; அவர் உன்னை முத்தமிட்டார்—நீண்ட நேரம் நீ அவரைப் பிடித்திருந்தாய். உனக்கு அந்த நிகழ்ச்சி நன்கு நினைவிருக்கும். ஏனெனில் அதுவே உனக்கு முதல் முறையாகவும் இருக்கலாம். நீங்கள் இருவரும் வீட்டிற்குத் திரும்பிய பொழுது உன் முகம் மிகவும் வெளுத்திருந்தது.

''நானும் அந்த நிகழ்ச்சியைப் பார்த்தேன். அவர் உனக்கு முத்தமிட்டதையும் நீ அவரைத் தழுவியிருந்ததையும் நான் பார்த்தேன். நீங்கள் இருவரும் நின்ற 'பைன்' மரத்தடிக் கருகில் ஒரு செடி மறைவில் நான் நின்று கொண்டிருந்தேன். என்னுள் கோபம் கொதித்தெழுந்தது. என்னல் இயன்ருல் உங்களிருவரையும் அந்த இடத்திலேயே கொன்றிருப்பேன்.

''அன்றிலிருந்து நான் ஹென்ரியை வெறுக்கத் தொடங்கினேன். பின்னர் நான் என்ன செய்தேன் என்பது உனக்குத்

தெரியாது. திருட்டுத்தனமாகத் தோட்டத்தில் நுழையும் நாய்களைக் கொல்வதற்கென நமது தோட்டக்காரன் கண்ணாடித் துண்டுகளைப் பொடியாக்கிக் கொண்டிருந்தான். பின்னர் கண்ணாடித் தூள்களை மாமிசத் துண்டின் நடுவில் வைத்து அவைகளுக்கு உணவாக அளித்தான்.

"இதைக் கண்ணுற்ற நான் உன்னைப் பழிவாங்கத் துடித்தேன். அக்கா என்ற பாசம் என்னுள் தோன்றவில்லை. என் காதலைப் பறித்த கள்ளி என்றே நான் எண்ணினேன். நான் அம்மாவிற்குத் தெரியாமல் ஒரு மருந்துச் சீசாவை எடுத்துக்கொண்டேன். பின்னர் ஒரு சுத்தியைக் கொண்டு நான் அந்தச் சீசாவை நன்றாகப் பொடியாக்கினேன். அந்தப் பொடி மினுமினுத்தது.

"மறுநாள் நீ ஹென்ரிக்கென 'கேக்கு'கள் தயார் செய்தாய். நான் அந்தக் 'கேக்கு'களை இரண்டாகப் பிளந்து கண்ணாடிப் பொடியைத் தூவினேன். ஹென்ரி மூன்று 'கேக்கு'களும் நான் ஒன்றும் தின்றோம். மிகுந்த ஆறு 'கேக்கு'களையும் நான் பக்கத்தில் உள்ள குளத்தில் வீசிவிட்டேன். அதில் வாழ்ந்த இரண்டு வாத்துகளும் இரண்டு நாள் கழித்து இறந்துவிட்டன. அவைகள் இயற்கையாகவே இறந்துவிட்டன என்று நீ நினைத்தாய்; இல்லையா? ஹென்ரியும் இறந்துவிட்டார். நான் மட்டும் இறக்கவில்லை. ஆனால் நான் என்றுமே உடல் நலிவுற்றிருந்தேன்.

"தவறு செய்யுமுன் திருந்துபவர்கள் சிலர். ஆனால் தவறு செய்தபின் திருந்துபவர்கள் பலர். நான் இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவள். நீ வாழ்க்கையை வெறுத்துவிட்டாய். உன் நிலை கண்டு என் மனம் வெதும்பியது. உன்னிடம் உண்மையைக் கூறிவிட வேண்டும் என்று மனச்சான்று உறுத்தியது. ஆனால் எவ்வாறு கூறுவது என்ற அச்சம் என்னைக் கவ்விக்கொண்டது. ஒவ்வொரு நாளும் காலையும் மாலையும் இது குறித்துச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். எனினும் இந்த நிமிடத்தை நான் எதிர் நோக்கிக் கொண்டுதானிருந்தேன். நான் இப்பொழுது எல்லாவற்றையும் கூறி முடித்து விட்டேன்.

"இரண்டாவது உலகம் என்று ஒன்றிருந்தால் நான் இறந்தவுடன் ஹென்ரியை அங்கு சந்திப்பேன். அவரை நான் எவ்வாறு பார்ப்பது?

இன்னுமா பசி?

"தோழர்களே, தாய்மார்களே!' என்று ஆரம்பித்த ஒரு வித்தைக்காரன், "நன்கு கவனித்துக்கொள்ளுங்கள்! நான் இப்போது ஒரு கணத்தில் கரி, கல், ஆணிகள் இவைகளைத் தின்று உங்களைத் திகைக்க வைக்கப் போகிறேன். மறுபடியும் இந்தப் பட்டாக் கத்தியையும் விழுங்குவேன். அதற்குப் பிறகு என் குல்லாயைத் தூக்கிக் கொண்டு உங்களைச் சுற்றிச் சுற்றி வருவேன்; இந்த ஏழைக்கு ஒரு கவளம் உணவுக்காக!" என்றான்.

அப்போது கூட்டத்திலிருந்து ஒரு குரல் திடீரென்று எழும்பியது, "என்ன; அதற்கு மேலுமா பசி?" என்று!

—'ஹோம்லேண்ட்'

புதுமை; புதுமை!

புத்துயிர்!

இறந்து விட்ட மனிதனுக்கு உயிர் கொடுக்க எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் கேலிக் குரியதாக ஒரு காலத்தில் கருதப்பட்டது. ஆனால், இப்போது ரஷ்யாவில் அதற்கான வாய்ப்புகள் கண்டு பிடிக்கப்பட்டு விட்டதாம்; சோதனைகளில் வெற்றியும் கிடைத்திருக்கிறதாம்.

சமீபத்தில் டாக்டர் கே. எஸ். கிருஷ்ண மதுரையில் செய்த ஒரு சொற்பொழிவில், இறந்து விட்ட மனிதனுக்கோ, அல்லது மிருகத்துக்கோ புத்துயிர் தர கையாளப்படும் முயற்சிகள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

சாதாரணமாக நாடித் துடிப்பும் மூச்சும் நின்று விட்டால், உயிர் போய் விட்டதாக நாம் கருதுகிறோம். ஆனால் இருதயம் நின்ற பிறகும் பதினைந்து நிமிடங்கள்வரை உடலில் கோடிக் கணக்கான உயிர் அணுக்கள் இறப்பதில்லை. அதற்குப் பின்னரே உண்மை இறப்பின் மாறுபாடுகள் ஏற்படுகின்றன.

இடையிலுள்ள இந்த முக்கியமான பதினைந்து நிமிட காலத்தில், இரத்தத்தை தேகத்தில் ஏற்றும் இயந்திர வசதிகளை உபயோகப்படுத்தி, மீண்டும் உயிர்ப்பிக்கிறார்களாம்!

நினைக்கவே பயங்கரமாயிருக்கிறது. எனினும் அவரை நான் பார்த்தேயாக வேண்டும். நான் உனது மன்னிப்பை வேண்டுகிறேன். நீ என்னை மன்னிக்கத் தான் வேண்டும். உன்னுடைய மன்னிப்பைப் பெறுமல் நான் அவரைச் சந்திக்க முடியாது. பாதிரியாரே! என்னை மன்னிக்கும்படி அக்காவிடம் கூறுங்கள். அவள் என்னை மன்னிக்கும் வரை நான் இறக்கமாட்டேன்!''

*

சுசேன் தனது முகத்தைக் கைகளில் புதைத்து அழுது கொண்டிருந்தாள்.

செதுக்கி வைத்த சிற்பம் போன்றிருந்தது அவளுடைய நிலை. ஹென்ரி அவளுடைய மனத் திரையில் தோன்றினன். ஹென்ரி உயிருடன் இருந்தால் அவர்கள் இருவரும் எவ்வளவு இன்பமான வாழ்க்கையைச் சுவைத்திருப்பார்கள். அவன் அளித்த ஒரு முத்தம்—ஆம்; அதுவேதான் அவளுக்கு முதல் முத்தமாகவும் இறுதி முத்தமாகவும் மாறிவிட்டது. அவளுடைய வாழ்க்கையில் அவள் இதுவரை வேறெருவரிடமிருந்தும் முத்தம் பெறவில்லை.

பாதிரி திடீரென்று நாற்காலியிலிருந்து எழுந்தார். ''சுசேன்! உனது தங்கை இறந்து கொண்டிருக்கிருள்!''

சுசேனும் நாற்காலியிலிருந்து எழுந்தாள். அவளது கன்னத்தில் கண்ணீர்க்கறை படிந்திருந்தது. மார்கரெட்டைத் தன் இரு கைகளாலும் தழுவிக் கொண்டு சுசேன் நடுக்கத்துடன் ஒரு முத்தமளித்தாள்.

''மார்கரெட்! நான் உன்னை மன்னித்து விட்டேன்! ஆம்; நான் உன்னை மன்னித்து விட்டேன்!'' என்று கூறினள். ஃ

முத்துக் குளித்தல்

★



★

அறிவியல் :

நாஞ்சில்
செ. அன்பெழில்

பழஞ் சரிதம் :

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்பது பழந் தமிழ் மூதுரை. அலைகடல் கடந்து, அன்னிய நாடு சென்று, வாணிபம் செய்து பொருளீட்டியதோடு மட்டும் நில்லாது, திரைகடல் மூழ்கியும் திரவியம் சேர்த்தனர் பண்டைத் தமிழர்கள். முத்துக்குளித்தலில் வேறு எந்த நாட்டையும்விட பெயரும் புகழும் பெற்று பெருமையோடு விளங்கியது தமிழ்நாடு. இக்கலை குறிப்பாக பாண்டிநாட்டில் போற்றப்பட்டு வளர்க்கப் பட்டது.

முத்துக் குளித்தல் குறிப்பிட்ட அரச பரம்பரைத் தொழிலாக இருந்ததோடு, ஆட்சியாளர்களின் நேரடிப் பார்வையின் கீழ் பரதர்களினாலும், பரவர்களினாலும் நடத்தப்பட்டு வந்தது; வருகிறது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து மீன் பிடிக்கும் தொழிலையே பரம்பரைத் தொழிலாகக் கொண்ட பலம் மிக்க மீனவர்கள் இத்தொழிலில் சிறந்து விளங்கினர். அக்காலத்தில் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளை, அரசினர், அத் தண்டனையின் ஒரு பகுதியாக இக்கடின வேலையில் ஈடுபடுத்தினர்.

பாண்டி நாட்டுக் காயல், கொற்கை ஆகிய துறைமுகப் பட்டினங்களை அடுத்தும், தாம்பிரபரணி கடலில் சங்கமமாகும் இடத்திலும் பெருமளவிற்கு முத்துக் குளித்தல் ஆதிகாலந்தொட்டே நடந்து வந்திருப்பதாகத் தெரிகிறது. இத்தொழிலில் சின்னஞ் சிறு வயதிலிருந்தே ஈடுபடுபவர்கள் பிற்காலத்தில் சிறந்து விளங்குகின்றார்கள். கடல் குளித்து முத்

தெடுக்கும் மீனவர்களை முற்கால அரசர்கள் பரிசளித்தும், பாராட்டுரை ல்கியும், சலுகைகள் தந்தும், சன்மானம் கொடுத்தும் பெருமைப் படுத்தினர். வெள்ளையர்களின் ஆதிக்கத்தில் இத்தொழில் வருவதற்கு முன்பு கூட பரதவர்களின் வாழ்வு சிறந்து விளங்கியது.

முகமதியர்கள் தமிழகத்தில் காலூன்றிய பிறகு மீனவர்கள் முத்தெடுக்கும் தொழிலில் பலத்த போட்டிகளை சந்தித்து, தாங்கள் இருந்தனுபவித்துவந்த இலாபம் தரும் இடங்களை இழக்க நேர்ந்தது. மூர் இனத்தவர்களும் முத்துக் குளிப்பில் நல்ல பயிற்சி பெற்று விளங்கிய காரணத்தால் மீனவர்களுக்கும், மூர் இனத்தவர்களுக்குமிடையே அடிக்கடி தகராறுகள் மூண்டு வளர்ந்தன. இப்படி வளர்ந்த சண்டைகள் முத்து வாணிபத்தைப் பெரிதும் பாதித்தன. அவ்வேளையில் கொச்சியில் வந்து குடியேறிய போர்த்துக்கீசியர்கள், இவர்களுக்கிடையே எழுந்த தகராறுகளை நல் வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு பரவர்களுக்குத்தக்க பாதுகாப்பளிக்கத் துவங்கினர். போர்த்துக்கீசியர்கள் விரித்த வலையில் வீழ்ந்த பரதவர்கள் கிறிஸ்துவ சமயத்தைத் தழுவினர். மூர் இனத்தவர்கள் தண்டனைக்குள்ளாகினர். வேத சமயத்தைத் தழுவிய பரதவர்களும், வந்து புகுந்த போர்த்துக்கீசியர்களுமாகச் சேர்ந்துகொண்டு மதுரை நாயக்கர்களையும், முத்துக் குளிக்கும் மூர்களையும் வம்புக் கிழுத்தனர். போர்த்துக்கீசியர் முத்துக் குளித்தல் மூலம் அதிக ஊதியம் பெற்று வந்தனர். எனினும் மூர்களும், நாயக்கர்களும் அடிக்கடி கொடுத்துவந்த தொல்லைகளாலும் தொந்தரவுகளாலும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அந்தத் தொல்லைகளை எதிர்த்து சமாளிக்க முடியாமற் போகவே முத்துக்குளித்தல் டச்சுக்காரர்களின் கைக்குப் போனது. கி. பி. 1524-லிருந்து கி. பி. 1658 வரை முத்துக் குளித்தலை போர்த்துக்கீசியர் ஏகபோக உரிமையாக அனுபவித்து வந்தனர்.

கி. பி. 1658—லிருந்து 1796 வரை டச்சுக்காரர்கள் முத்துக் குளிக்கும் உரிமையைப் பெற்றிருந்தனர். வழக்கப்படி நாட்டின் ஆட்சியாளர்களுக்கு டச்சுக்காரர்கள் கட்ட வேண்டிய கப்பத் தொகையைத் தவறாது செலுத்திவந்தனர். டச்சுக்காரர்களின் கையில் இத்தொழில் இருக்கும்போதே கொள்ளையடிப்போரும் தொழிலில் பொறாமை கொண்டவர்களும் ஒருவர்க்கொருவர் பொருது நீரினுள் மூழ்கி இறந்தனர். இச்சண்டைகளிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள சிலர் சூலாயுதம், வேல் போன்ற ஆயுதங்களையும் தாங்கிக்கொண்டு கடற்குளித்தனர் என்று வரலாறு கூறுகிறது. இதுபோன்ற தொல்லைகளால் தொழில் வலிமையற்றதாகவே நடந்து கொண்டிருந்தது. பத்தொன்பதாம் நூற்றூண்டின் முற்பகுதியில் ஆங்கிலேயர்கள் இந்திய துணைக் கண்ட ஆட்சியாளராகவே முத்துக் குளிப்புத் தொழிலையும் கைப்பற்றினர்.

இவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் தூத்துக்குடியில் மிக விரிவான அளவில் முத்துக் குளித்தல் நடத்தப்பட்டது. அதன் மூலம் அரசாங்கத்திற்கு நல்ல வருவாயும் சேர்ந்தது. ஆட்சிப் பொறுப்பும் ஆங்கிலேயர்கள் கையில் இருந்தகாரணத்தினால் அரசனுக்குக் கப்பம் கட்டுவது குறித்தோ, பரவர்களுக்

குப் பாதுகாப்புத் தருவது குறித்தோ பிரச்சினையே எழவில்லை. மீனவர்களுக்கு இதுகாறும் தரப்பட்டு வந்த சலுகைகள் யாவும் நிறுத்தப்பட்டன. முத்துக் குளித்தலைக் கண்காணிப்பதற்கு ஒரு தனி அதிகாரியும் நியமிக்கப்பட்டார். இவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பதினுறு தடவைமட்டுமே கடற்குளித்தல் நடந்திருக்கிறது.

1947—ம் ஆண்டு முதல் ஆங்கிலேயர்களிடமிருந்து முத்துக் குளித்தல் வடநாட்டார் கைக்கு மாறியது. டில்லிப் பேரரசின் பொறுப்பில் நடந்து வரும் முத்துக் குளித்தல் இதுவரை ஏறத்தாழ நான்கு தடவை நடந்திருப்பதாகக் தெரிய வருகிறது. *1949*-ம் ஆண்டில் முத்துச் சிப்பிகள் பெருமளவுக்கு உற்பத்தியாகியிருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டு முத்துக் குளித்தலைத் தொடர்ந்து நடத்திவருகின்ருர்கள். *1956*-ல் ஏறத்தாழ *700*குளியர்கள் முத்துக் குளித்தனர். *1957*-ல் மொத்தம் *1000* குளியர்கள் பங்கேற்றனர்.

கி. பி. 1064 வரை பாண்டிய மன்னர்களின் கீழே இருந்து வந்த முத்துக் குளித்தல் அதன் பிறகு சோழ மன்னர்களின் மேற் பார்வையிலும் வந்தது. 1310–ம் ஆண்டில் முகமதியர்களாலும், பிறகு மதுரை நாயக்கர், மைசூர் நாட்டார் ஆகியோரா லும் கொற்கை, காயல்—ஆகிய இடங்களில் முத்துக் குளிக்கப்பட்டது. கி.பி. 1480–ல் வீசிய பெரும் புயல் இலங்கைக் கும் தமிழகத்துக்குமிடையே இருந்த போக்குவரத்தைத் துண்டித்தது. ராமேசுவரத்தை யும் இலங்கையையும் இணைத் துக்கொண்டிருந்த 'சேது' என்ற அணை கடலில் மூழ்கியது. கடல் நீரோட்டங்கள் திசை மாறிய காரணத்தினால் முத்துச் சிப்பிகள் வளரும் தலங்களும் இடம் மாறின. அதன் பின்ன ரும் வீசிய ஒரு கொடும் புயல் பாம்பன், இராமேசுவரம், மண் டபம் ஆகியவற்றை இணைத் துக் கொண்டிருந்த நாயக்க மன்னர் தளவாய்—இரா மப் பெயர் அணையையும் நீரினுள் அமிழ்த்தியது. இதனா லும் முத்துச் சிப்பியின் பெருக் கமும் வளர்ச்சியும் மிக பாதுக் கப்பட்டது. அதன் பிறகு பதி னாறும் நூற்றாண்டில்தான் மீண் டும் தூத்துக்குடியில் முத் துச் சிப்பி செழித்து வளர்ந்தது. இப்பொழுது டில்லியின் ஆதிக் கத்தில் இருந்து வரும் முத்துக் குளித்தல் தென்னகத்தின் கைக்கு மாறும்நாள் எந் நாளோ?

பண்டைய முறை:

இரண்டாயிரம் ஆண்டுகட்கு மேலாகப் பின்பற்றி வரும் இந்த முறை இப்பொழுதும் கையாளப்பட்டு வருகிறது. முத் துக் குளிப்பதற்கு முன்னரே எங்கெங்கு முத்துக் குளிப்ப தற்காக மூழ்க வேண்டுமோ அந்த இடங்களெல்லாம் தேர்ந் தெடுக்கப்பட்டுத் தெளிவாக குறிக்கப்படுகின்றன. அதன் பிறகு வேண்டிய ஆரம்ப வேலை களும் வரிசைப்படி செய்யப்படு கின்றன. முத்துக் குளிக்கப் படும் காலங்களில் கடற்கரை யும், பட்டினமும் முத்து வணி கர்களாலும், குளியர்களாலும், வேடிக்கை பார்ப்பவர்களாலும் நிறைந்து காணப்படுகின்றன. இத் தொழிலில் ஈடுபட்டவர்கள் தங்கள் உயிரைப் பணயம் வைக்கவும் தயாராக இருக்கின் றார்கள். நீண்ட நேரம் மூச்ச டக்கும் திறனும், நீரினுள் அமிழ்ந்திருந்து வேலை செய்யும் ஆற்றலும் அவர்களுக்கு வேண் டும். அலைகடலினுள்ளும் பல அபாயமான தாக்குதல்களை அவர்கள் எதிர்த்து சமாளிக்க வேண்டியிருக்கிறது. பற்றித் தின்னும் சுறா மீன்களும், திங்கி மைக்கும் திமிங்கிலங்களும், 'ஆக்டோபஸ்' என்னும் எட்டுக் கால் கடல் விலங்குகளும், கொடிய பல நச்சுப் பிராணிக ளும் முத்துக் குளிப்போரின் உயிருக்கும் உடலுக்கும் உலை வைப்பவையாகத் திகழ்கின் றன. அதுபோலவே மூச்சு முட்டியும், விபத்துக்களினாலும் மாள்வோர் பலர். இத்தனை பேராபத்துக்களையும் துச்சமாக மதித்துத்தான் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர்.

குளியர்கள் கரைக்கு எட்டு அல்லது பத்து மைல் தூரம் ஓடங்களிலும் படகுகளிலும் கூட்டம் கூட்டமாகச் செல்கின் றனர். ஒவ்வொரு படகிலும் மாலுமி நீங்கலாக ஏறத்தாழ இருபது பேர் இருப்பார்கள். இதில் பத்து பேர் முத்தெடுக்க நீரில் மூழுகும் குளியர்கள். மீதி பதின்மர் படகு ஓட்டுபவராக

வும், முழுகுவோரைக் குறித்த சமயத்தில் தூக்கி எடுப்பவராக வும் பணி புரிவர். ஐந்து பேர் நீரில் மூழ்கினால் ஐந்து குளியர்கள் படகில் இருப்பார்கள். இப்படியாக ஒரு பகுதியினர் மாற்றி ஒரு பகுதியினர் வேலை செய்வார்கள். மூழ்குவோர் கோவணம் கட்டிக்கொண்டும், உடம்பில் விளக்கெண்ணெய் பூசிக் கொண்டும் கடலினுள் இறங்குவர். நீரினுள் மிக வேகமாக மூழ்குவதற்கு உதவியாக ஏறத்தாழ நாற்பது இராத்தல் கனமுள்ள கற்களைப் பயன் படுத்துகின்றனர். இக்கற்கள் கயிறுகள் கட்டுவதற்கு துளையுள்ளதாகவும், அடி பரந்தும், நுனி குவிந்தும் இருக்கும் ஒவ்வொரு படகிலும் இதுபோன்ற கற்கள் ஐந்தாறு வைக்கப்பட்டிருக்கும். கடலில் மூழ்குவோர் பிறை நிலாபோல் செதுக்கப்பட்டுள்ள கனமான கற்களையும் பயன் படுத்துகின்றனர்.

குளியர்கள் கடலினுள் மூழ்கும்பொழுது வலது கால் விரல் இடுக்கால் கல்லில் கட்டப்பட்டிருக்கும் கயிற்றைப் பிடித்துக் கொண்டும், இடது கால் விரலால் தான் எடுக்கும் முத்துச் சிப்பிகளைப் போட்டு வைக்க வலைப் பை ஒன்றைப் பிடித்துக் கொண்டும் வேலையில் ஈடுபடுகின்றனர். கல்லோடு சேர்த்துக் கட்டாத ஒரு தனிக் கயிற்றையும், கல்லோடு இணைக்கப்பட்ட கயிற்றையும் தனது வலது கையால் பற்றிக்கொண்டும், காதினுள் மெழுகு திணித்துக் கொண்டும், இடது கைவிரல்களால் மூக்குத் துவாரங்களை இறுக அடைத்துக்கொண்டும் தண்ணீருக்குள் முழுகுவர். கடல் மட்டத்தின் கீழே ஏறத்தாழ நூறு அடி ஆழம்வரை குளியர்கள் போவதுண்டு. நீரினுள் தரையை எட்டியதும் காலில் விரலிடுக்கில் வைத்திருந்த வலையை எடுத்து கழுத்தில் கட்டிக்கொண்டு வேகமாகவும் திறமையாகவும் எவ்வளவு முத்துச் சிப்பிகள் அள்ளிச் சேர்க்க முடியுமோ அத்தனை சிப்பிகளையும் அள்ளி எடுத்து கழுத்தில் மாட்டியிருக்கும் பையினுள் போடுவர். ஒரு முறை மூழ்கும்போது நூற்றுக்குக் குறையாமல் முத்துச் சிப்பிகளை முத்துக் குளிப்போன் அள்ளி வருவான். முத்தெடுக்கும்போது நீரினுள் மூழ்கும் காலம் ஏறக்குறைய 120 வினாடிகளேயாகும். யாராலும் மூன்று அல்லது நான்கு நிமிடங்களுக்கு மேல் நீரினுள் அமிழ்ந்திருக்க முடியாது. முத்துச் சிப்பிகளை அள்ளிச் சேர்த்ததும் அல்லது மூச்சுத் திணறி திண்டாடும் சமயத்திலும் அவன் நீரினுள் இறங்கும்போது பயன்படுத்திய கல்லின்மேல் மீண்டும் ஏறி நின்றுகொள்ளாமல், கீழேதரையில் நின்று கொண்டே வலது கைக் கயிறுகளை மட்டும் அசைத்து இழுத்து ஆட்டி தன்னை மேலே தூக்குமாறு அறிவிப்பான். கயிறு ஆடுவதன் மூலம் இக்குறிப்பை உணர்ந்த படகோட்டிகள் படகில் அமைக்கப்பட்டிருக்கும் இராட்டினத்



தின் வழியாக கல்லில் கட்டப்படாமலிருக்கும் பிறிதொரு கயிற்றை இழுத்து நீரினுள் மூழ்கியிருப்போனை மேலே தூக்கிவிடுவர். மூழ்கியவன் படகில் வந்தேறியதும் அவனோடு இறக்கிய கல்லையும் இழுத்து மேலே தூக்குவர்.

நீரினுள் மூழ்கியிருப்போனும், அவனது கயிற்றைப் பிடித்துக் கொண்டு படகில் இருப்போனும் ஒருவர்க்கொருவர் நெருங்கிய உறவுமுறை உடையவராக இருப்பர். பெரும்பாலும் மாமனார், மருமகன், அத்தான்—மைத்துனன் என்ற முறையில் அவர்களது உறவு அமைந்திருக்கும். ஒருமுறை குளித்தவர் அன்றே பின்னும் ஆறு அல்லது ஏழு முறை மூழ்குவதுண்டு. இப்படிச் சேகரித்த சிப்பிகளைக் கரையில் கொணர்ந்து குவித்து, முத்திருக்கும் சிப்பிகளைப் பார்த்துப் பொறுக்கி, உடைத்து, முத்துகளைச் சேர்ப்பார்கள்.

இன்றைய நிலைமை:

இன்றும் தூத்துக்குடியில் முத்துக் குளித்தல் பழைய முறையிலே நடந்து வருகிறது. தற்பொழுது தூத்துக்குடியில் ஒரு முத்துப் பட்டினமே புதிதாகத் தோன்றியிருக்கிறது. உணவு விடுதிகள், உடல் நலக் காப்பு வசதிகள், மின்னாற்றல் வசதி, மருத்துவ— போலீசார் வசதி, அதிகாரிகள் குடியிருப்பு, முத்து அங்காடி, முத்துக் குளிக்கும் பணி மனை—எல்லாம் புதிதாகத் தோன்றியிருக்கின்றன. 1956-ம் ஆண்டில் தூத்துக்குடியில் முத்துக் குளித்த முறையை இத்தொழிலின் இன்றைய நிலையாகக் கூறலாம்.

வைகறை நேரம், அதிகாலை மூன்று மணிக்கு வேட்டு போடுவதன் மூலம் முத்துக் குளிப்பு அலவலுக வட்டாரத்திலும், நகர்ப் புறங்களிலும் வாழும் குளியர்களுக்கு கடலுக்குச் செல்லும் சமயம் வந்துவிட்டது என்பதை அறிவிக்கின்றனர். கடற்கரையோரத்தில் குளியர்களை எழுப்ப மணியொன்று முழக்கப்படுகிறது. பொழுது புலரும் நேரத்தில் பட்டினத்திலிருந்து படகு நிற்கும் முகாம் செல்ல போக்குவரத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. குளியர்கள் அறுபது அல்லது எழுபது வள்ளங்களின் மூலமும், இயந்திரப் படகின் துணையோடும் முத்துக் குளிக்கும் இடங்களைச் சென்று சேர்கின்றனர். அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் குளிக்கின்றனர்களா என்பதை 'கடல் சாரணன்' 'லெவரட்' ஆகிய சிறிய கப்பல்களும் படகுகளைத் தொடர்ந்து சென்று கண்காணித்து வருகின்றன. படகுகள் குளிக்க வேண்டிய குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைந்ததும் தனித்தனியாகப் பிரித்து விடப்பட்டு பரவலாக நிற்கும். வழக்கமாக காலை ஒன்பது மணிக்குமேல் பத்து மணிக்குள் முத்துக் குளித்தல் ஆரம்பமாகும். வள்ளங்களிலிருந்து கொம்பு ஊதுவதன் மூலம் குளியலைத் துவக்குமாறு உணர்த்தப்படுகிறது. நாவாயின் இரு புறங்களிலிருந்தும் கொம்பு ஒலி கேட்டதும் கடலினுள் மூழ்கி, முத்துச் சிப்பிகளைக் கூடையில் சேகரித்துக்கொண்டு கரையேறுகின்றனர். எடுத்து வந்த சிப்பிகளை எல்லாம் வள்ளத்தினுள் கொட்டிவிட்டு ஏறத்தாழ ஐந்து நிமிடங்கள் ஓய்வுகொண்ட பிறகு மீண்டும் நீரினுள் மூழ்குகின்றனர். இதுபோலவே அப்பகுதியில் ஏறக்குறைய நான்கு மணிநேரம் முத்துக்குளிக்கின்றனர்.

குளியல் முடிந்ததும் தொழிலை நிறுத்துமாறு அறிவிப்பு தரப் படுகிறது. உடனேயே ஓடங்கள் கப்பல்களைச் சென்றடைந்ததும் முத்துச் சிப்பிகள் அங்கு பங்கு போடப்படுகின்றன. அன்று அள்ளி எடுத்த முத்துச் சிப்பிகளில் மூன்றில் ஒரு பங்கு அந்தந்த முத்துக் குளிக்கும் தொழிலாளிக்கு மூடி முப் திரையிட்ட பைகளில் தரப் படுகிறது. முத்துகளையோ சிப்பிகளையோ குளியர்கள் எங்கேனும் பதுக்கி வைத்திருக்கிறார்களோ என்று பார்க்க குளியர்களும் ஓடங்களும் சோதனையிடப்பட்ட பின்தான் அவர்கள் கரைக்குச் செல்ல அனுமதிக்கப் படுகின்றனர். இதுதான் இரண்டு ஆண்டுகட்கு முன்பு தூத்துக்குடியில் கையாளப் பட்ட முறை. ஆனால் அண்மையில் மேனாட்டில் புதிய விஞ்ஞான முறைகள் இத்துறையில் புகுத்தப்பட்டுள்ளன.

விஞ்ஞான முறை :

முற்காலத்தில் சங்கு முத்து போன்ற கடல்படு செல்வங்களைக் கரைசேர்ப்பதற்காக மட்டுமே கடற் குளித்தல் நடந்து வந்தது. ஆனால் தற்பொழுது அமிழ்ந்துபோன கப்பல்களின் அங்கங்களைக் கரைசேர்க்கவும், அலைகடலினடியில் வாழும் மரம் செடி கொடி உயிரினங்களின் வாழ்க்கைக் கூறுகளை அறிந்து கொள்ளவும், கப்பல் போகும் பாதைகளிலே பெரிய பாறை போன்ற தடைகள் ஏதேனும் இருக்கின்றனவா என்று பார்க்கவும், இவைபோன்ற வேறுபல தேவைகளை ஒட்டியும் கடற் குளித்தல் நடந்து வருகின்றது. உடலில் உரமும் உள்ளத்தில் திடமும் உள்ளவர்கள் மட்டுமே இத்தொழிலில் ஈடுபடமுடியும். கடற் குளித்தல் என்பது சாவோடு சமருக்கு நிற்பது என்ற அளவுக்கு இத்தொழிலில் இடர்களும் அபாயங்களும் எத்தனையோ உண்டு. இந்த இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானத்தின் துணைகொண்டு இத்தொழிலின் கொடுமைகள் பல தவிர்க்கப்பட்டு கடற் குளித்தல் எளிதாக்கப்பட்டிருக்கிறது.

ஆழம் இல்லாத கடற் பகுதிகளில் மூழ்குவோர் அறிவியல் முறைப்படி தலையிலும் தோளிலும் உலோகக் கவசங்கள் போட்டு மூடிக் கொண்டும், நீர் உள்ளே நுழையாத அங்கிகளால் உடலைப் போர்த்திக் கொண்டும் கடலினுள் இறங்குகின்றனர். உலோகக் கவசங்களிடையே அழுத்தமான, நீர் புகாத துப்பட்டித் துணியை இருபுறமும் வைத்துத் தைக்கப்பட்ட இரப்பர் துணியாலான கைச் சட்டை, கால் சட்டை

ஞாபகம்!

ஞாபக மறதியுள்ள கலாசாலை ஆசிரியர் ஒருவர், வீட்டுக்கு ஏதோ எடுப்பதற்கு வந்தார். தம் கட்டிலுக்கு அடியில் ஏதோ சப்தம் கேட்கவே, "கட்டிலுக்கு அடியில் யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டார்.

கட்டிலுக்கு அடியில் ஒளிந்து கொண்டிருந்த திருடன், "யாருமே இல்லையே!" என்று பதில் அளித்தான்.

"என்ன ஆச்சரியமாக இருக்கிறதே! கட்டிலுக்கடியில் சப்தம் கேட்டாற்போல் தோன்றிற்று! யாரும் இல்லையே என்று பதில் வருகிறதே!" என்று ஆசிரியர் தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.

களை அணிந்து கொண்டு தொழிலில் ஈடுபடுகின்றனர். கால்களில் கட்டித் தோலினாலான கனத்த பூட்சுகளணிந்திருப்பர். இந்த பூட்சுகளின் அடிப் புறத்தில் ஏறத்தாழ இருபது ராத்தல் எடையுள்ள மரக் கட்டைகள் சேர்ந்து இணைக்கப்பட்டிருக்கும். நீரினுள் மூழ்கும்போது இந்த கனத்த பூட்சுகள் அவனுக்கு நிமிர்ந்து நிற்கத் துணை புரியும். இதுபோலவே ஏறக்குறைய நாற்பது இராத்தல் எடையுள்ள இரண்டு ஈயக் குண்டுகளை மார்பிலும் முதுகிலும் வைத்துக் கட்டி இருப்பார்கள். சில வேளைகளில் ஈயக்கச்சு ('பெல்ட்') அணிந்து கொள்வதும் உண்டு. நீரில் ஆட்டம் கொடுக்காமல் தன் நிலையை சரிப்படுத்திக் கொள்ள இவை பயன்படுகின்றன.

முத்துக்குளிப்பவனின் உடையில் மிக முக்கியமான அங்கம் தலைக் கவசமே யாகும். செம்பினாலான இக் கவசத்தில் நல்ல கெட்டியான கண்ணாடியாலான பலகணி ஒன்றும் உண்டு. இந்தக் கண்ணாடி உடையாதபடி இரும்புக் கம்பிகளால் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. இச் செப்புக் கவசத்தில் காற்றை உள்ளே செலுத்தவும், வெளியே விடவும் வசதியாக குழாய்கள் இரண்டு இணைக்கப்பட்டிருக்கின்றன. கடலுக்கடியில் பொருட்களை அள்ளவும், கருவிகளைப் பிடித்து எடுக்கவும் ஏற்ற வகையில் கைப்பிடிப்புகள் அமைக்கப்பட்டுள்ள உலோகக் கவசங்கள் கைகளை மூடிக் கொண்டிருக்கும். மேல் விவரிக்கப்பட்ட ஆடைகளை அணிந்து கொண்டு நீரினுள் இறங்கினால் மேனியின்மேல் ஒரு துளி நீர் கூடப் படாது.

நீரினுள் நிற்கும் குளியனுக்கு மூச்சுவிடுவதற்குத் தேவையான காற்று இருமுறைகளால்செலுத்தப்படுகிறது. மூச்சுஉயிர்ப்பதற்குத் தேவையான 'தீயகவாயு' வைத் (Oxygen) தயாரிப்பதற்கு வேண்டிய இராசயனப்பொருட்களடங்கிய பெட்டி ஒன்றை அவன் முதுகில் கட்டி விடுவது ஒரு முறை. மற்றொரு முறை படகிலிருந்து 'பம்ப்' செய்து இரப்பர் குழாய் மூலம் காற்றை அனுப்புவது. முதல் முறையில் அவன் வெளியிடும் 'கரியிரு தீயதை' (Carbon Dioxide) போன்ற வாயுக்களை பெட்டியினுள்ளிருக்கும் இரசாயனப்பொருட்கள் கிரகித்துக்கொண்டு அவற்றிலிருந்து நல்ல தீயகத்தை தயாரித்து அவன் நுகருவதற்குத்தருகிறது. இம்முறையில் அவன் நுகர்ந்து வெளியிட்ட காற்றே மீண்டும் மீண்டும் அவனுக்குப் போதுமானதாக வந்து கொண்டிருக்கும்.

இந்த இரப்பர் ஆடைகளை அணிந்தவர்கள் கடலினடியில் குறிப்பிட்ட அளவுவரைதான் கீழே செல்ல முடியும். ஏறத்தாழ நானூறு அடி ஆழத்தின் கீழே இறங்கி வேலை செய்ய வேண்டுமானால் உடல் முழுவதும் எஃகினாலான கவசத்தால் போர்த்தப்பட்டிருக்கும். தலையைப் போர்த்தியிருக்கும் கவசத்தில் குளியனுக்குத் தேவையான வேறு பல வசதிகளும் பொருட்களும் வைக்கப்பட்டிருக்கும். போதுமான தீயகத்தை உள்ளே வரவழைக்கவும், தேவையில்லையெனில் தடுத்து நிறுத்தவும் ஏற்ற வகையில் வழி அடைப்பான் ஒன்றும் உண்டு. உள்ளே இருக்கும் காற்றின் அளவையும் அதன் அழுத்தும் ஆற்றலையும் காட்டும் கருவி ஒன்று அதோடு இணைக்கப் பட்டிருக்கும். கடலினடியிலிருந்து மேலே செய்தி

யனுப்புவதற்கு ஒரு ஒலிபெருக்கியும், மேலே இருந்து வரும் செய்தியை அறிந்து கொள்ள காதுகளில் இரு குழாய்களும் இந்தக் கவசத்தில் பொருத்தப்பட்டிருக்கின்றன. கைகளில் ஒளி பொருந்திய மின்விளக்கும், நீருக்குள்ளிருக்கும் பொருட்களை நிழற் படம் பிடிப்பதற்கேற்ற வகையில் படம்பிடிக்கும் பெட்டி ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கும். கைமின்விளக்குக்குப் பதில் சில வேளைகளில் படகிலிருந்து தனி விளக்குகள் தொங்க விடப்பட்டிருக்கும். குளியனைச் சுற்றி பொருத்தப்பட்டிருக்கும் எஃகுச் சுவரைப் போல கொஞ்சம் இடைவெளி விட்டு இன்னொரு எஃகுச் சுவர் சுற்றிலும் இருக்கும். இவ்விரு சுவர்களுக்கிடையேயுள்ள இடைவெளியில் வேண்டியபோது தண்ணீரை நிரப்பி பளுவை மிகைப்படுத்திக் கொள்ளவும், வேண்டாதபோது உயிர்ப்புக்குத் தேவையான தீயகத்தைச் செலுத்தி அதன் மூலம் தண்ணீரை வெளியேற்றி பளுவைக் குறைத்துக் கொள்ளவும் வசதிகளுண்டு.

அறிவியல் வளர்ச்சியின் துணைகொண்டு கடற் குளித்தலை மேலும் எளிதாக்க விஞ்ஞான வித்தகர்கள் பெரிதும் முயன்று வருகின்றனர். அவர்களுடைய முயற்சிகளெல்லாம் வெற்றிபெற்றால் முத்துக்குளித்தில் மூலம் தென்னகத்தின் முப்புறமும் சூழ்ந்திருக்கும் 1600 மைல் நீளமுள்ள கடற்கரையை அடுத்து கிடைக்கும் கடற்படு பொருட்களையெல்லாம் கரை சேர்க்க வாய்ப்புண்டு. அதன் மூலம் பொருளாதாரத் துறையிலும், நாகரீக முறையிலும் தென்னகம் முன்னேற வழியுண்டு. அந்நாள் எந்நாளோ?

●●●

விளம்பரத்தின் விளைவு!

ஒரு பெரிய மனிதர் வீட்டு நாய் காணாமல் போய் விட்டது. உடனே அவர் பக்கத்தில் இருந்த ஒரு பத்திரிகை ஆபீசுக்குச் சென்றார். நாயின் அடையாளங்களைத் தெரிவித்து அதைத் தேடிக் கண்டு பிடிப்பவர்க்கு ரூ. 50 இனம் கொடுப்பதாக விளம்பரம் போடச் சொல்லி விட்டு வீட்டுக்குத் திரும்பினார்.

சற்று நேரத்திற்குப் பிறகு ரூ. 50 போதாது என்று அவருக்குப் பட்டது. அதை ரூ. 100 ஆக்க வேண்டுமென்று நினைத்தார். இதைத் தெரிவிப்பதற்காக மீண்டும் பத்திரிகை ஆபீசுக்குச் சென்றார்.

ஆனால் ஆபீசில் சற்று முன்னால் சந்தித்த ஆசிரியர், உதவி ஆசிரியர், மானேஜர், காஷியர் முதலியவர்கள் யாரையும் காணவில்லை. ஒரே ஒரு சின்னப் பையன் மாத்திரம் இருந்தான். "எங்கே எல்லோரும்?" என்று கேட்டார் பெரிய மனிதர்.

"எல்லோரும் உங்கள் நாயைத் தேடுவதற்காகப் போயிருக்கின்றார்கள்!" என்று பதில் அளித்தான் பையன். அவர் அப்படியே ஆச்சரியத்தில் ஆழ்ந்து விட்டார்.

வெண்முகில் தவழ்ந்து விளையாடிய நீல விசும்பில் கரு முகில்கள் வந்து குவிந்தன. அவைகளின் கருத்த மேனியைக் காண்பதற்கு மாலைக் கதிரவனுக்கு மனம் இல்லை. ஒருவேளை அந்தக் கருப்பு வர்ணம் தன் ஒளி மிக்க உடம்பைக் கறைபடுத்தி விடுமோ என்ற அச்சமாக இருக்கலாம்.

மணிப் பொறியில் ஐந்து அடிப்பதற்கு இன்னும் பத்து நிமிடங்கள் இருந்தன. பள்ளிக் கூடம் சென்ற தன் குழந்தை—ரஞ்சிதத்தின் வருகைக்காக வெளித் திண்ணைக்கு வந்து நின்று, வழிமேல் விழிகளை மேயவிட்டான் நிலாவண்ணன். வண்ணாத்திப் பூச்சிகள் அங்குமிங்கும் பறப்பதைப்போல பன்னிற உடைகளுடன், பளிங்கு மனம் படைத்த சிறுவர்களும் சிறுமியர்களும் புத்தகம் பலகையோடு தாவிக் குதித்துக் கொண்டு, சிரித்துப் பேசிக் கொண்டு வரலாயினர். "இதோ சில வினாடிகளில் என் செல்வ மகள் ரஞ்சிதம் வந்து விடுவாள். 'அப்பா!' என்று இசைத்த வண்ணம் பறந்து வந்து என் கழுத்தைக் கட்டிக் கொள்வாள். கோணல் உருவங்களில் தான் எழுதிய 'அ' 'ஆ' எழுத்தோவியங்களைக் காட்டுவாள். நான் அவளைப் பாராட்டி அவளுடைய பிஞ்சுக் கன்னங்களிலும் அரும்பு உதடுகளிலும் 'இச்' என்ற ஒலியை உண்டாக்குவேன். 'மக்கள் மெய் தீண்டல் உடற் கின்பம்' அல்லவா?"—இவ்வாறு நிலாவண்ணன் நெஞ்சம் அழகுச் சித்திரம் தீட்டியது. அப்போது வானம் மழை பொழியத் தொடங்கியது. ரஞ்சிதத்தைத் தெருவில் காணோம். நிலாவண்ணன் நெஞ்சம் பரபரத்தது; துடிதுடித்தது; ரஞ்சிதம் இந்த மழையில் நனைந்து வந்தால் அவள் உடம்பு என்ன ஆவது?

நொடிப் போதில் குடையை எடுத்து விரித்துக் கொண்டு அந்தப் பெருமழையில் பள்ளிக் கூடம் நோக்கி அவன் விரைந்து சென்றான். வளர்த்த மனம் 'சோ' வென்று கொட்டுகின்ற மழையையும் வீசி அடிக்கின்ற வாடைக் காற்றையும் பொருட்படுத்தவில்லை.

வெளிப்புற வாசலை அவன் அணுகினான். அங்கு காவல் வேலை புரியும் முத்து ஓடி வந்து "வணக்கம் ஐயா!" என்றான்.

நிலாவண்ணனைப் பார்த்து.

"ரஞ்சிதம் எங்கே முத்து? பள்ளிக்கூடம் விட்டதும் அவள் வெளியே போய் விட்டாளா?

"கவலை வேண்டாம். மழை வரவே குமுதம் அம்மா நம் ரஞ்சிதத்தைக் கூட்டிக் கொண்டு சென்றார்கள்!"

'குமுதம்' என்ற பெயரைக் கேட்டவுடன் நிலாவண்ணன் நெஞ்சம் ஒரு முறை குலுங்கியது. ஆனால் அதை அவன் வெளிக்குக் காட்டிக் கொள்ள வில்லை. ஒரு வேளை தான் நினைத்த குமுதமாக அவள் இல்லாதிருந்தால்?... மீண்டும் அவன் முத்துவைப் பார்த்துக் கேட்டான்:

"அந்தக் குமுதம் அம்மா யார்?"

"நம் ரஞ்சிதத்துக்கு ஆசிரியை! அவர்கள் போன வாரம் தான் இங்கே வந்தார்கள்!"

"குமுதம் வீடு எங்கே என்று தெரியுமா உனக்கு?"

"அதோ தெரிகிறதே விளக்குத் தூண்; அதற்குப் பக்கத்திலுள்ளதுதான் அந்த அம்மா வீடு. வாடகைக்குக் குடி இருக்கிறார்கள். ரஞ்சிதத்தைக் கட்டாயம் அங்கே நீங்கள் பார்க்கலாம்."

நிலாவண்ணன் ஓட்டமும் நடையுமாக முத்து அறிவித்த அந்த வீட்டிற்குச் சென்றான். மழை அப்போதும் ஓயவில்லை. விரித்த குடையை மடக்காமல் வாசற்படிமீது நின்றவாறு "ரஞ்சிதம்!" என்றான். மழை இரைச்சலும் தெருவில் இருபுறமும் ஓடிய தண்ணீர் இரைச்சலும் அவன் குரலை அமுக்கின.

இப்போது அவனால் வெளிப்புறத்திலேயே நின்றுகொண்டிருக்க முடியவில்லை. படிகளை ஒவ்வொன்றாக மிதிக்கும்போது அவனது அறிவு மனம், 'நமக்குத் தெரிந்தவர் வீடாயினும் சரி; அல்லது அறிமுகம் இல்லாதவர் வீடாயினும் சரி; முன்னறிவிப்பு இன்றி நுழைவது நாகரிகம் அன்று; நல்ல பண்பாடும் அன்று' என்று நீதி பேசியது. ஆனால் வளர்த்த மனமோ, 'உன் நீதிமொழி இப்போது தேவை இல்லை' என்று அடித்துப் பேசியது.

முன் பக்கம் வலப்புறமுள்ள அறையை அவன் அணுகினான். மகளைக் காண வேண்டும் என்ற ஆர்வத்தால், விரித்திருந்த குடையைக்கூட மடக்காமல் அவன் உள்ளே வந்துவிட்டான். அதைக் கண்டதும் அவனுக்கே

★ எழுதியவர் : 'தண்மதி' ★

தன்னையறியாது சிரிப்பு வந்தது.

ரஞ்சிதத்தின் மழலை மொழிகள் இப்போது அவன் செவிகளில் சிதைவின்றி விழுந்தன. அந்த அறையின் உட்புறம் நோக்கி அவன் விழிகள் பாய்ந்தன. மின்சார விளக்கு அறையை ஒளிரச் செய்தது. மேசைமேல் ரஞ்சிதம் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு எதிர்த்தாற்போல் அவளது ஆசிரியை நாற்காலிமீது அமர்ந்து அவளோடு என்ன என்னவோ பேசிக்கொண்டிருந்தாள். 'பிஸ்கட்', பால், பழங்கள் முதலியன ஒரு பக்கத்தில் இருந்தன. சாப்பிட்டதற்கு அடையாளமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக 'பிஸ்கட்' துணுக்குகளும் பழத் தோல்களும் கிடந்தன.

பலகணியைக் கடந்து அறை

யின் நுழைவாயிலுக்கு நேரே வந்தான். ரஞ்சிதத்தின் முகத்தோற்றமும் ஆசிரியையின் முதுகுப் புறமும் நிலாவண்ணன் பார்வையில் பட்டன. ஆசைப் பெருக்குடன் தன் குழந்தையை அழைத்தான்.

"ரஞ்சிதம்! கண்ணே ரஞ்சிதம்!!"

"இதோ வந்து விட்டேனப்பா!" —மேசை மீதிருந்து குதித்த ரஞ்சிதம் அப்படியே தாவி வந்து நிலாவண்ணன் கால்களைக் கட்டிக் கொண்டாள்.

நொடிப் போதில் அவளது ஆசிரியை குமுதம் திரும்பிப் பார்த்தாள். அவள் கண்களை அவளால் நம்ப முடியவில்லை.

இரு கைகளாலும் கண்களைத் துடைத்துக்கொண்டு அகல விரித்து நோக்கினள். ஆமாம்; நிலாவண்ணனேதான்! அவள் உள்ளத்தில் இசை வெள்ளம் பெருக்கெடுத்தது. அவள் உதடுகள் அசைந்தன.

"நீங்களா!"

உலகத்திலுள்ள வியப்பு முழுவதும் அந்த ஒரு சொல்லில் எதிரொலித்தது.

குமுதத்தை அவன் பார்த்ததும் இமைப்போதுகூட அங்கே நிற்கவில்லை. ரஞ்சிதத்தை அப்படியே இரு கைகளாலும் தூக்கித் தன் தோள்மீது சாத்திக் கொண்டான். மடக்கிய குடையை வேகமாக விரித்தான்.

மடமடவென்று படிகளைக் கடந்து தெரு வழியே மழையை கிழித்துக் கொண்டு நடந்தான். கண்மூடிக் கண் திறப்பதற்குள்ளாகவே இவ்வளவும் நடந்து விட்டன.

அவனைப் பின் தொடர்ந்து வந்த குமுதம் வாசலுக்கு வந்தவுடன் "நிலா வண்ணன்!" என்று உரக்கக் கூப்பிட்டாள். அவள் உள்ளத்தில் தேக்கி வைத்திருந்த ஆவல் முழுவதும் அந்தக் குரலுடன் கலந்து வெளி வந்தது. ஆனால் நிலாவண்ணன் செவிகளில் அவளது அன்புக் குரல் விழுந்ததாகத் தெரியவில்லை. பள்ளம் நோக்கிப் பாய்ந்து செல்லும் பெரு வெள்ளம் போல அவன் சென்று கொண்டிருந்தான். திரும்பிக் கூட அவன் பார்க்கவில்லை. அவள் குரல் காற்றோடும் மழையோடும் கலந்து அழிந்தது. தன் பார்வையிலிருந்து அவன் மறைந்த பிறகு மீண்டும் உள்ளே வந்து நாற்காலியில் அமர்ந்தாள்.

ஒளி நிரம்பிய அந்த அறை இப்போது இருண்ட குகையாக அவளுக்குத் தோன்றியது. 'என்னைக் கண்டவுடன் எதுவுமே பேசவில்லை. ரஞ்சிதத்தைத் தூக்கிக்கொண்டு உடனேயே கிளம்பிவிட்டார். இருமுறை அவர் பெயரைச்சொல்லி அன்புடன் அழைத்தேன். அவரோ திரும்பிப் பாராமலே போய்விட்டார். காரணம் என்னவாக இருக்கமுடியும்?' —அவள் மனம் கேட்ட இந்தக் கேள்விக்கு அவளால் விடை கொடுக்க முடியவில்லை.

அன்று இரவு குமுதத்தின் கண் இமைகள் உறவுகொள்ள மறுத்துவிட்டன. அவள் உள்ளம் அலைபாயும் ஆழியாயிற்று.

நிலாவண்ணனும் அந்த இரவில் உறக்கம் இன்றிப் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தான். அவன் நெஞ்சத்திலே புயல் அடித்தது.

●

இரவு மடிந்தது. பொழுது விடிந்தது. புள்ளினங்கள் பாடின. சிரித்த பூக்களைக்கண்டு வண்டுகள் பறந்து பறந்து ஆடின. இளம் ஞாயிறு நீல விண்ணில் இருந்த வண்ணம் நிலப் பெண்ணைக் கண்கொட்டாமல் உற்று நோக்கினன்.

வழக்கமாகச் செல்லும் நேரத்துக்குச் சற்று முன்பாகவே குமுதம் பள்ளிக்கூடத்துக்குச் சென்றாள். அங்குள்ள பூந்தோட்டம் புது மனப் பெண் போல பொலிவுடன் காணப்பட்டது. நடந்தும் ஓடியும் ஆடியும் பாடியும் அசைந்தும் வந்த குழந்தைகளை கண்கள் நோக்கின. ஆனால் அவள் ஆர்வத்துடன் எதிர்பார்த்த ரஞ்சிதம் மட்டும் கண்களுக்குத் தட்டுப்படவில்லை.

முதல் மணி ஒலித்தது. 'இப்போது ரஞ்சிதம் வந்து விடுவாள்!'—அவள் மனம் ஆவல் ததும்ப உரைத்தது. ஆனால்...

பாடம் துவக்குவதற்கு இரண்டாம் தடவையாக மணி அடிக்கப்பட்டது. வாசல் பக்கம் குமுதம் பார்வை மீண்டும் ஓடியது. ஆனால் ரஞ்சிதம் தென்படவே இல்லை. வகுப்பில் அவள் நுழைந்தாள். பிஞ்சு உள்ளங்கள் "வணக்கம்" என்று முழங்கின. அது பறையோசைபோல அவளுக்குக் கேட்டது. பிள்ளைகளுக்கு அன்று பாடம் சொல்லிக் கொடுப்பதில் அவளுக்கு ஒரே சோர்வு; ஒரே அலுப்பு; ஒரே கசப்பு! உலகம் அறியாத அந்த வெள்ளை உள்ளங்களுக்கு அவள் நிலையும் நினைப்பும் எங்கே தெரியப்போகிறது? அன்றைய பொழுது இப்படிப் போயிற்று.

அடுத்த நாள் ரஞ்சிதம் எப்படியும் வகுப்புக்கு வந்து விடுவாள் என்ற நம்பிக்கையுடன் குமுதம் பள்ளிக்குச் சென்றாள். ஆனால் ரஞ்சிதம் வரவே இல்லை. அவள் மனம் துன்புற்றது. எதை எதையோ எண்ணிக் கலங்கியது. 'மழையினால் ரஞ்சிதத்துக்கு ஒருவேளை உடல் நலம் கெட்டிருக்கும்; அதனால் தான் அவள் வரவில்லை போலும்' இவ்வாறு நினைத்துச் சிறிது ஆறுதல் அடைந்தாள். அதுவும் சில மணித் துளிகள் தான். அப்புறம்?......வேட்கை மிகுந்திருக்கையில் ஒரு சொட்டுத் தண்ணீர் அதைத் தணித்து விடும் என்று எண்ணுவது அறியாமை அல்லவா?

அந்த வாரம் முழுவதும் வகுப்பில் குழந்தைகளுக்குப் பாடம் கற்பிப்பது அவளுக்குச் சிறைத் தண்டனை போலவே தென்பட்டது. 'ரஞ்சிதமும் அவன்

தந்தை நிலாவண்ணனும் ஏதோ ஒரு தெருவில் ஏதோ ஒரு வீட்டில் இருக்கிறார்கள். நான் எங்கோ ஒரு தெருவில் எங்கோ ஒரு வீட்டில் இருக்கிறேன். ஆனாலும் அவர்களை நினைத்து நினைத்து என் நெஞ்சம் ஏங்குவானேன்?'—தன்னைத்தானே இங்ஙனம் கேட்டுக் கொண்டாள்.

இரண்டாவது வாரம் இரண்டாம் நாளன்று குமுதம் முகவரிக்கு ஒரு மடல் வந்தது. உறை மீது அஞ்சல் தலைகள் கூடுதலாகவே ஒட்டப்பட்டிருந்தன. 'இவ்வளவு பெரிய மடல் எழுதக் கூடியவர்கள் எனக்கு யார் இருக்கிறார்கள்?' என்ற கேள்வியோடு உறையின் ஓரத்தைக் கிழித்தாள். உள்ளே இருந்த மடலை ஆவலோடு எடுத்தாள். பரபரப்போடு — நெஞ்சம் துடி துடிக்க அதனை விரித்தாள். முத்து முத்தான அழகிய தமிழ் எழுத்துக்கள்! மடலின் முடிவில் இருக்கும் கையெழுத்தைப் பார்த்தாள். அவள் உள்ளம் ததும்பியது. நிலாவண்ணன் அவளை நோக்கிப் பேசலானான்:

"அன்புள்ள குமுதம்!

உலகத்தில் எங்கோ ஓர் இடத்தில் நீ இருக்கிறாய்; நான் ஏதோ ஒரு மூலையில் இருக்கிறேன். வெளியே கன்னங் கரிய இருள் அடர்ந்து படர்ந்து கிடக்கிறது, நமது வாழ்வைப் போல. இந்த வேளையில் உனக்கு இம் மடலை வரைகிறேன். இனிமேல் நாம் எங்கும் எந்த வேளையிலும் சந்திக்கவே கூடாது என்ற எண்ணத்தோடு இதனை எழுதுகிறேன். இதுவே என் வாழ்வில் உனக்கு நான் பொறிக்கும் இறுதி மடல் என்பதையும் நினைவுபடுத்துகிறேன்.

குமுதம்! உன்னை நான் சந்திப்பேன் என்று கனவிலும் கருதியது கிடையாது. என் மகளைத் தேடி வந்தபோது எதிர்பாராமல் உன்னைக் கண்டேன். எதிர்பாராத வேளைகளில்தான் விந்தையான நிகழ்ச்சிகள் எல்லாம் மனிதனது வாழ்க்கையில் நடந்து விடுகின்றன. இல்லாவிட்டால்...

நீ தங்கியிருந்த வீட்டில் உன்னைப் பார்த்த மறு விநாடி ரஞ்சிதத்தைத் தூக்கிக் கொண்டு கொட்டுகின்ற மழையில் வெளியே வந்தேன்.

நீ என் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டாய். அந்தக் குரலில் உன் உள்ளத் துடிப்பையும் அன்பின் எழுச்சியையும் உணர்ந்தேன். ஆனால் திரும்பிப் பாராமலேயே சென்று விட்டேன். எனது செயல் உனக்கு விடுபடாத புதிராகத் தோன்றியிருக்கும். அதை விளக்கவே இந்த மடலைத் தீட்டுகிறேன்.

குமுதம்! ஆசிரியர் பயிற்சிக்காக வந்த நீயும் நானும் எங்கோ சந்தித்தோம்; எப்படியோ அறிமுகமானோம். அந்த முதல் அறிமுகம் தொடர்கதையாக்கப் பட்டது. ஈராண்டுகள் நாம் இருவரும் இதயம் கனிந்து பழகினோம். பாலோடு தேன் கலந்தாற்போல நம் நெஞ்சங்கள் ஒன்றின. ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொண்டோம். உனக்காக நானும், எனக்காக நீயும், உலகத்துக்காக நாம் இருவரும் வாழ்வது என்று உறுதி பூண்டோம். ஆனால்...

உலகம் ஒரு விந்தையான பல சரக்குக் கடை. எதை ஆவலுடன் நாம் அங்கு வாங்கப் போகிறோமோ அந்தப் பொருள் அப்போது அங்கு இருப்பதில்லை. ஒருவேளை அந்தப் பொருள்

அங்கு இருந்தாலும் அது கடைக்காரனுக்குத் தென்படாமல் ஒளிந்து கொள்ளும். அப்படித்தான் ஆயிற்று நமது நல் வாழ்வு!

நீயும் நானும் புதுமையான தவிப்பில் மூழ்கினோம். ஒருவரையொருவர் நிறைவாக்கிக் கொள்ள ஆர்வங்கொண்டோம். ஆனால் நம் இருவருடைய தாய் தந்தையரும் உறவினரும் சமூகத்தாரும் நாம் பேணிப் பாதுகாத்து வளர்த்த காதல் பூங்காவில் கட்டுப்பாடு என்னும் சமூதையையும், சாத்திரம் என்னும் எருமையையும், சம்பிரதாயம் என்னும் பன்றியையும் ஓட்டிவிட்டு அதைச் சீர்குலையச் செய்தனர்.

நீ யாருக்கோ மனைவியாக்கப் பட்டாய். அவனால் எங்கோ இழுத்துச் செல்லப்பட்டாய். அதன் பிறகும் உன்னை நினையாமல் இருக்க முடியவில்லை என்னால். ஒரேயடியாக உன்னை மறந்துவிடுவதற்கு நான் என்னவெல்லாமோ செய்து பார்த்தேன். ஆனால் அன்புள்ளம்— அதிலும் காதலில் திளைத்த உள்ளம் அவ்வளவு எளிதில் மறந்துவிடும் தன்மை படைத்தது அல்லவே! உன்னை நினைத்து— உன்னோடு பழகிய அந்த மகிழ்ச்சித் திருநாட்களை நினைத்து என் காலத்தைக் கடத்தி விட எண்ணிய நேரத்தில்தான் நாகவல்லியின் கையை என் கரத்துடன் கட்டினார்கள். பெண் என்பதால் அவள் மனம் நோகக் கூடாது எனக் கருதி அவளோடு அன்புடன் வாழ்க்கை வண்டியை ஓட்டினேன்.

ரஞ்சிதம் பிறந்தாள். ஓராண்டு நகர்ந்தது. என் இருப்பிடத்தை எப்படியோ அறிந்து கொண்ட நீ மடல் விடுத்தாய் எனக்கு. நல்ல செய்தியாக இருக்கலாம் என்று கருதி அதை ஆவலோடு விரித்துப் பார்த்தேன்:

"நிலாவண்ணன்! எனக்கு கணவராக இருந்தவர் காலமாகி விட்டார். இப்போது நான் வாழமுடியாதவள், சமுதாயம் வகுத்த சட்டப்படி. நீங்கள் மனம் வைத்தால் நம் இருவருடைய வாழ்வும் வளமை பெறும்; வனப்புடன் விளங்கும். தங்களுக்காக என் வாழ்நாள் முழுவதும் காத்திருப்பேன்—உங்கள் குமுதம்"

என்னைத் தழுவி ஒரு மென்கொடி படர்ந்து மலர்ந்திருக்கையில் அதை நான் எப்படி அறுத்தெறிய இயலும்? ஆகவே, "என்னை மறந்து விடு; மன்னித்துவிடு குமுதம்!" என்ற செஞ்சுதலை உனக்கு விடைமடலாக வழங்கினேன். ஆனால் நீயோ?...

ரஞ்சிதம் பிறந்த இரண்டாவது ஆண்டில் நாகவல்லியைக் காசநோய் கவ்வியது. அந்தத் தொல்லையோடு அவள் நான்கு ஆண்டுகள் என்னுடன் இருந்தாள். ரஞ்சிதத்துக்காகவும் எனக்காகவும் அவள் உயிர் வாழ்ந்தாள். அதன் பின்னர் ஒரு நாள் அவள் தன் கண்களை இறுக மூடிக் கொண்டாள். என்னிடத்தில் அவள் ரஞ்சிதத்தை ஒப்படைத்ததோடு நின்றிருந்தால் நான் எவ்வளவோ மகிழ்ந்திருப்பேன். ஆனால் காசநோயையும் அல்லவா என்னிடம் தந்துவிட்டுப் போய் விட்டாள்!

குமுதம்! அவள் இறந்த பின் பல நாட்கள்வரை நான் கண்ணீர் சிந்தினேன். அவள் பிரிவுக்காக அல்ல; ரஞ்சிதத்துக்காக. அம்மாவின் நினைவால் அவள்

பல நாட்கள் சரியாக உண்ண வில்லை; உடுத்தவில்லை; பேச வில்லை; சிரிக்கவில்லை. நள்ளிர வில் திடீரென்று அவள் எழுந்து உட்கார்ந்த வண்ணம், ''அம்மா எங்கே அப்பா?'' என்பாள். சுவ ரில் தொங்கும் படத்தை அவ ளுக்குக் காட்டுவேன். அன் னையை இழந்து ஏங்கும் அந்த அரும்பு உள்ளம் அதனுலா அமைதி அடையும்?

குமுதம்! அந்த வேளைகளில் எல்லாம் உன்னைக் குறித்து மிகத் தீவிரமாக எண்ணினேன். உன்னை ரஞ்சிதத்துக்கு அம்மா வாக்கிவிட எவ்வளவோ ஆசைப் பட்டேன்; துடிதுடித்தேன். ஆனால் என்னைப் பீடித்துள்ள காச நோயை எண்ணியதும் மிகவும் கவலைப்பட்டேன். ரஞ் சிதம் என்மகளாக இருந்தாலும் அவள் உன் வயிற்றில் பிறக்காத வள். அவளுக்கு நீ தாய் ஆகிவிடு வதால் உன் வாழ்வு மலர்ந்து விடுமா? உனக்கு மன நிறைவு ஏற்பட்டு விடுமா? நீ பெற விழைந்த வாழ்வின் மதுரத் தேன் உனக்குக் கிடைத்து விடுமா? இக் கேள்விகள் என் உள்ளத்தை மிகக் குடைந்தன. குழந்தையை வளர்ப்பதற்கோ அல்லது என் ஏக்கத்தைத் தீர்த் துக் கொள்வதற்கோ உன்னை இரையாக்க எனது மனம் இசையவில்லை; எனது அன்பு நெஞ்சம் ஒப்புதல் தரவில்லை. அதனால் உன் பார்வையில் படா மல் எங்காவது ஒரு மூலையில் இருந்த வண்ணம் குழந்தை ரஞ் சிதத்தை வளர்க்க வேண்டும்; அவளது வருங்கால வாழ்வுக்கு ஆவன செய்ய வேண்டும்; அதுவே இனி என் கடமை— என்று முடிவு செய்து இருந் தேன். ஆனால் மனிதன் விரும் புவதுபோல் அவனது வாழ்க் கையில் எல்லாம் நடந்துவிடுவ

பண்டிதரின் பார்வைக்கு...

சொல்லைப்பற்றி...

கத்தியைவிட கடுஞ் சொல் ஆழமாக வெட்டுகிறது.
—ஆர். பர்ட்டன்

''நெருப்பிடம் எச்சரிக்கை யாய் இரு'' என்பது நமக் குத் தெரிந்த நல்ல அறி வுரை; ''சொற்களிடம் எச்சரிக்கையாய் இரு'' என்ற அறிவுரை அதை விட இருபது மடங்கு நல்லதாகும்.
—வில் கார்லிட்டன்

சொற்களை விதைகளைப் போல் தூவ வேண்டும்; விதை எவ்வளவு சிறிதானு லும் பக்குவமான நிலத் தில் முளைவிட ஆரம்பித்து விடும்.
—செனிகா

உண்மையை தெள்ளத் தெளிய உணர்பவன் சொற்களைத் தேடி அலைய வேண்டியதில்லை; எந்த சொல்லும், உயர்ந்த சிந்த னையின் கைபட்ட மாத்தி ரத்தில் கவிதையாகிவிடும்.
—எமர்சன்

சிந்தனையின் அழகு, சொல் லில் மிளிர்கிறது.
—மில்டன்

மனித வர்க்கம் பயன்படுத் தும் சக்தி வாய்ந்த மருந்து சொற்கள். —ஆர். கிப்ளிங்

தில்லையே! காலமும் சூழ்நிலையும் உன் கண்களில் படும்படிச் செய்துவிட்டன.

குமுதம்! நெருப்பும் 'பெட்ரோ'லும் அருகருகே இருக்கக் கூடாது. அதனால்தான் உன்னைச் சந்தித்த மறுநாளே ஊரை விட்டு என் குழந்தையுடன் ஓடி வந்துவிட்டேன்.

என்னைத் தீண்டிய காசநோய் என்னோடேயே இருந்து தொலையட்டும். அது ஆலமரமாக விழுதுகள் விட்டுப் படரவேண்டாம். ஆமாம்; நான் உன்னை மட்டும் அல்ல; வேறு எந்தப் பெண்ணையுமே மணந்துகொள்ளக்கூடாது. அதுதான் எனது இறுதி முடிவு. ரஞ்சிதம்கூட இனிமேல் என்னோடு இருப்பது தீது. ஆகையால் அவளைச் சில நாட்களில் குழந்தைகள் விடுதியில் சேர்த்துவிடப்போகிறேன்.

குமுதம்! நீ பணியாற்றும் பள்ளியில் எத்தனையோ குழந்தைகள் படித்தும்கூட அவர்களைப் பாராமல் ரஞ்சிதத்தின் மீது நீ அளவற்ற அன்பு காட்டினாய். அவளை மழையில் நனைய விடாமல் உன் வீட்டிற்குத் தூக்கிச் சென்றாய். அவளுக்குப் பிடித்தமான உணவுப் பொருள்களைத் தந்து சாப்பிட வைத்தாய். அவள் மகிழ்ச்சிப் பெருக்கைக் கண்டு நீ உள்ளம் குளிர்ந்தாய். உன்னை அவ்வாறு செய்யத் தூண்டியதற்குக் காரணத்தை நான் சொல்லட்டுமா? ரஞ்சிதம் முகத்தில் என் சாயலை நீ கண்டுகொண்டாய். ஏனெனில், அவள் அம்மா நாகவல்லி அடிக்கடி என்னிடம் மொழிவாள், "ரஞ்சிதம் உங்கள் முகத்தைத் திருடிக்கொண்டு பிறந்துவிட்டாள்!" என்று.

குமுதம்! இந்த உலகத்தில் வாழ்வதற்காகவே மனிதன் பிறக்கிறான்; வீணே மனம் புழுங்கிச் சாவதற்கு அல்ல. வாழ்க்கையில் உன்னை அடைய எனக்குக் கொடுத்து வைக்கவில்லைதான். அதற்காக நாம் வருந்திப் பயன் என்ன? என் கையில் ஓர் உயிர் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதற்காகவாவது நான் வாழ்ந்தாக வேண்டும். ஆனால் நீயோ?...

குமுதம்! பல கலைகள் படித்தவள் நீ. இயற்கைக்கு மாறுபட்டு நீ வாழ்வது நல்லதல்ல; நீதியும் ஆகாது. வாழ்க்கைத் தோப்பில் நீ மாங்கனியை நாடி அதை எடுத்துச் சுவைக்க ஓடி வந்தாய். ஆனால் அதற்குள் அந்தப் பழத்தைப் புழுபூச்சிகள் கூடி அழுகச் செய்துவிட்டன. இன்னும் நீ அதே மாங்கனிக்காக ஏங்கி வாழ்நாளை வீணாக்குவது முறையன்று. தேன் சொரியும் பலாக்கனி — தித்திக்கும் கொய்யாக்கனி — தெவிட்டாத வாழைக்கனி முதலியவைகள் வாழ்க்கைத் தோப்பில் இல்லாமல் போய்விடவில்லை. அவைகளில் உனக்குப் பிடித்தமானதைப் பெற்று வாழ்வின் சுவையைத் துய்க்க வேண்டும். அதுவே என் கடைசி வேண்டுகோள்—விருப்பமும்கூட.

அன்புள்ள,

நிலாவண்ணன்"

இப்போது குமுதம் கண்களிலிருந்து நீர் பொங்கியது. அவள் இதழ்களிலிருந்து 'மாங்கனி, வாழ்க்கைத் தோப்பு' என்ற சொற்களே உதிர்ந்தன.

●●●

பெருங்கதை

பெரியம்மா

[‘பக்கத்துவீட்டுப் பிள்ளையைப் பாலூட்டி வளர்த்தால், தன் பிள்ளை தானே வளரும்’ என்பது தமிழகத்துப் பழமொழியாகும். குழந்தைப் பேறு இல்லாத பாபு ராம்ஜி தாஸ் தன் தம்பி குழந்தைகளைத் தன் குழந்தைகள்போல் கருதி அன்பு பாராட்டுகிறார்... ஆனால் அவருக்கு வந்து வாய்ந்த மனைவி ராமேஷ்வரியோ.........‘தான் ஒரு மலடி’ என்ற மன வருத்தத்தால், கணவனது தம்பியின்

தமிழில் “இன்பபுரியான்”

குழந்தைகளை வெறுக்க ஆரம்பிக்கிறாள்!...அப்பப்பா!... அந்த வெறுப்பு எங்ஙனம் வளர்கிறது!...எவ்வளவு கொடுமைகளைச் செய்யத் தூண்டுகிறது!......எத்தகைய இளகிய உள்ளமும் எப்படி வெறுப்பின் பிடியிலே இறுகிய பாறையாக மாறிவிடுகிறது!...வெறுப்பை வென்ற அன்பின் அற்புதக் கதைதான் இது ...]

"பெரியப்பா!...பெரியப்பா!...எனக்கு ஊவண்டி கொண்டு வர்ரியா?..." என்று கேட்டுக்கொண்டே ஐந்து வயதுடைய மனோகரன், பாபு ராம்ஜிதாசிடம் ஓடினான். யாழிசையையும் குழலிசையையும்விட இனிமையான சிறுவனின் மழலை மொழி கேட்டு பாபுவின் உள்ளம் பெரு மகிழ்ச்சியால் விம்மியது. சிறுவனை இரண்டு கைகளாலும் வாரி எடுத்து அணைத்து முத்தமிட்டார்.

பாபு: இரயில் வண்டியை என்னடா செய்வாய்?...

மனோகரன்: அதிலே ஏறிக்கொண்டு வெகுதூரம் செல்வேன்! நானும் செல்வேன்; தங்கச்சி சன்னியையும் அழைத்துச் செல்வேன்! ஆனால் அப்பாவை மட்டும் அழைத்துப் போக மாட்டேன்! அவர் ஊவண்டி வாங்கித் தருவதில்லை! பெரியப்பா!... நீங்கள் ஊவண்டி வாங்கித் தந்தால் உங்களையும் அழைத்துச் செல்வேன்!...

பாபு: மேலும் யாரையெல்லாம் அழைத்துச் செல்வாய்?...

சிறுவன்: அவ்வளவுதான்; வேறு யாரையும் அழைத்துச் செல்லமாட்டேன்!

பக்கத்திலேயே பாபு ராம்ஜிதாசினுடைய 'அன்பான' மனைவி அமர்ந்திருந்தாள். பாபு அவள் பக்கம் கையைக் காட்டி, "என்ன? உன் பெரியம்மாவை ஏற்றிச் செல்லமாட்டாயா?" என்று கேட்டார். சிறுவன் சிறிது நேரம் பெரியம்மாவையே பார்த்துக்கொண்டு இருந்தான். அவன் பெரியம்மா அப்பொழுது ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். சிறுவனுக்குப் பெரியம்மாவின் முகபாவனை பிடிக்கவில்லை. எனவே, "பெரியம்மாவை ஏற்றிச் செல்லமாட்டேன்!" என்று கூறினான்.

பாக்கை நறுக்கிக்கொண்டே பெரியம்மா கூறினாள்: "வாயை மூடிப் பேசாமல்கிட, சனியனே!... உன் பெரியப்பாவையே அழைத்துச் செல்!"

இதைப் பெரியம்மா கடுமையான குரலிலே கூறினாள் சிறுவன் பெரியம்மாவின் மனப்பான்மையை உடனே புரிந்து கொண்டான். பாபு மறுபடியும், "பெரியம்மாவை ஏன் ஏற்றிச் செல்லமாட்டாய்?" என்று கேட்டார்.

சிறுவன்: பெரியம்மா என்னை நேசிக்கவில்லை.

பாபு: நேசித்தால் அழைத்துச் செல்வாயா?

அதில் சிறுவனுக்கு சிறிது சந்தேகம் இருந்தது; பெரியம்மாவின் முகத்தைப் பார்த்த அவனுக்கு அதில் நம்பிக்கையில்லை. அதனால் அவன் மௌனமாக இருந்தான். பாபுவோ மறுபடியும், "என்னடா பேசமாட்டேங்கிறே? பெரியம்மா நேசித்தால் இரயில் வண்டியில் உட்கார வைத்து அழைத்துச்

செல்வாயா?'' என்று கேட்டார். சிறுவன் பெரியப்பாவை சமாதானப்படுத்துவதற்காகத் தலையை ஆட்டினான்.

பாபு எழுந்து மனோகரனின் அருகில் சென்றார். அவனைத் தன் மனைவியிடம் தூக்கிச் சென்று, ''இந்தா! இவனை எடுத்துக் கொள்! இவனை நேசி! இவன் உன்னையும் அழைத்துச் செல்வான்!'' என்று கூறினார். ஆனால் குழந்தையின் பெரியம்மா திருமதி ராமேஷ்வரிக்குத் தன் கணவனின் இந்தப் பரிகாசம் பிடிக்கவில்லை.

அவள் அதிகக் கோபமுற்று, ''நீங்களே இரயிலில் உட்கார்ந்து போங்க! எனக்கொன்றும் போகவேண்டியதில்லை!'' என்று கூறினாள். பாபு ராமேஷ்வரி கூறியதைக் கவனிக்கவில்லை. அவர் குழந்தையை அவள் மடியில் உட்கார வைத்துக்கொண்டே, ''இவனை நேசிக்காவிட்டால் உன்னை இரயிலில் உட்கார வைக்கமாட்டான். இல்லையா மனோகர்?'' என்று கூறினார்.

மனோகரன், பெரியப்பாவின் வார்த்தைகளுக்குப் பதில் கூறவில்லை. பெரியம்மாவும் மனோகரனைத் தன்னுடைய மடியிலிருந்து கீழே தள்ளிவிட்டாள். மனோகரன் கீழே விழுந்தான். அவன் உடலில் காயம் படாவிட்டாலும் உள்ளத்தில் காயம் பட்டது! குழந்தை அழ ஆரம்பித்தான். பாபுவோ குழந்தையை மடிமீது எடுத்து வைத்துக்கொண்டு கொஞ்சிக் குலாவி அவனைச் சமாதானப்படுத்தினார், மேலும் காசும் இரயில் வண்டியும் தருவதாக வாக்குக் கொடுத்து அவனைக் கீழே விட்டார். மனோகரன் பயந்த பார்வையுடன் பெரியம்மாவை பார்த்துக்கொண்டே அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டான்.

மனோகரன் சென்ற பிறகு ராம்ஜிதாஸ் ராமேஷ்வரியிடம், ''இது என்ன உன் செய்கை? குழந்தையைக் கீழே தள்ளிவிட்டாய்! குழந்தைக்குக் காயம் பட்டுவிட்டால்...?'' என்று கேட்டார்.

ராமேஷ்வரியோ ''காயம் பட்டுவிட்டால் நல்லதாப் போச்சு! ஏன் என் தலையில் கொண்டுவந்து சுமத்துகிறீர்கள்? நீங்களே என்மேல் கொண்டு வந்து போட்டீர்கள்! இப்பொழுது நீங்கள் இந்த மாதிரி பேசுகிறீர்கள்!'' என்று முகத்தைச் சுருக்கிக் கொண்டு கூறினாள்.

''இவனையா தலையில் சுமப்பதாகக் கூறுகிறாய்?'' என்று பாபு கோபமாகக் கேட்டார்.

ராமேஷ்வரி: இல்லை...பின்னே யாரைக் கூறுவதாம்! உங்களுக்கு யாருடைய கஷ்டமும் தெரிவதில்லை! யாருடைய உள்ளம் எப்பொழுது எப்படி இருக்குமோ யாருக்குத் தெரியும்? உங்களுக்கு இந்த விஷயங்களைப் பற்றி கவலையே இல்லை; உங்களுக்கு உங்கள் பரிகாச காரியமே பெரிது!

பாபு: குழந்தைகளின் மிகமிக அன்பான மழலை மொழிகளைக் கேட்டால் உள்ளம் எப்படி மகிழ்ச்சி அடைகிறது...ஆனால்... உன் உள்ளம் எந்த உலோகத்தால் செய்யப்பட்டது?...

ராமேஷ்வரி: இது என்ன உங்கள் குழந்தையா? பிறருடைய சொத்தினால் நம் வீடு நிரம்பிவிடுமா என்ன?

சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு பாபு மீண்டும் கூறினர்: "என்னுடைய சொந்த சகோதரன் மக்கள்கூட பிறருடைய சொத்தாகி விட்டால், பிறகு நம்முடையதென்று எந்த சொத்தைத்தான் கூறுவது? எனக்குத் தெரியவில்லை!"

இந்த வார்த்தைகள் ராமேஷ்வரியைத் தூண்டி விட்டன. அவள் கூறலானுள்: "இதற்கு பதில் சொல்லத்தானே வேண்டியிருக்கு! உங்கள் சொந்த சகோதரன் மகன் விஷயம் நீங்கள் விரும்பினுல் உங்களுக்குப் புரியும்; எனக்கு இந்த விஷயங்களெல்லாம் நல்லதாகப் படவில்லை. நமக்குப் 'பாக்கிய'மில்லை! அந்த நாளை என்றைக்குப் பார்க்கப் போகிறேமோ? உங்களுடைய போக்கே உலகத்திலேயே விசித்திரமாக உள்ளது! மனிதன் புத்திரப் பேறுக்காக என்னென்ன செய்கிருன்? பூஜா-பிரார்த்தனை செய்கிருன்; விரதம் இருக்கிருன்; ஆனுல் உங்களுக்கு இதனுல் என்ன இலாபம்? இரவு பகல் 'சகோதரன், சகோதரன் மகன்' என்று நினைத்துக்கொண்டே இருங்கள்!"

பாபுவின் முகத்திலே வெறுப்பின் அறிகுறி தோன்றியது.

"பூஜை, பிரார்த்தனை, விரதம் இவையெல்லாம் வீண்! எந்தப் பொருளுக்கு பாக்கியமில்லையோ, அந்தப் பொருள் பூஜை, பிரார்த்தனையினுல் கிடைத்து விடாது. எனக்கு இதில் அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு!" என்று கூறினுர்.

"இதே நம்பிக்கைதான் எல்லாவற்றையும் நாசமாக்கி வைத்திருக்கிறது! இப்படியே எல்லோரும் உட்கார்ந்துவிட்டால் வேலை எப்படி ஆகும்? எல்லோரும் நம்பிக்கையிலேயே மூழ்கி விட்டால், எந்தக் காரியத்தை மனிதன் முயற்சி செய்யப் போகிருன்?" என்ருள், ராமேஷ்வரி.

இந்த மாதிரி மூர்க்கப் பெண்களிடம் வாதாட பாபு விரும்பவில்லை; எனவே அவளுக்கு ஒன்றும் பதில் கூருமல் அந்த இடத்தைவிட்டு நகர்ந்தார்.

[2]

பாபு ராம்ஜிதாஸ் பணக்கார மனிதர். துணி தரகு வியாபாரம் செய்து வந்தார். கொடுக்கல் வாங்கல்கூட உண்டு. அவருக்கு ஒரு தம்பி இருக்கிருர். அவர் பெயர் கிருஷ்ணதாஸ். இருவர் குடும்பமும் ஒன்ருகவே இருந்தது. பாபு ராம்ஜிதாசுக்கு முப்பத்தைந்து வயது இருக்கும்பொழுது, அவர் தம்பி கிருஷ்ணதாசுக்கு இருபத்தோரு வயது இருக்கும். ராம்ஜிதாசுக்குக் குழந்தைகள் கிடையாது. கிருஷ்ணதாசுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றனர். மூத்த புதல்வன் மனேகரன் பள்ளிக்கூடம் செல்கிருன். இளைய பெண் குழந்தைக்கு இரண்டு வயதுதான் இருக்கும். அவள் பெயர் சன்னி.

ராம்ஜிதாஸ் தன் தம்பியின் குழந்தைகள்மீது மிகுந்த நட்பு பாராட்டினுர். அதனுல் 'தனக்குக் குழந்தை இல்லையே' என்ற வருத்தம் அவருக்குத் தோன்றவே இல்லை. தம்பியின் குழந்தைகளைத் தன் குழந்தைகளாகப் பாவித்து வந்தார். இரண்டு குழந்தைகளும் அவருடன் பாசத்துடன் கூடி இருந்தன. அவர்கள், தன் பெற்ருேரைவிடப் பெரியப்பாவைப் பற்றி அதிகம் அறிந்திருந்தார்கள்.

ஆனால் ராம்ஜிதாசின் மனைவிக்குக் குழந்தை இல்லையே என்ற ஒரே கவலை. அவள் இரவு பகல் அதையே நினைத்து வருந்தினாள். தன் கணவர், அவர் தம்பியின் குழந்தைகளிடம் பாசமாக இருப்பது அவள் கண்ணை உறுத்திற்று.

இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு, ராம்ஜிதாஸ் கட்டிலிலே படுத்துக்கொண்டே குளிர்ந்த காற்றின் ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார். அருகிலேயே இன்னொரு கட்டிலில் ராமேஷ்வரி உள்ளங்கையில் தலையை வைத்தவாறு ஏதோ சிந்தனையில் மூழ்கி இருந்தாள். இரண்டு குழந்தைகளும் பாபுவிடமிருந்து எழுந்து அப்பொழுதுதான் அவர்களது அம்மாவிடம் சென்றன. பாபு தன்னுடைய மனைவியின் பக்கம் புரண்டு படுத்துக்கொண்டே, "இன்று நீ மனோகரனை அப்படிக் கீழே தள்ளினாய்; எனக்கு இதுவரையில் அதே வருத்தமாக இருக்கிறது. சில சமயம் உன்னுடைய செய்கை மனிதத் தன்மையற்று விளங்குகிறது." என்று கூறினார்.

ராமேஷ்வரி: நீங்கள்தான் அப்படிச் செய்து விட்டீர்கள்! நம் ஜாதகத்திற்கு புத்திர பாக்கியம் உண்டென்று பண்டிதர் கூறினார். உபாயம் செய்தால் சந்தானமும் உண்டாகக் கூடும். அவர் அதற்கு வேண்டிய உபாயங்களும் கூறினார். ஆனால் நீங்கள் அதற்கு வேண்டிய ஒரு உபாயம்கூட செய்து பார்க்கவில்லை. நீங்கள்தான் இந்த விஷயங்களில் மந்தமாக இருக்கிறீர்களே! உங்களுடைய இந்த செயலால் இரவு பகல் என் வயிறு பற்றி எரிகிறது. காரியம் ஆகிறதோ இல்லையோ மனிதன் உபாயம் செய்துதான் பார்க்கிறான்.

பாபு: (சிரித்துக் கொண்டே) என்னவென்று சொல்வேன்! நீ இந்த ஜோதிஷர்கள் வார்த்தைகளை நம்பிக் கொண்டு இருக்கிறாயே! உலகம் முழுவதும் பொய்யும் புரட்டுமாக இருக்கிறது; இந்தப் பொய் புளுகுவதிலேயே வயிறு வளர்க்கிறார்கள்!

ராமேஷ்வரி: (கோபமாக) "உங்களுக்கு உலகமே பொய்யாகத்தான் காட்சியளிக்கும்! இந்தப் புத்தகம், புராணங்கள், சாத்திரங்கள் எல்லாமே பொய்! அப்படித்தானே? ஆங்கிலம் படித்து விட்டால் என்ன; தன் முன்னோர் யாரையும் மதிப்பதில்லை. எந்த விஷயங்கள் பாட்டனார், தாத்தா காலத்திலிருந்து வழக்கமாக இருக்கின்றனவோ அதைப் 'பொய்' என்று கூறுகிறார்கள்! எல்லோரும் பொய்யர்கள்தான்!...நீங்க ஒருவர்தான் உண்மையானவர்! நல்லது! நான் உங்களை ஒன்று கேட்கிறேன்; உங்களுக்குப் புத்திர பாக்கியத்தைப் பற்றிய விருப்பமாவது உண்டா இல்லையா?

அதைக் கேட்ட பாபு சிறிது நேரம் மௌனமாக இருந்தார். பிறகு ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே "அப்படி தன் மக்களின் முகத்தைப் பார்க்க விரும்பாத இதயம் படைத்த மனிதன்கூட உலகில் இருக்கிறானா என்ன? எப்பொழுது புத்திரபாக்கியம் இல்லையோ, அதற்காக வீண் சிந்தனை செய்து என்ன பயன்? அதற்குப் பதிலாக, எந்த செயல்கள் நம் மக்களால் உண்டாகுமோ, அந்த செயல்கள் நம் உடன் பிறந்தவர் மக்களாலும் உண்டாகக் கூடும். தன் மக்கள்மீது எவ்வளவு பாசம் உண்டாகிறதோ,

அதே பாசம் அவர்கள்மீதும் உண்டாகிறது. எந்த மகிழ்ச்சி தன் மக்களைப் பெறுவதில் உண்டாகிறதோ, அதே மகிழ்ச்சி அவர்களைப் பேணி வளர்ப்பதிலேயும் உண்டாகிறது. பிறகு ஏன் நாம் கவலைப்பட வேண்டும்?'' என்றார்.

ராமேஷ்வரி: (கோபமாக) உங்களுக்குக் கொஞ்சமாவது மூளை இருக்கிறதா?...ஐயோ! நமக்குப் பின்னால், நம்முடைய உடன் பிறந்தவர்கள் குழந்தைகள் நம்முடைய பெயரைச் சொல்லுவார்களா என்ன?

பாபூ: (சிரித்துக்கொண்டே) அட, நீ என்ன இப்படி அற்பத்தனமாக உளறுகிறாய்? நம் பெயர், நம் மக்களால்தான் விளங்குமென்பதில்லை! நாம் செய்யும் நல்ல செயல்களால்தான், நம் பெயரும் புகழும் பரவுகின்றன! எத்தனையோ மகா மேதைகள் இறந்து விட்டார்கள். அவர்கள் பெயரெல்லாம் அவர்கள் குழந்தைகளால்தான் விளங்குகிறதா? உண்மையைக் கூறப் போனால், பெயர் விளங்குவதற்கு நாம் செய்கின்ற நல்ல செயல்கள்தான் காரணம்!

ராமேஷ்வரி: யாருக்குக் குழந்தைகளில்லையோ, அவர்களுக்கு 'முக்தி' இல்லையென்று சாஸ்திரத்தில் எழுதியிருக்கிறது.

பாபு: முக்தியில் எனக்கு நம்பிக்கை இல்லை; இதுதான் முக்தி பெற வழி என்றால், மக்களைப் பெற்ற எல்லா மக்களும் முக்தியடைந்து விடுவார்களே! முக்தி பெற என்ன எளிமையான உபாயம்? உலகிலுள்ள மக்களைப் பெற்றவர்கள் அத்தனை பேருக்கும் முக்தி கிடைத்து விடுமே!

ராமேஷ்வரி, பதிலளிக்க முடியாது கூறினாள்: ''உங்களிடம் யார் வாதம் செய்வது? நீங்கள் உங்களுக்கு முன்னால் பிறரை மதிப்பதே இல்லை!''

[3]

மனிதனுடைய உள்ளம் 'தான்' என்னும் மோகம் கொண்டது. தன்னுடைய பொருளென்று எதையும் மனிதன் நினைத்தால், அந்தப் பொருள் எவ்வளவு உபயோகமற்ற பொருளாக இருந்தாலும் மனிதன் அதை நேசிக்கிறான். ஆனால் அழகான பொருளாக இருந்தாலும் சரி; உபயோகமுள்ள பொருளாக இருந்தாலும் சரி; அது 'பிறருடையது' என்ற எண்ணம் உண்டானால், அதை அவன் அவ்வளவாக நேசிப்பதில்லை. பிறருடைய பொருள் எவ்வளவு அழகாகத்தான் இருக்கட்டுமே; எவ்வளவு உபயோகமுள்ளதாகத்தான் இருக்கட்டுமே; எவ்வளவு விலை உயர்ந்த பொருளாகத்தான் இருக்கட்டுமே—அதை இழந்து விட்டால் மனிதன் அவ்வளவு வருந்துவதில்லை. ஏனெனில் அந்தப் பொருள் அவனுடையதல்ல; அது பிறருடைய சொத்து—என்ற ஒரே காரணம் தான்! 'தன்னுடைய பொருள்' எவ்வளவு சிறிய அற்பமான உபயோகமற்ற பொருளாக இருந்தாலும், அதை இழந்து விட்டதற்காக அவன் வருந்துகிறான். ஏன்? அது அவனுடைய சொந்த சொத்து! சிற்சில சமயங்களில், மனிதன் பிறருடைய பொருள்களையும் நேசிக்கத் தொடங்குகிறான்; ஆனால் அந்தப் பொருளைத் தனதாக்கிக் கொள்ளாத வரையில்; அந்தப் பொருளைத் 'தன்னு

"பார்த்தீங்களா; இந்த வருஷமும் பட்ஜெட்டிலே துண்டு விழுந்திருக்கு..."

"அதிருக்கட்டும்; பின்னாலே திரும்பிப் பாரய்யா!..."

டையது' என்று கருதாத வரையில் அவனுக்கு மகிழ்ச்சி ஏற்படுவதில்லை! 'தன்னுடையது' என்ற எண்ணத்தினுல் 'அன்பு' உண்டாகிறது; அன்பினுல் ஒரு பொருளை தன்னுடையதெனக் கருதுகிருன். 'தன்னுடையது' என்ற எண்ணத்திற்கும் 'அன்பு பாராட்டுவதற்கும்' நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இந்த இரண்டையும் பிரிப்பதென்பது அவ்வளவு எளிதல்ல.

ராமேஷ்வரிக்குத் தாயாகும் 'பாக்கிய' மில்லாவிட்டாலும், அவளுடைய உள்ளம் தாயாவதற்கேற்ற தகுதி உள்ளதாகத்தான் இருந்தது. தாயுக்கு உண்டாகும் எண்ணங்கள் தோன்ருமல் இல்லை; ஆனுல் அது பிரகாசம் அடையவில்லை. அவளுடைய உள்ளம் விதை விதைக்கப்பட்ட பூமி போன்றது; ஆனுல் அந்த விதைக்கு வேண்டியன தந்து, வளர்த்து, பூமியின் மேல் கொண்டுவர ஒருவரும் இல்லை. எனவே அவள் உள்ளம் குழந்தைகளை நோக்கி இழுக்கப்பட்டது; ஆனுல் அந்தக் குழந்தைகள் 'தன்னுடைய குழந்தைகளல்ல' என்ற எண்ணம் வரும்பொழுது, அவளுடைய உள்ளத்தில் அன்புக்குப் பதில் துவேஷம் தோன்றுகிறது; வெறுப்பு உண்டாகிறது. மேலும் 'தன்னுடைய கணவர், அந்தக் குழந்தைகளுக்காகத் தன் உயிரையே விடுகிருர்' என்று நினைக்கும்பொழுது; 'அந்தக் குழந்தைகள் தன்னுடையன அல்லவே' என்ற எண்ணம் ஏற்படும்பொழுது; இந்த வெறுப்பின் அளவு மேலும் அதிகரிக்கிறது.

மாலை நேரம்; ராமேஷ்வரி மொட்டை மாடியின்மீது காற்று வாங்கிக்கொண்டிருந்தாள். பக்கத்திலேயே மனேகரனின் தாயாகிய தேவராணியும் உட்கார்ந்திருந்தாள்.

இரண்டு குழந்தைகளும் மொட்டை மாடியில் ஓடி விளையாடிக்கொண்டிருந்தனர். ராமேஷ்வரி அவர்களுடைய விளையாட்டைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அந்த நேரத்தில் குழந்தைகளின் விளையாட்டு ராமேஷ்வரிக்கு நல்லதாகப்பட்டது. காற்றின்மேல் எழும் அவர்கள் பந்து, தாமரை மலர் போன்ற அவர்களின் சிறிய முகங்கள், அவர்களுடைய அன்பான மழலை மொழிகள், அவர்களின் கூச்சல், ஓடுதல், திரும்பி வருதல் முதலிய செய்கைகள்—யாவும் அவளுடைய உள்ளத்திற்கு மகிழ்ச்சி ஊட்டியது.

அதற்குள் மனேகரன் தன்னுடைய சகோதரியை அடிக்க ஓடினுன். அவள் உரக்க சிரித்துக்கொண்டு ஓடிவந்து ராமேஷ்வரியின் மடியில் அப்போது விழுந்தாள். அவளுக்குப் பின்னுலேயே, மனேகரனும் ஓடிவந்து அவள் மடியில் விழுந்தான். ராமேஷ்வரி அந்த சமயத்தில் எல்லா வெறுப்பையும் மறந்துவிட்டாள். அவள் அந்த இரண்டு குழந்தைகளையும் அப்படியே மார்பில் அணைத்துக்கொண்டாள்...அந்த நேரத்தில் அவள் உள்ளத்திலே அன்பு பெருகியது. அதே நேரத்தில் பிறர் யாராவது அவளைப் பார்த்தால் 'ராமேஷ்வரிதான் அந்தக் குழந்தைகளின் தாயார்' என்றுதான் நம்புவார்கள்.

இரண்டு குழந்தைகளும் வெகு நேரம் வரையில் அவள் மடிமீது விளையாடிக் கொண்டிருந்தன. திடீரென்று அந்த நேரத்தில்

..ரோ வரும் காலடி ஓசை கேட்டு குழந்தைகளின் தாயார் அங்கிருந்து எழுந்து சென்றுவிட்டாள்.

"மனேகர்! இந்தா இரயில் வண்டி!" என்று கூறிக்கொண்டே ராம்ஜிதாஸ் மொட்டை மாடியில் ஏறி வந்தார். அவரது குரலைக் கேட்டவுடனே இரண்டு குழந்தைகளும் ராமேஷ்வரியின் மடியிலிருந்து துள்ளிக் குதித்து வெளியே ஓடி வந்தனர். ராம்ஜிதாஸ் அவர்களிடம் அன்பாகப் பேசிக்கொண்டே உட்கார்ந்து ரெயில் வண்டி காட்டலானார்.

இங்கே ராமேஷ்வரியின் உறக்கம் கலைந்தது. குழந்தைகள் மேல் கணவனுக்குள்ள மோகம் கண்டு வயிறு எரிந்தது. குழந்தைகள்மீது மறுபடியும் பழைய வெறுப்பும் துவேஷமும் விழித்தெழுந்தது.

குழந்தைகளுக்கு இரயில் வண்டியைக் கொடுத்துவிட்டு பாபு, ராமேஷ்வரியின் அருகில் வந்து சிரித்துக்கொண்டே கூறினார்:

"இன்றைக்கு என்னவோ நீ குழந்தைகளிடத்தில் அன்பு பாராட்டிக் கொண்டிருந்தாய்! இதிலிருந்து இவர்களுக்கு உன் நெஞ்சில் சிறிது அன்பு அவசியமென்று தெரிகிறது!"

கணவனின் இந்த வார்த்தைகள், ராமேஷ்வரிக்கு நல்லதாகப் படவில்லை. அவள் தன்னுடைய இந்த பலகீனம் குறித்து வருத்தப்பட்டாள். துக்கம் மட்டுமல்ல; தன்மீதே அவளுக்குக் கோபமும் உண்டாகியது. கணவனின் இந்த வார்த்தைகளால் அவளுடைய கோபம் மேலும் அதிகரித்தது. அவளுடைய பலகீனம் அவளுடைய கணவன் மூலம் அவளுக்குத் தெளிவாகத் தெரிந்தது. எனவே இந்த வார்த்தைகள் அவளுக்குப் பொறுக்க முடியாதவைகளாக இருந்தன.

ராம்ஜிதாஸ் கூறினார்: "ஆசையினால்தான் தன்னுடைய குழந்தைகளைப்பற்றிச் சிந்திப்பதில் பயனில்லை எனக் கூறுகிறேன். இப்படியே இவர்களை நேசிக்க ஆரம்பித்தால், பிறகு இவர்களே உன்னுடைய குழந்தைகளாகவே தோன்ற ஆரம்பிப்பார்கள்! நீ இவர்களிடமிருந்து நேசிக்கக் கற்றுக் கொள்ளுகிறாய் என்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது."

இந்த வார்த்தைகளை பாபு தூய்மையான—அழுக்கேது மற்ற உள்ளத்தோடு கூறினார். ஆனால் ராமேஷ்வரிக்கு அவர் பரிகாசம் செய்வதுபோலிருந்தது அவள் கோபத்துடன் "என்ன கொடுமை! இவர்களுக்குச் சாவு வரமாட்டேன் என்கிறதே! செத்துத் தொலைந்தால் பாபம் கழியும்! எப்பொழுதும் கண் முன்னே இருப்பதால் அன்பு பாராட்டுமளவிற்கு ஆசை உண்டாகத் தானே செய்கிறது? அதனால் வயிறு இன்னும் பற்றி எரிகிறது!" என்று எண்ணினாள்.

தன் மனைவி பேசாமல் இருப்பதைப் பார்த்துவிட்டுக் கூறினார்: "இப்பொழுது வெட்கப்படுவதில் என்ன இலாபம்? தன்

னுடைய அன்பை மறைப்பது வீண்! அதை மறைக்க வேண்டிய அவசியமும் இல்லை!

ராமேஷ்வரி: நான் நேசிக்க எனக்கு என்ன வந்தது? உங்களுக்கே அந்தக் கருணை இருக்கட்டும்! துர்பாக்கியமாக நீங்களே வந்து பிரவேசித்து விட்டீர்கள். ஒரே வீட்டிலிருப்பதால் சிரித்துப் பேசத்தானே வேண்டியிருக்கிறது? முந்தாநாள் நான் கொஞ்சம் கீழே தள்ளியதற்கு நீங்களே நூறு பேச்சு பேசினீர்கள்!......

பாபுவுக்கு தன்னுடைய மனைவியின் வார்த்தைகளைக் கேட்டவுடன் கோபம் வந்தது. அவர் கரகரத்த குரலிலே கூறினார்: "இவள் எத்தகைய இருதயம் படைத்த பெண்! நான் வந்தவுடன் பச்சோந்திபோல் நிறம் மாறுகிறாள்...தன் இஷ்டத்திற்கு எது வேண்டுமானாலும் செய்கிறாள்; நாம் ஏதாவது கூறிவிட்டால் அவ்வளவுதான்! அவளுக்கு மட்டும் என்னுடைய வார்த்தைகளில் நஞ்சு கலந்திருக்கிறதோ?...நான் சொல்வதே குற்றமாகப் பட்டால் நான் ஏன் இனி ஏதும் பேசப் போகிறேன்?......"

ராமேஷ்வரி இதற்கு ஒன்றும் பதில் பேசவில்லை. அவளுடைய கோபம் தாபமெல்லாம் கண்ணீர் வழியே வெளியே வர ஆரம்பித்தது!

எவ்வளவுக் கெவ்வளவு குழந்தைகள்மீது பாபு ராம்ஜிதாசின் அன்பு அதிகரித்து வந்ததோ, அவ்வளவுக் கவ்வளவு ராமேஷ்வரியின் துவேஷ மனப்பான்மையும் வெறுப்பும் அளவு கடந்து அதிகரித்து வந்தது.

குழந்தைகளின் காரணமாக கணவனின் வெறுப்பு உண்டாவதைப் பார்த்த ராமேஷ்வரியின் உள்ளத்தில் புயல் வீசத் தொடங்கியது. அவள் சிந்திக்கலானாள்:

"பிறருடைய குழந்தைகள்மீது இவ்வளவு அன்பா? அவர்கள் மீது அன்பினால் என்னைக்கூடத் திட்டுகிறாரே! இவருக்குக் குழந்தைகளே சகலமும்; என்னைப்பற்றி இவருக்கு அக்கறையில்லை! உலகம் செத்துக்கொண்டிருக்கிறது...இந்த இரண்டு குழந்தைகளுக்கும் சாவு வரமாட்டேனென்கிறதே! இவர்கள் இல்லாவிட்டால் நான் ஏன் இவர்களைப் பார்க்கிறேன்? என்றைக்கு இவர்களுக்கு சாவு வருகிறதோ, அன்று தீபம் எரிப்பேன்! இவர்கள்தான் என் வீட்டை சர்வ நாசம் செய்துவிட்டார்கள்!"

[4]

இப்படியே சிறிது நாள் கழிந்தது. ஒரு நாள் வழக்கம்போல மொட்டை மாடியில் ராமேஷ்வரி உட்கார்ந்திருந்தாள். அவள் உள்ளத்தில் அனேக கவலைகள் தோன்றின. குழந்தைகள் இல்லையே என்ற கவலை ஒருபுறம்; தன் கணவன் அவருடைய சகோதரன் குழந்தைகள்மீது உயிரையே விடுகிறாரே என்ற கவலை மற்றொரு புறம்—இதைத் தவிர அவளுக்கு வேறென்ன கவலை இருக்க முடியும்? இந்தக் கவலைகளினால் அவளுடைய உள்ளம் வருந்தியது. அப்பொழுது கவனத்தை வேறு பக்கம் திருப்ப எண்ணி எழுந்து உலாவலானாள்.

இப்படி உலாவிக் கொண்டிருக்கும்பொழுது, மனோகரன்